The Dravidian Book Depôt Publication

ஸ்ரீ

பரமபதிதுணை.

அமுதசாகரர் என்னும்

ஆசிரியரா லியற்றப் பெற்ற

# யாப்பருங்கலக் காரிகை

மூலமும்,

அதற்குக்

நணசாகரர் என்னும் ஆசிரியரா லியற்றப்பெற்ற

# உரையும்.

—:※:—

இவை

தமிழ்ப்பண்டிதர்

ம-ள-ள-ஸ்ரீ,

கா. ர. கோவிந்தராஜ முதலியாரால்

பரிசோதிக்கப்பெற்று,

அவராலெழுதப்பெற்ற

குறிப்புரையோடும், அநுபந்தத்தோடும்

சென்னை, வேப்பேரி

ராமநிலய விவேகானந்த முத்திராக்ஷரசாலையில்

... பெற்றன.

—

...8.

T019099

arasvati Mahal Library

ஸ்ரீ

# முகவுரை.

"யாப்பருங்கலக்காரிகை" என்பது யாப்பருங்கலம் + காரிகை எனப்பிரிக்கப்படும்.

இவற்றுள், யாப்பருங்கலம் என்பது யாப்பு, அருமை, கலம் என்னு மூன்று சொல் இரண்டு சந்தியாலாகிய சொற்றொடர்.

யாப்பு-விகுதிபெற்ற தொழிற்பெயர்; இதில் யா-பகுதி. ப்-சந்தி பு-விகுதி. கட்டுதல் என்பது அதன்பொருள்; அது தொழிலாகு பெயராய்க் கட்டுதலாலாகிய செய்யுளை யுணர்த்தியது. அது காரியவாகு பெயராய் அதனை யுணர்த்தும் இலக்கணத்தை யுணர்த்தியது. இங்ஙனமாதலின் அஃது இருமடியாகு பெயர். அருமை-சிறப்பு, மேன்மை. கலம்-கப்பல்.

இச்சொற்றொடரிலுள்ள சந்திகள் இரண்டனுண் முன்னது யாப்புக்கு அருங்கலம் எனவிரிதலின் நான்காம் வேற்றுமைத்தொகை. பின்னது அருமையாகிய கலம் போல்வது என விரிதலின் பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இவ்வாறாகிய யாப்பருங்கலம் என்பது யாப்பை யுணர்த்தும் ஓர் நூலுக்குக் காரணக் குறியாயிற்று. என்னெனின், அந்நூல் யாப்பிலக்கணத்தின் பரப்பைக்கடத்தற்கு நீரின் பரப்பைக் கடத்தற்குதவுங் கலம்போல்வதாயிருத்தலினென்பது. யாப்பிலக்கணத்தின் பரப்பைக் கடத்தலாவது விரிந்துள்ள யாப்பிலக்கண வகைகளை எளிதினுணர்தல். கலம்-ஆபரணம் எனக்கொண்டு அதற்கேற்பப் பொருள் கூறுவாருமுண்டு.

இங்ஙனமாகிய யர்ப்பருங்கலம் என்பது ஒரு சொன்னீர்மைத்தாய் நிற்ப, அதனோடு காரிகை என்பது சேர்ந்து இரண்டு சொல் ஒரு சந்தியாலாகிய சொற்றொடராயிற்று. அது விரிக்கப்படும்போது யாப்பருங்கலத்திற்கு அங்கமாகச் செய்யப்பட்ட காரிகை என விரிதலின் நான்காம் வேற்றுமை உருபயனுமுடன்றொக்கதொகை. இதிற் காரிகை என்பது கருவியாகுபெயாராய் இந்நூலை யுணர்த்தியது. சினையாகு பெயரெனினுமாம். காரிகை-கட்டளைக்கலித்துறை.

இதிற் காரிகை என்பதற்குப் பெண் எனவும் ஒருபொருண்மையின் இதற்குத் தொழிலின் வளப்பத்தினையுடைய மேன்மையாகிய ஆப

ணரத்தையணிந்த பெண் என ஒருவாறு சொன்னயங்கொண்டொரு பொருள் கூறுதலுமாம்.

இந்நூலின் ஆசிரியர் அமுதசாகரர் என்பது "கந்தமடிவில்" என்னும் இந்நூலின் முதற்காரிகையினடியில் எழுதப்பெற்றுள்ள உரை நடைப்பாயிரத்தால் நன்கு விளங்குகின்றது.

இவரது காலம் இன்னதென நன்ருய்ப் புலப்படவில்லை; ஆயினும், சற்றேறக்குறைய ஆயிரவருடங்களுக்கு மேற்பட்டிருக்கலாமெனச் சிலர் கருதுகின்றனர்.

இவர் "கந்தமடிவில்" என்னு முதற்காரிகையில், அருகக்கடவுளுக்கு வணக்கங்கூறி இருத்தலாற் சமணசமயத்தவரென்பது தெளிவாம்.

இவருக்கு அவ்வுரை நடைப் பாயிரத்தில் "ஆரியமென்னும் பாரிரும் பௌவத்தைக்காரியாக்கித் தமிழ்ப்படுத்திய" எனக் கொடுக்கப்பெற்றுள்ள விசேஷணத்தால் இவர் வடமொழியினின்றும் ஏதோ ஒரு பெரிய நூலைத் தமிழிற் காரிகையி னுருவமாக மொழிபெயர்த்துப் பாடியிருக்கின்றனரெனத் தோன்றுகின்றது. அன்றியும்,

" யாப்பருங் கலநனி யாப்புற வகுத்தோன்
றனக்குவரம் பாகிய தவத்தொடு புணர்ந்த
குணக்கடற் பெயரோன் கொள்கையின் வழாஅத்
துளக்கறு கேள்வித் துகடீர் காட்சி
அளப்பருங் கடற்பெய ரருந்தவத் தோனே "

என்னும் யாப்பருங்கலச் சிறப்புப் பாயிரத்தானும், அந்நூலின் சீரோத்திலுள்ள

" விரவியு மருகியு வேறு மொரோவழி
மருவியும் பெறூஉ வழங்கு மன்னவையே "

என்னுஞ் சூத்திரவுரையில் "இந்நூலுடையாரும் 'மாஞ்சீர் கலியுட்புகா' என்னும்புறனடையானும், பிறவாற்ருனும்...விளங்கக்கூறினர்" என்றெழுதப்பெற்றிருத்தலானும் யாப்பருங்கலஞ் செய்த ஆசிரியரும் இவரேயெனத் தோன்றுகின்றது.

மேற்காட்டிய அவ்வியாப்பருங்கலச் சிறப்புப்பாயிரத்துள்
" குணக்கடற் பெயரோன் கொள்கையின் வழாஅத்
துளக்கறு கேள்வித் துகடீர் காட்சி
அளப்பருங் கடற்பெய ரருந்தவத் தோனே "

என இவரைப்பற்றிக் கூறியிருத்தலானும், அக்குணசாகரரே இந்நூலுக்கு உரையெழுதி யிருத்தலானும் இவ்விரு ஆசிரியர்களுஞ் சமகாலத்திருந்தவர்களென்பது புலனும்.

இந்நூலாசிரியரைப்பற்றி மேற்காட்டிய பாயிரத்துள் "குணக் கடற் பெயரோன் கொள்கையின் வழஅ......அளப்பருங் கடற்பெய ரருந்தவத்தோனே" எனக் கூறியிருத்தலும், குணசாகரர் இந்நூலுரையில் "அருந்தவத்துப் பெருந்தன்மை அமுதசாகரர்" எனக்கூறி யிருத்தலும் இவ்விரு ஆசிரியர்களும் ஒத்த கருத்துடைய நண்பின ரென்பதை நன்கு தெரிவிக்கின்றன.

இந்நூலாசிரியர் பண்டைய யாப்பிலக்கணங்களாகிய கரும்பு களைத் தமது மனமாகிய ஆலையிலிட்டு ஆட்டி அந்நூற்களின் சாரமாகிய சாற்றினைக்கொண்டு இந்நூலாகிய கட்டியினை இனிது செய்து தந்தனர். இந்நூலுரையாசிரியர், செய்யுள் வகைகளை நன்குணரவும், செய்புளியற்றவும் வேட்கையுடைய மாணவர்களாகிய விருந்தினர் பருகிக் களிகொள்ளும்படி அக்கட்டியினைத் தமது உரையாகிய பாலுடன் சேர்த்துத் தந்தனர்.

தமிழ் இலக்கணங்கள் ஐந்தனுள் எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமுங் கற்பார் நன்னூலும், அகமும், புறமாயுள்ள பொருளிலக்கணங் கற்பார் முறையே நாற்கவிராஜ நம்பி யகப்பொருளும், புறப்பொருள் வெண்பா மாலையும், அணியிலக்கணங் கற்பார் தண்டியலங்காரமும் பயின்று வருதல்போல யாப்பிலக்கணங் கற்பார் யாப்பருங் கலக் காரிகையே நெடுங்காலமாகப் பயின்று வருகின்றனர்.

இங்ஙனம் யாப்பிலக்கணங் கற்பார் யாவராலும் இதுவே பெரிதும் பராட்டப் பெற்றுவருதற்குக் காரணம் இந்நூலின் சூத்திரங்கள் "சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச் செவ்வனடியிற் செறித்தினிது விளக்கித்திட் பஞ்செறிந்து" கற்பார்க்குப் பெரிதும் இன்பம் பயந்துநிற்றலே யாமெனபது. இந்நூலைப்பற்றிக் கூறப்படும்,

"காரிகைகற்றுக் கவிபாடுவதினும்
பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்றே"

என்னும் பழமொழியைக் கொண்டு சிலர் இதனைக் கற்றுணர்தல் மிகவும் அருமையாமென்று கூறுவர். அப்பழமொழியின் கருத்து அதுவன்று. அதற்கு எனதருமை நண்பராகிய ம-௱-௱-ஸ்ரீ, **T. பக்தவத்ஸலம் பிள்ளை B. A.** அவர்கள் ஓருரை கூறினர். அதுவே அப்பழமொழியின் கருத்துரையாகும். அதாவது இயற்கையிற் கவிவளம்பெறு தவராய்க் காரிகைகற்று அத்திறத்தான் கவிபாடப் புகுவாரினும், பேரிகை கொட்டுகிற்போர் தமக்கும் பிறர்க்கும் பயனுடையவராவர் என்பது. ஆயின் இந்நூலைக் கற்பதனாற் பயன் என்னெனின் அவ்வியற்கைக் கவிவளத் தினைவளர்த்தலும், பண்டைய நூற்களிலுள்ள செய்யுள்வகைகளை நன்குணர்தலுமாம்.

இந்நூலின் முதல் 32 பக்கங்கள் பச்சையப்பன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ம-௱-௱-ஸ்ரீ வித்துவான். P. கிருஷ்ணசாமி முதலியார் அவர்களால் பரிசோதிக்கப் பெற்றன. அவர்கட்குச் சாவகாசமின்மையின் அவர்கள் இத்தனைப்பரிசோதித்துத்தரப்பல நாட்களாதலைக்கண்டு இதனை அச்சிற் பதிப்பிக்கப்புக்கார் நிறுத்திவைத்தனர். பிறகு அவர் என்னை யழைத்து மற்றைய பாகங்களையும் பரிசோதித்தருக வென, யான் மேற்படி கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள் அநுமதியைப் பெற்று இதனைப் பரிசோதித்து முடித்தனென். யானிதனைப் பரிசோதித்தற்கு உதவியாகக்கொண்ட நூல்கள், தொல்காப்பியமும், இலக்கண விளக்கமும், யாப்பருங் கலச்சூத்திரமும், சிதம்பரச் செய்யுட்கோவையுமாம். ம-௱-௱-ஸ்ரீ வித்துவான் தி. அ. க. அமிர்தம்பிள்ளை யவர்களாலியற்றப் பெற்ற யாப்பிலக்கண விளக்க வினாவிடையும் பெரிதும் உதவி புரிவதாயிற்று. இந்நூலில் 170 பக்கங்கள் வரையினும் அச்சானபிறகு இந்நூலின் ஏட்டுப்பிரதி யொன்று கிடைத்தது. எஞ்சிய பக்கங்களைப் பரிசோதித்தற்கு அதுவே பெரிதும் உதவியது. 178-வது பக்கத்திலுள்ள குறிப்புரையைக் காணின் அது நன்குவிளங்கும். இந்நூன் முற்றும் அச்சானபிறகு யாப்பருங் கலவிருத்தி யுரையின் கையெழுத்துப் பிரதியொன்று கிடைத்தது. ஆதலின் அஃது இம்முகவுகவுரை யெழுதுதற்கு மாத்திரஞ் சிறிது உதவியது. எனக்கு இக்காரிகையில் இதனைக்கற்கையில்

விளங்காமலிருந்த சிலவிஷங்கள் இதனைப் பரிசோதிக்கையில் நன்கு விளங்கின. ஆயினும் இருபுறவாழ்த்து, இருபுறவசை என்னும் இவைகள் மாத்திரம் நன்கு விளங்கிற்றில.

மூதறிஞர்களே மேற்கொள்ளக்கூடிய இக்காரியத்தைச் சிற்றறிவாளனாகிய யான் மேற்கொண்ட குற்றத்திற்காக என்னை முனியாது பொறுத்தருளி எனக்கு இன்னும் இதுபோன்ற பல நூற்களைப் பரிசோதித்துப் பதிப்பிக்கத்தக்க ஆற்றலுண்டாகும்படி ஆசிபுரிந் தருள்வார்களாக வென யான் மிக்க பணிவுடன் அப்பெரியாரைப் பலவும் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,

**கா. ர. கோ.**

# விஷய சூசிகை.

## யாப்பருங்கலக் காரிகையின் இயல்கள்—3.


1. உறுப்பியல்
2. செய்யுளியல்
3. ஒழிபியல்


## 1. உறுப்பியல். 1 — 51


I. எழுத்து
II. அசை
III. a. சீர்
b. பாக்களின் சிறப்புச் சீர்களும், பொதுச்சீர்களும்
IV. தளை
V a அடி
b நாற்பாவிற்குமுரிய அடியின்சிறுமையும், பெருமையும்
VI. தொடை


## I. எழுத்து—13.


1. குறில்
2. நெடில்
3. ஆவி (உயிர்)
4. குற்றியலிகரம்
5. குற்றியலுகரம்
6. ஐகாரக்குறுக்கம்
7. ஆய்தம்
8. மெய்
9. உயிர்மெய்
10. வல்லினம்
11. மெல்லினம்
12. இடையினம்
13. அளபெடை
{ உயிரளபெடையும் / ஒற்றளபெடையும் }


## II. அசை—2.


1. நேரசை
2. நிரையசை


## III. சீர்—5.


1. இயற்சீர்
2. வெண்சீர்
3. வஞ்சிச்சீர்
4. பொதுச்சீர்
5. அசைச்சீர்


## IV. தளை—7.


1. நேரொன்றாசிரியத்தளை
2. நிரையொன்றாசிரியத்தளை
3. இயற்சீர்வெண்டளை
4. வெண்சீர்வெண்டளை
5. ஒன்றியவஞ்சித்தளை
6. ஒன்றாதவஞ்சித்தளை
7. கலித்தளை

## V. அடி--5.

1. குறளடி
2. சிந்தடி
3. அளவடி
4. நெடிலடி
5. கழிநெடிலடி

## VI. தொடை—43.

### a. மோனைத்தொடை—8.

1. அடிமோனைத்தொடை
2. இணைமோனைத்தொடை
3. பொழிப்புமோனைத்தொடை
4. ஒரூஉமோனைத்தொடை
5. கூழைமோனைத்தொடை
6. மேற்கதுவாய் மோனைத்தொடை
7. கீழ்க்கதுவாய் மோனைத்தொடை
8. முற்றுமோனைத்தொடை

### b. இயைபுத்தொடை 8.

1. அடியியைபுத்தொடை
2. இணையியைபுத்தொடை
3. பொழிப்பியைபுத்தொடை
4. ஒரூஉவியைபுத்தொடை
5. கூழையியைபுத்தொடை
6. மேற்கதுவாயியைபுத்தொடை
7. கீழ்க்கதுவாயியைபுத்தொடை
8. முற்றியைபுத்தொடை

### c. எதுகைத்தொடை—8.

1. அடியெதுகைத்தொடை
2. இணையெதுகைத்தொடை
3. பொழிப்பெதுகைத்தொடை
4. ஒரூஉவெதுகைத்தொடை
5. கூழையெதுகைத்தொடை
6. மேற்கதுவாயெதுகைத்தொடை
7, கீழ்க்கதுவாயெதுகைத்தொடை
8. முற்றெதுகைத்தொடை

### d. முரண்டொடை—8.

1. அடிமுரண்டொடை
2, இணைமுரண்டொடை
3. பொழிப்புமுரண்டொடை
4. ஒரூஉமுரண்டொடை
5. கூழைமுரண்டொடை
6. மேற்கதுவாய்முரண்டொடை
7. கீழ்க்துவாய்முரண்டொடை
8. முற்றுமுரண்டொடை

### e. அளபெடைத்தொடை—8.

1. அடியளபெடைத்தொடை
2. இணையளபெடைத்தொடை
3. பொழிப்பளபெடைத்தொடை
4. ஒரூஉவளபெடைத்தொடை
5. கூழையளபெடைத்தொடை
6. மேற்கதுவாயளபெடைத்தொடை
7. கீழ்க்கதுவாயளபெடைத்தொடை
8. முற்றளபெடைத்தொடை

f-அந்தாதித்தொடை. g-இரட்டைத்தொடை. h-செந்தொடை. 3.

## 2. செய்யுளியலில் 51—127


I. அவ்வப்பாவிற்குரியஅடி
II. ஓசை
III. பா
VI. பாவினம்
V. மருட்பா


### I.—அவ்வப்பாவிற்குரிய அடி


1. வெண்பாவிற்குரிய அடி
2. ஆசிரியப்பாவிற் குரிய அடி
3. கலிப்பாவிற்குரிய அடி
4. வஞ்சிப்பாவிற்குரிய அடி


### II. ஓசை—4.


1. செப்பலோசை
2. அகவலோசை
3. துள்ளலோசை
4. தூங்கலோசை


#### 1. செப்பலோசை


a. ஏந்திசைச் செப்பல்
b. தூங்கிசைச் செப்பல்
c. ஒழுகிசைச்செப்பய்


#### 2. அகவலோசை


a. ஏந்திசையகவல்
b. தூங்கிசையகவல்
c. ஒழுகிசையகவல்


#### 3. துள்ளலோசை


a. ஏந்திசைத்துள்ளல்
b. அகவற்றுள்ளல்
c. பிரிந்திசைத்துள்ளல்


#### 4. தூங்கலோசை


a. ஏந்திசைத் தூங்கல்
b. அகவற்றூங்கல்
c. பிரிந்திசைத் தூங்கல்


### III. பா—4.


1. வெண்பா
2. ஆசிரியப்பா
3 கலிப்பா
4. வஞ்சிப்பா


#### 1. வெண்பா


a. குறள்வெண்பா
b. நேரிசை வெண்பா
a. இன்னிசை வெண்பா
d. பஃறொடை வெண்பா
e. நேரிசைச் சிந்தியல் வெண்பா
f. இன்னிசைச் சிந்தியல் வெண்பா

### 2. ஆசிரியப்பா

a. நேரிசை யாசிரியப்பா
b. இணைக்குற ளாசிரியப்பா
c. நிலைமண்டில வாசிரியப்பா
d. அடிமறிமண்டிலவாசிரியப்பா

### 3. கலிப்பா

a. நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா
b. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா
c. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா
d. கலிவெண்பா
e. வெண்கலிப்பா
f. தரவு கொச்சகக் கலிப்பா
g. தரவிணைக் கொச்சகக்கலிப்பா
h. சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா
i. பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா
j. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

### 4. வஞ்சிப்பா

a. குறளடி வஞ்சிப்பா
b. சிந்தடி வஞ்சிப்பா

## IV. பாவினம்.

### குறள் வெண்பாவின் இனம்—2.

1. குறட்டாழிசை
2. வெண் செந்துறை

### மற்றைய வெண்பாக்களின் இனம்—3.

1. வெண்டாழிசை
2. வெண்டுறை
3. வெளி விருத்தம்

### ஆசிரியப்பாவின் இனம்—3.

1. ஆசிரியத் தாழிசை
2. ஆசிரியத்துறை
3. ஆசிரிய விருத்தம்

### கலிப்பாவின் இனம்—3.

1. கலித்தாழிசை
2. கலித்துறை
3. கலி விருத்தம்

### வஞ்சிப்பாவின் இனம்—3.

1. வஞ்சித்தாழிசை
2. வஞ்சித்துறை
3. வஞ்சி விருத்தம்

## V. மருட்பா—4

1. புறநிலை வாழ்த்து மருட்பா
2. கைக்கிளை மருட்பா
3. வாயுறை வாழ்த்து மருட்பா
4. செவியறிவுறூஉ மருட்பா

## 3-ஒழிபியல் 128 –196

I. யாப்பிலக்கணத்திற்கே சிறப்பானவை
II. எல்லா நூற்கும் பொதுவானவை

### I. யாப்பிலக் கணத்திற்கே சிறப்பானவை

1. எழுத்துக்குப் புறனடை
2. அசைக்குப் புறனடை
3. சீர்க்குப் புறனடை
4. தளைக்குப் புறனடை
5. அடிக்குப் புறனடை
6. வேறுவகையான தொடை விகற்பங்கள்
7. வேறுவகையான எதுகையும், மோனையும்
8. மருட்செந்தொடை
9. தரவு தாழிசைகட்கு அடி வரையறை
10. கூன்
11. விகாரம்
12. வகையுளி
13. வாழ்த்து
14. வசை
15. வனப்பு
16. பொருள்கோள்
17. குறிப்பிசை
18, ஒப்பு
19. வண்ணம்
20. புணர்ந்துரை
21. அடியின்றி நடப்பன

### II. எல்லா நூற்கும் பொதுவானவை

1. மூவகைநூல்
2. நால்வகைப்பயன்
3. எழுவகையாசிரியர் மத விகற்பம்
4. பத்துவகைக் குற்றம்
5. பத்துவகைக் குணம்
6. பதின்மூன்று வகையுரை
7. முப்பத்திரண்டு தந்திர உத்தி
8. அறுவகைக்குற்றம்

#### a. ஆநந்தக்குற்றம்.

1. எழுத்தாநந்தம்
2. சொல்லாநந்தம்
3. இறப்பவிழிந்தஆநந்த உவமை
4. இறப்ப உயர்ந்த ஆநந்த உவமை

#### b. அடுத்துவரலுவமை என்னும் அலங்காரக் குற்றம்.

உ

கடவுள் துணை.

# யாப்பருங்கலக்காரிகை

## மூலமும் உரையும்.

### பாயிரம்.

1. கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழற்கீழ்
எந்த மடிக ளிணையடி யேத்தி யெழுத்தசைசீர்
பந்த மடிதொடை பாவினங் கூறுவன் பல்லவத்தின்
சந்த மடிய வடியான் மருட்டிய தாழ்குழலே.

என்பது காரிகை. நூலுரைக்குமிடத்து நூற்பெயரும், காரணமும், ஆக்கியோன் பெயரும், அளவும், பயனும், உரைத்துரைக்கற்பாற்று. அற்றேல், இந்நூ லென்ன பெயர்த்தோவெனின், பாளித்தியமென்னும் * பாகதவிலக்கணமும் பிங்கலமென்னுஞ் சந்தோபிசிதமும்போலக் காரிகையாப்பிற்றாய்க், குணகாங்கியமென்னுங் கருநாடகச்சந்தமேபோல மகடூஉமுன்னிலைத்தாய் அவையடக்கமு முடையதாய், மயேச்சுரர் யாப்பேபோல உதாரணமெடுத்தோதி, இசைத்தமிழ்ச் செய்யுட்டுறைக்கோவையேபோலவும் அருமறை யகத்தட்டகவோத்தின்வருக்கக்கோவையேபோலவும் உரூபாவதாரத்திற்கு நீதகச்சுலோகமேபோலவும் முதனினைப் புணர்த்திய விலக்கியத்ததாய், வேதத்திற்கு நிருத்தமும் வியாகரணத்திற்குக் காரிகையும் அவிநயர்யாப்பிற்கு நாலடி நாற்பதும் போல யாப்பருங்கலமென்னும் யாப்பிற்கங்கமாய், அலங்காரமுடைத்தாகச் செய்யப்பட்டமையால் யாப்பருங்கலக்காரிகை யென்னும் பெயர்த்து.

---

* பாகதம் என்பது வடமொழிச் சிதைவு.

இந்நூல் யாதுகாரணமாகச் செய்யப்பட்டதோவெனின், பண்டையோருரைத்த தண்டமிழ்யாப்பிற் கொண்டிலாத குறியினோரைக் குறிக்கொளுவுதல் காரணமாகவும், தொல்லைப்பனுவற் றுணிபொரு ளுணர்ந்த நல்லவையோரை நகுவிப்பது காரணமாகவுஞ் செய்யப்பட்டது.

இந்நூல் யாவராற் செய்யப்பட்டதோவெனின், ஆரியமென்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமுதசாகர ரென்னும் ஆசிரியராற் செய்யப்பட்டது.

இந்நூலெவ்வளவைத்தோவெனின், இயல்வகையான் மூன்றும், காரிகைவகையா னாற்பத்துநான்கும், கிரந்தவகையாற் றெண்ணூறு கிரந்தமு மிருபத்தெட்டெழுத்து மெனக்கொள்க. அவற்றுள், ஒரு கிரந்தமாவது ஒற்றொழித்து உயிரும் உயிர்மெய்யுமாகிய முப்பத்திரண்டெழுத்தாமெனக்கொள்க. அவற்றுள், நேரசை முதலாகியகாரிகை இருபத்தொன்றும், நிரையசை முதலாகிய காரிகை இருபத்துமூன்று மெனக்கொள்க. நேரசை முதலாகிய காரிகையொன்றினுக்கு எழுத்தறுபத்துநான்கும், நிரையசை முதலாகிய காரிகை யொன்றினுக்கு எழுத்தறுபத்தெட்டு மெனக்கொள்க. இவ்விரு திறமுங் கூட்டியுறழ இரண்டாயிரத்துத் தொளாயிரத்தெட்டெழுத்தா மெனக்கொள்க. நேரசைமுதலாகிய காரிகை யொற்றொழித் தோரடிக் கெழுத்துப் பதினாறும், நிரையசை முதலாகிய காரிகை யொற்றொழித் தோரடிக் கெழுத்துப் பதினேழுமெனக் கொள்க.

**என்னை :—**

"அடியடி தோறு மைஞ்சீ ராகி
முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்கா யாகி

நேர்பதி னூறே நிரைபதி னேழென்
றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே" என்றாராகலின்.

இந்நூலாற் பயன் யாதோவெனின், யாப்பாராய்தல் பயன்.

யாப்பாராயவே, பா-தாழிசை-துறை-விருத்தங்களா லாக்கப்பட்ட அறம் பொரு ளின்பம் வீடென்னு மவற்றின் மெய்ம்மையறிந்து விழுப்பமெய்தி இம்மை மறுமை வழு வாம னிகழ்வாராதலின் இருமைக்கும் உறுதிபயப்பது யாப் பெனக் கொள்க.

[யாப்பெனினும், பாட்டெனினும், தூக்கெனினும், தொடர் பெனினும், செய்யுளெனினுமொக்கும்.]

என்னை:—

"யாப்பும், பாட்டுந் தூக்குந் தொடர்புஞ் செய்யுளை
நோக்கிற் றென்ப நுணங்கி யோரே" என்றாராகலின்.

இந்நூல் உறுப்பியலும், செய்யுளியலும், ஒழிபியலும் என மூவகைப்படும். அவற்றுள்—இவ்விய லென்ன பெயர்த் தோவெனின், எழுத்தும்-அசையும்-சீரும்-தளையும்-அடி யும்-தொடையும் என்னும் ஆறுறுப்பினையு முணர்த்திற்றாத லான் உறுப்பியலென்னும் பெயர்த்து. இவ்வியலுள், இத் தலைக்காரிகை என்னுதலிற்றோவெனின் தற்சிறப்புப் பாயிர முணர்த்துதனுதலிற்று.

என்னை:—

"வணக்க மதிகார மென்றிரண்டுஞ் சொல்லச்
சிறப்பென்னும் பாயிர மாம்"

"தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளு
மெய்த வுரைப்பது தற்சிறப் பாகும்" என்றாராகலின்.

## பொழிப்புரை.

"கந்தமடிவில்...தாழ்குழலே" என்பது. - முருகுவிரியு மொய்ம்மலரசோகின் கீழிருக்கும் அருகனதடி வணங்கி, எழுத்தும் - அசையும் - சீரும் - தளையும் - அடியும் - தொடையும் - பாவும் - பாவினமு மர்மாறுரைப்பன்: தளிர்புரையுஞ் சிறுமெல்லடித் தகைநெடுங்குழற்றையலாய்! என்றவாறு. இஃது பொழிப்புரையெனக்கொள்க.

என்னை :—

"பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப்
பிண்ட மாகக் கொண்டுரைப் பதுவே" என்றாராகலின்.

'கந்தமடிவில்...இணையடியேத்தி' என வணக்கஞ்சொல்லப்பட்டது. 'எழுத்து...இனங் கூறுவன்' என அதிகாரங் கூறப்பட்டது.

என்னை :—

"வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து
மங்கல மொழிமுதல் வகுத்தெடுத்துக் கொண்ட
விலக்கண விலக்கிய
மிடுக்க ணின்றி யினிது முடியும்"

என்பவாகலின் ஈண்டு வணக்கஞ் செய்யப்பட்டது.

இனி எழுத்து முதலாகிய எட்டனையும் காரணக்குறியான் வழங்குமாறு.

என்னை :—

"எழுதப் படுதலி னெழுத்தே: அவ்வெழுத்
தசைத்திசை கோடலி னசையே: அசையியைந்து
சீர்கொள நிற்றலிற் சீரே: சீரிரண்டு
தட்டு நிற்றலிற் றளையே: அத்தளை
யடுத்து நடத்தலி னடியே: அடியிரண்டு

* தொடுத்தன் முதலாயின தொடையே: அத்தொடை
பாவி நடத்தலிற் பாவே: பாவொத்
† தினமா நடத்தலி னினமெனப் படுமே" எனவரும்.

[பந்தமெனினும், தளையெனினுமொக்கும்.]

என்னை :—

"பகுத்தெதிர் நிற்றலிற் பந்தந் தளையென
வகுத்தனர் மாதோ வண்டமி ழோரே" என்றாராகலின்.

'பல்லவத்தின் சந்தமடிய வடியான் மருட்டிய தாழ் குழலே' என்பது மகடூஉ முன்னிலை. ஏகாரம்-ஈற்றசை.

## அவையடக்கம்.

2. தேனார் கமழ்தொங்கன் மீனவன் கேட்பத்தெண் ணீரருவிக்
காணர் மலயத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்
யானு நடாத்துகின் றேனென் றெனக்கே நகைதருமால்
ஆனு வறிவி னவர்கட்கென் னுங்கொலென் னுதரவே.

இ-கை. நூலினது பெருந்தன்மையும், ஆசிரியரது பெருந்தன்மையும், தனதுள்ளக்குறையு முணர்த்திய முகத்தான் அவையடக்க முணர்த்து-ற்று.

இதன்பொருள். தேனிறைந்த மணங்கமழ்கின்ற வேப்பமாலையைத் தரித்த பாண்டியன்கேட்கத், தெளிந்த அருவிநீரையுடைய சந்தனச்சோலை சூழ்ந்த பொதியமலையி லெழுந்தருளியிருக்கின்ற அரிய தவத்தினையுடைய முதலாசிரியராகிய அகத்தியமுனிவரால் அருளிச்செய்யப்பட்ட அழிவின்றிநிலைபெற்ற முத்தமிழுள் இயற்றமிழின் கூறாகிய யாப்பிலக்கண நூலை யானும் அவாவினுல் எனது புல்லிய நாவைக்கொண்டு

---

* தொடுத்துமன் சேறலிற் றொடையே: } இலக்கண விளக்கம்.
† இனமா வழங்கலின் இனமெனப்படுமே: }

சொல்லத்தொடங்கினேன். இது அறிவிலியாகிய எனக்கே நகையினை விளைக்குமாயின், குறைவில்லாத அறிவினையுடையவர்க்கு யாதாகுமோ எ-று.

ஏ-அசைநிலை. இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. 'யானுநடாத்துகின்றேன்' என்பதற்கு வேறுபொருள் கூறுவாருமுளர்.

3. சுருக்கமில் கேள்வித் துகடீர் புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொரு டானும் விழுப்பொரு ளாம்பனி மாலிமயப்
பொருப்பகஞ்சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும்பொன்னிறமாய்
இருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றேயிவ் விருநிலமே.

இ-கை. புலவரது சிறப்புணர்த்திய முகத்தான் அவையடக்க முணர்த்து-ற்று.

இ-ள். பனிதோய்ந்த நெடிய விமயவரையிடத்தைச் சேர்ந்த இழிவாகிய கரியகாக்கைப்புள்ளும் பொன்னிற முற்றிருக்குமென்று பரந்த விவ்வுலகத்தவர் சொல்வர். இவ்வாறே குற்றந்தீர்ந்த அளவில்லாத நூற்கேள்வியையுடைய புலவர்க்குமுன் குற்றமுடைய வறிவில்லாதயான் கூறிய சிறப்பில்லாத பிண்டப்பொருளும், சிறந்த நுண்பொருளாம் எ-று. அன்று-ஓ-ஏ-அசைநிலை.

பாயிர முற்றிற்று.

முதலாவது

# உறுப்பியல்

## எழுத்து.

4. குறினெடி லாவி குறுகிய மூவுயி ராய்தமெய்யே
மறுவறு மூவின மைதீ ருயிர்மெய் மதிமருட்டும்
சிறுநுதற் போமாக் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்
அறிஞ ருரைத்த வளபு மசைக்குறுப் பாவனவே.

இ-ளை. மேலதிகாரம் பாரித்தவெட்டனுள் அசைக் குறுப்பா மெழுத்துகளது பெயர்வேறுபா டுணர்த்து-ற்று.

### குறில்.

இதன்பொருள். குறிலாவன :—அ-இ-உ-எ-ஒ-என விவை.

என்னை :—

"அ-இ-உ, எ-ஒ வென்னு மப்பாலைந்து
மோரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப" என்றாராகலின்.

### நெடில்.

நெடிலாவன :—ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-ஔ-எனவிவை.

என்னை :—

"ஆ-ஈ-ஊ-ஏ, ஐ-ஓ-ஔவெனு மப்பாலேழு
மீரள பிசைக்கு நெட்டெழுத் தென்ப" என்றாராகலின்.

### ஆவி (உயிர்).

ஆவியாவன :—அகாமுதல் ஔகார மீறாய்க்கிடந்த பன் னிரண்டெழுத்துமெனக்கொள்க.

என்னை :—

"அகர முதல ஔகார விறுவாய்ப்
பன்னீ ரெழுத்து முயிரென மொழிப" என்றாராகலின்.

### குறுகிய மூவுயிர்.

குறுகிய மூவுயிராவன:—குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஐகாரக்குறுக்கமும், எனவிவை. இவைமேலே சொல்லுதும்.

### ஆய்தம்.

ஆய்தமென்பதஃகேனம். அஃகேனமெனினும், ஆய்தமெனினும், தனிநிலையெனினும், புள்ளியெனினும், ஒற்றெனினு மொக்கும்.

என்னை:—

"அஃகேன மாய்தந் தனிநிலை புள்ளி
யொற்றிப் பால வைந்து மிதற்கே" என்றாராகலின்.

வரலாறு—எஃகு—கஃசு—கஃடு—கஃது—கஃபு—கஃறு—எனவரும்.

என்னை:—

"குறியதன் முன்ன ராய்தப் புள்ளி
யுயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே" என்றாராகலின்.

### மெய்.

இனி மெய்யாவன:—ககரமுதல் னகரமீறாய்க்கிடந்த பதினெட்டெழுத்து மெனக்கொள்க.

என்னை:—

"ககர முதல னகர விறுவாய்ப்
பதினெண் ணெழுத்து மெய்யென மொழிப" என்றாராகலின்.

மெய்யெனினும், உடம்பெனினும், உறுப்பெனினும், ஒற்றெனினும் புள்ளியெனினுமொக்கும்.

என்னை:—

"மெய்யுடம் புறுப்பொற் றிவைதா மொருபொருட்
செய்யு மென்று செப்பினர் புலவர்"
"மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்
எகர வொகரத் தியற்கையு மற்றே
மெய்யி னியக்கம் அகரமொடு சிவணும்
மெய்யுயிர் நீங்கிற் றன்னுரு வாகும்" என்றாராகலின்.

ஏகாரம்-எண்ணேகாரம்.

என்னை :—

"எண்ணே கார மிடையிட்டுக் கொளினு
மெண்ணுக்குறித் தியலு மென்மனார் புலவர்" என்றாராகலின்.

## மூவினம்.

மூவினமாவன:—வல்லினம் - மெல்லினம் - இடையினம்- எனவிவை. வல்லினமாவன - க ச ட த ப ற. மெல்லினமாவன - ங ஞ ண ந ம ன. இடையினமாவன - ய ர ல வ ழ ள.

என்னை :—

"வல்லெழுத் தென்ப கசட தபற:
மெல்லெழுத் தென்ப ஙஞண நமன:
இடையெழுத் தென்ப யரல வழள" என்றாராகலின்.

'மறுவறு மூவினம்' என்று சிறப்பித்தவதனால் அவை உயிர்மெய்யாகிய காலத்தும், அப்பெயரானே வழங்கப்படுமெனக் கொள்க.

என்னை :—

"விதப்புக் கிளவி வேண்டியது விளக்கும்" என்றாராகலின்.

## உயிர்மெய்.

உயிர்மெய்யாவன:—உயிருமெய்யுங் கூட்டி யுச்சரிக்கப் படாநின்ற பன்னிருபதினெட் டிருநூற்றிருபத் தாறெழுத் துமெனக் கொள்க. அவையாவன - ககரமுதல் னகரமீறாய்க் கிடந்த பன்னிருபதினெட் டிருநூற்றிருபத்தாறெழுத்து மெனக்கொள்க.

என்னை :—

"உயிரீ றாறே மெய்ம்மு வாறே
யம்மூ வாறு முயிரொ டுயிர்ப்ப

விருநூற் ளுருபத் தாறுயிர் மெய்யே:
புள்ளி யில்லா வெல்லா மெய்யு
முருவுரு வாகி யகரமொ டுயிர்த்தலு
மேனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலு
மாயீ ரியல வுயிர்த்த லாறே:
மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே" என்றூராகலின்.

'மைதீருயிர்மெய்' என்று சிறப்பித்தவதனல் ஏறிய உயிரினளவே யுயிர்மெய்க்கு மளவெனக்கொள்க.

என்னை :—

"உயிர்மெய்க் களவு முயிரள வென்ப" என்ரூராகலின்.

'மதிமருட்டும்...நுண்ணிடையாய்' என்பது மகடூஉமுன்னிலை.

என்னை :—

## வெண்பா.

"இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்றும்
அடங்காதா ரென்று மடங்கார் - தடங்கண்ணாய்
உப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்தடினும்
கைப்பறா பேய்ச்சுரையின் காய்"

எனப்பிறரும் 'தடங்கண்ணாய்' என்று மகடூஉமுன்னிலை சொன்னா ருளரெனக்கொள்க. மதி-என்பதூஉண்டுப்பிறை: அஃது இருகோட் டொருமதி யெழில்பெறமிலைச்சினை - என்றூற்போலக்கொள்க. அல்லதூஉம் அறிவினைமயக்குஞ் சிறுநுதன் முதலாகிய வுறுப்புகளை யுடையாயென்று மாம். 'அறிஞருரைத்த அளபும்' என்பது - புலவராற் சொல்லப்பட்ட அளபெடைகளும் எ-று.

[அளபெனினும், அளபெடையெனினும், புலுதமெனினு மொக்கும்.]

என்னை:—

"அளபே புலுத மாயிரு பெயரு
மளபெடை யென்பு வறிந்திசி னோரே" என்றாராகலின்.

அவை போக்கிச் சொல்லுதும்.

'அசைக்குறுப்பாவன' என்பது - இப்பதின்மூன்று திறத்தெழுத்து மசைக்குறுப்பாமெழுத்து எ-று. ஏகாரமீற்றசை. தேற்றமெனினுமமையும்.

என்னை :—

"தேற்றம் வினவே பிரிநிலை யெண்ணே
யீற்றசை யிவ்வைந் தேகாரம்மே" என்றாராகலின்.

என்னை :—

"குறினெடி லளபெடை யுயிருறுப் புயிர்மெய்
வலிய மெலிய விடைமையோ டாய்தம்
இ-உ-ஐ-யென் மூன்றன் குறுக்கமோ
டப்பதின் மூன்று மசைக்குறுப் பாகும்"
என்றார் காக்கைபாடினியாரு மெனக்கொள்க.

இனிமூவுயிர்க் குறுக்கமும் - அளபெடைகளு மாமாறு சொல்லுதும். அவற்றுள்,

குற்றியலுகரம் வருமாறு :—

## குற்றியலுகரம்.

நெடிற்கீழும், நெடிலொற்றின்கீழும், குறிலிணைக்கீழும், குறிலிணையொற்றின்கீழும், குறினெடிற்கீழும், குறினெடிலொற்றின்கீழும், குற்றொற்றின்கீழும் என்றிவ்வேழிடத்து ஆறு வல்லெழுத்தினையுமூர்ந்து உகரம் வந்தால் அது குற்றியலுகரமென்று வழங்கப்படுமெனக் கொள்க.

என்னை :—

"நெடிலே குறிலிணை குறினெடி லென்றிவை
யொற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென்
றேழ்குற் றுகரக் கிடனென மொழிப:
எழுவகை யிடத்துங் குற்றிய லுகரம்
வழுவின்றி வரூஉம் வல்லா றூர்ந்தே" என்றாராகலின்.

வருமாறு: நாகு - காசு - காடு - காது - காபு - காறு - என நெடிற்கீழ் ஆறு வல்லெழுத்தினையுமூர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

நாக்கு - காச்சு - காட்டு - காத்து - காப்பு - காற்று - என நெடிலொற்றின்கீழ் ஆறு வல்லெழுத்தினையு மூர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

வரகு - முரசு - முருடு - மருது - துரபு - கவறு - எனக் குறிலிணைக்கீழ் ஆறு வல்லெழுத்தினையு மூர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

அரக்கு - பொரிச்சு - தெருட்டு - குருத்து - பொருப்பு - சிரற்று - எனக் குறிலிணையொற்றின்கீழ் ஆறு வல்லெழுத்தினையு மூர்ந்து குற்றிய லுகரம் வந்தவாறு.

அசோகு - பலாசு - மலாடு - கெடாது - புதாபு - விராறு- எனக் குறிநெடிற்கீழ் ஆறு வல்லெழுத்தினையுமூர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

நமாக்கு - தடாச்சு - பஞாட்டு - கடாத்து - புதாப்பு - விராற்று - எனக் குறினெடிலொற்றின்கீழ் ஆறு வல்லெழுத்தினையு மூர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

அக்கு - கச்சு - கட்டு - கத்து - கப்பு - கற்று - எனக் குற்றொற்றின்கீழ் ஆறு வல்லெழுத்தினையுமூர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு காண்க.

இனிக்குற்றிய லுகரம் அறுவகைப்படுமென்பாருமுளர். அவையாவன — ஈரெழுத்தொருமொழி, உயிர்த்தொடர்மொழி, இடைத்தொடர்மொழி, ஆய்தத்தொடர்மொழி, வன்றொடர்மொழி, மென்றொடர்மொழி என்றிவை.

என்னை :—

"ஈரெழுத் தொருமொழி யுயிர்த்தொட ரிடைத் தொட
ராய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொட
ராயிரு மூன்றே யுகாரங் குறுகிடன்" என்றாராகலின்.

**குற்றியலிகரம்.**

இனிக்குற்றிய லிகரம் வருமாறு :—உகரந்திரிந்தும் திரியாதும் யகரமோடியைபின்கண்வந்த இகரம் குற்றியலிகரமென்று வழங்கப்படும்.

என்னை :—

"வல்லெழுத் தாறே டெழுவகை யிடத்து
முகர மரையாம் யகரமோ டியையி
னிகாரமுங் குறுகு மென்மனார் புலவர்:
யகரம் வருவழி யிகாரங் குறுகு
முகரக் கிளவி துவரத் தோன்றாது" என்றாராகலின்.

வ-று : நாகியாது - காசியாது - காடியாது - காதியாது - காபியாது காறியாது - எனவரும்.

ஒழிந்தனவு மிவ்வாறே யொட்டிக்கொள்க.

இனித் திரியாதுவந்த குற்றியலிகரம் வருமாறு-கேண்மியா - சென்மியா - எனக்கொள்க.

என்னை :—

"குற்றிய லிகர நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வரூஉ மகர மூர்ந்தே" என்றாராகலின்.

**ஐகாரக்குறுக்கம்.**

இனி ஐகாரக்குறுக்கத்திற்குச் சொல்லுமாறு :—

அளபெடுத்தற்கண்ணும், தனியே சொல்லுதற்கண்ணு மன்றி யல்லாதவழிவந்த ஐகாரம் தன்னளவிற் சுருங்கி ஒன்றரை மாத்திரையும், ஒருமாத்திரையுமாகக் குறுகுமெனக் கொள்க. அவைகுறுகுமிடத்து மொழிமுதலிடை கடையென மூன்றிடத்துங்குறுகும்.

என்னை :—

"அளபெடை தனியிரண் டல்வழி ஐ ஔ
வுளதா மொன்றரை தனிமையு மாகும்" என்றுராகலின்.

வ-று : ஐப்பசி - மைப்புறம் - மடையன் - இடையன் - குவளை - தவளை - திணை - பனை - என முதலும் இடையும் கடையும் குறுகியவாறு கண்டு கொள்க.

என்னை :—

"மொழிமுத லிடைகடை யெனமூன் றிடத்து
மழியா தைகா ரங்குறு கும்மே" என்றுராகலின்.

## அளபு (அளபெடை).

இனி அளபெடைக்குச் சொல்லுமாறு :—அளபெடையிரண்டுவகைப்படும்: உயிரளபெடையும் ஒற்றளபெடையுமென.

என்னை :—

"உயிரள பெடையு மொற்றள பெடையுமென்
றுயிரண் டென்ப வளபெடை தானே" என்றுராகலின்.

## உயிரளபெடை.

அவற்றுள் உயிரளபெடைக்குச் சொல்லுமாறு :—உயிருள் நெட்டெழுத்தேழு மளபெடுக்கும். அவை யளபெடுக்குமிடத்து ஐகாரம் இகரத்தோடும், ஔகாரம் உகரத்தோடும் அளபெடுக்கும்: ஒழிந்தனவுந் தமக்கினமாகிய குற்றெழுத்தோடு அளபெடுக்குமெனக்கொள்க.

என்னை :—

" குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கு
நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே:
ஐ - ஔ - வென்னு மாயீ ரெழுத்திற்
கிகர வுகர மிசைநிறை வாகும்" என்றார் தொல்காப்பியனார்.

அவை நான்கிடத்தும்வந் தளபெடுக்கும்.

என்னை :—

" தனிநிலை முதனிலை யிடைநிலை யீறென
நால்வகைப் படூஉமள பாய்வரு மிடனே" என்றாராகலின்.

வ-று : ஆஅ - ஈஇ - ஊஉ - ஏஎ - ஐஇ - ஓஒ - ஔஉ - என இவையேழும் தனிநிலை யளபெடை.

ஆஅரிடம் - ஈஇரிலை - ஊஉரிடம், ஏஎரிகள் - ஐஇயவி - ஓஒரிகள் - ஔஉவியம் - என இவை யேழு முதனிலையளபெடை.

படாஅகை - பரீஇயம் - கழூஉமணி - பரேஎரம் - வளைஇயம் - புரோஒசை - அநௌஉகம் - என இவையேழும் இடைநிலை யளபெடை.

கடாஅ - குரீஇ - கழூஉ - மிலேஎ - கடைஇ - அரோஒ - அநௌஉ - என இவையேழும் இறுதிநிலை யளபெடை.

உயிரளபெடை எழுத்துநோக்கவேழாம். இடநோக்க நான்காம். எழுத்து மிடமு முறழ்ந்து நோக்க இருபத்தெட்டாமெனக்கொள்க.

## ஒற்றளபெடை.

இனி ஒற்றளபெடைக்குச் சொல்லுமாறு :— ஒற்றுகளுள் ங - ஞ - ண - ந - ம - ன - வ - ய - ல - ள - ஆய்தமென்னும் பதினொரொற்றும், குறிற்கீழும் குறிலிணைக்கீழும் வந்து அளபெடுக்குமெனக் கொள்க.

என்னை :—

“ஙஞண நமன வயலள வாய்த
மெனுமிவை யீரிடத் தளபெழ மொரோவழி
வன்மையொடு ரஃகான் ழஃகா னொழிந்தாங்
கன்மை யாய்தமோ டளபெழ மொரோவழி” என்றாராகலின்.

வ-று : மங்ங்கலம் - மஞ்ஞ்சு - மண்ண்ணு - பந்ந்து - அம்ம்பு - மின்ன்னு - தெவ்வ்வர், வெய்ய்யர் - செல்ல்க - கொள்ள்க - எஃஃகு - எனக் குறிற்கீழ்ப் பதினோரொற்று மளபெழுந்தவாறு கண்டுகொள்க.

அரங்ங்கம் - முரஞ்ஞ்சு - முரண்ண்டு - பருந்ந்து - அரும்ம்பு - முரன்ன்று - குரவ்வ்வு - அரைய்ய்ர் - குரல்ல்கள் - திரள்ள்கள் - வரஃஃகு - எனக் குறிலிணைக்கீழ்ப் பதினோரொற்று மளபெழுந்தவாறு கண்டுகொள்க.

இவ்விருபத்திரண்டு புள்ளியளபெடையுஞ் செய்யுளகத் தல்லது * பரவைவழக்கினுள் வாராவெனக்கொள்க.

என்னை :—

“மாத்திரை வகையாற் றளைதம கெடாநிலை
யாப்பழி யாமையென் றளபெடை வேண்டும்” என்றாராகலின்.

**மாத்திரை.**

‘அறிஞருரைத்த வளபும்’ என்று சிறப்பித்தவதனால் குற்றெழுத்தும் ஒற்றளபெடையும் ஓரோஒன்று ஒருமாத்திரை, நெட்டெழுத்திரண்டுமாத்திரை, உயிரளபெடை மூன்றுமாத்திரை, ஆய்தமும் மெய்யும் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஓரோஒன்று அரைமாத்திரை, ஐகாரக்குறுக்கமும் ஔகாரக்குறுக்கமும் ஓரோஒன்று ஒன்றரைமாத்திரை, மகரக் குறுக்கமும் ஆய்தக்குறுக்கமும் ஓரோஒன்று கான் மாத்திரை.

* பரவை வழக்கு—உலக வழக்கு.

என்னை :—

"ஒன்றிரண் டொருமூன் ஞென்றரை யரைகா
லென்றனர் பொழுதிவை யிமைநொடி யளவே
கண்ணிமை கைந்நொடி யளவே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே"

"ஒற்றுக்கு மாத்திரை யொன்றே யளபெழுந்தாற்
றெற்றக் குறிலதுவே யாம்"

"உன்னல் காலே யூன்ற லரையே
முறுக்கன் முக்கால் விடுத்த லொன்றே"

என்றார் பிறருமெனக்கொள்க.

## * அசை.

5. குறிலே நெடிலே குறிலிணை யேனைக் குறினெடிலே
நெறியே வரினு நிறைந்தொற் றடுப்பினு நேர்நிரையென்
றறிவேய் புரையுமென் றோளி யுதாரண மாழிவெள்வேல்
வெறியே சுறுநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே.

இ-கை. நிரனிறைப்பொருள்கோள் வகையா னேரசையு நிரையசையுமாமாறும் அவற்றிற்குதாரணமாமாறும் உணர்த்து-ற்று.

இ-ள். 'குறிலே நெடிலே குறிலிணை யேனைக் குறினெடிலே நெறியேவரினு நிறைந்தொற்றடுப்பினு நேர்நிரையென்றறி' என்பது - குற்றெழுத்துத் தனியேவரினும் நெட்டெழுத்துத் தனியேவரினும் குற்றெழுத்தொற்றடுத்துவரினும் நெட்டெழுத் தொற்றடுத்துவரினும் நேரசையாம். குறிலிணைந்துவரினும் குறினெடிலிணைந்துவரினும் குறிலிணைந் தொற்றடுத்துவரினும் குறினெடிலிணைந் தொற்றடுத்துவரினும் நிரையசையாம்.

---

* அசை — எழுத்து அசைத்து இசை கோடல்.

என்னை :—

"நெடில்குறி றனியாய் நின்றுமொற் றடுத்து
நடைபெறு நேரசை நால்வகை யானே:
குறிலிணை குறினெடி றனித்து மொற்றடுத்து
நெறிமையி னான்காய் வருநிரை யசையே" என்றாராகலின்.

'வேய்புரையு மென்றோளி' எ-து - மகடூஉமுன்னிலை. 'உதாரணம் ஆழி வெள் வேல் வெறியே சுறு நிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே' எ-து - நேரசைக்கு உதாரணம்—ஆ - ழி - வெள் - வேல் - எ-ம்; நிரையசைக்கு உதாரணம்—வெறி - சுறு - நிறம் - விளாம் - எனவுஞ் சொல்லுவர் புலவர் எ-று.

அகலம் - உரையிற்கொள்க.

[அகலமெனினும் விருத்தியுரையெனினு மொக்கும்.]

என்னை :—

"அகல மென்ப தாசறக் கிளப்பின்
விகல மின்றி விரித்துரைப் பதுவே" என்றாராகலின்.

'விண்டோய் விளாம்' என்று சிறப்பித்தவதனால் நேரசை ஓரலகுபெறும், நிரையசை ஈரலகுபெறுமெனக்கொள்க.

வ-று: ஆ - எனத் தனிநெடில் நேரசையாயினவாறு. ழி-எனத் தனிக்குறில் நேரசையாயினவாறு. வெள் - எனக் குற்றெழுத் தொற்றடுத்து நேரசையாயினவாறு. வேல் - என நெட்டெழுத் தொற்றடுத்து நேரசையாயினவாறு. வெறி - எனக் குறிலிணைந்து நிரையசையாயினவாறு. சுறு-எனக் குறினெடி லிணைந்து நிரையசையாயினவாறு. நிறம் - எனக் குறிலிணைந் தொற்றடுத்து நிரையசையாயினவாறு. விளாம் - எனக் குறினெடிலிணைந் தொற்றடுத்து நிரையசையாயினவாறுகாண்க.

இவற்றிற்குச் செய்யுள்வருமாறு:—

### ஆசிரியப்பா.

"போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நர்தற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வாரே"

இது நேரசை நான்கும் வந்தசெய்யுள்.

### ஆசிரியப்பா.

"அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக ழவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே"

இது நிரையசைநான்கும் வந்தசெய்யுள்.

குறிலேநெடிலே யென்னு மிக்காரிகைதன்னையே யிலக்கியமாக் அலகிடினு மிழுக்காது.

என்னை:—

"குறிலே நெடிலே குறிலிணை குறினெடி
லொற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரு நிரையு மென்றிசிற் பெயரே"

என்றார் தொல்காப்பியனார்.

"கோழிவேந்தன் நேரசைநிரையசை
யாழ்புனல்வாழ்க்கை வெறி சுறா நிறங் குரால்"

என்று உதாரணமெடுத் தோதினாரு முளரெனக்கொள்க.

### * சீர்.

6. ஈரசை நாற்சீ ரகவற் குரியவெண் பாவினவாம்
நேரசை யாலிற்ற மூவசைச் சீர்நிரை யாலிறுப
வாரசை மென்முலை மாதே வருத்தவஞ் சிக்குரிச்சீர்
ஓரசை யேநின்றுஞ் சீராம் பொதுவொரு நாலசையே.

---

* சீர் – அசை இயைந்து சீர்கொள நிற்றல்.

இ-கை. அவ்வசைகளானாகிய சீர்களது பெயர்வேறு பாடுணர்த்து-ற்று.

'ஈரசைநாற்சீரகவற்குரிய' எ-து - இரண்டசையினானாகிய நான்குசீரும் ஆசிரியவுரிச்சீரெனப்படும் எ-று.

[அகவ லெனினும் ஆசிரிய மெனினு மொக்கும்.]

என்னை :—

"அகவ லென்ப தாசிரியப் பெயரே" என்றாராகலின்.

'வெண்பாவினவாம் நேரசையாலிற்ற மூவசைச்சீர்' எ-து - நேரசையிறுதியாகிய மூவசைச்சீர்நான்கும் வெண்பாவுரிச்சீரெனப்படும் எ-று.

'நிரையாலிறுப வகுத்த வஞ்சிக்குரிச்சீர்' எ-து-நிரையசையிறுதியாகிய மூவசைச்சீர்நான்கும் வஞ்சியுரிச்சீரெனப்படும் எ-று.

'வாரசை மென்முலைமாதே' எ-து - மகடூஉமுன்னிலை.

'ஓரசையே நின்றுஞ் சீராம்' எ-து - ஓரோவிடத்து நேரசைதானே நின்றுஞ் சீராம்: நிரையசைதானே நின்றுஞ் சீராம்: அவை யசைச்சீரெனப்படும் எ-று.

'பொதுவொருநாலசையே' எ-து - நாலசையினானாகிய சீர் பொதுச்சீரெனப்படும் எ-று.

நான்கென்பதனை யெல்லாவற்றோடுங்கூட்டி மத்திம தீபமாகப் பொருளுரைத்துக்கொள்க.

என்னை :—

"ஈரசை கூடிய சீரியற் சீரவை
யீரிரண் டென்ப ரியல்புணர்ந் தோரே:
மூவசைச் சீருரிச் சீரிரு நான்கினு
ணேரிறு நான்கும் வெள்ளை யல்லன
பாவினுள் வஞ்சியின் பாற்பட் டனவே:

நாலசை யானு நடைபெறு மோரசைச்
சீர்நிலை யெய்தலுஞ் சிலவிடத் துளவே"

என்றார் காக்கைபாடினியார்.

### வாய்பாடு.

7. தேமா புளிமா கருவிளங் கூவிளஞ் சீரகவற்
காமாங் கடைகா யடையின்வெண் பாவிற்கந் தங்கனியா
வாமாண் கலையல்குன் மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்
நாமாண் புரைத்த வசைச்சீர்க் குதாரண நாண்மலரே.

இ-கை. முறையானே முதனான்குசீருக்கு முதாரண மாமாறுணர்த்து - ற்று.

'தேமா புளிமா கருவிளங் கூவிளஞ் சீரகவற்காம்' எ-து- நேர்நேர் - நிரைநேர் - நிரைநிரை - நேர்நிரையாகிய தேமா - புளிமா - கருவிளம் - கூவிளம் - என்னு நான்குசீரும் ஆசிரிய வுரிச்சீருக்கு உதாரணமாம் எ-று.

'ஆங் கடை காயடையின் வெண்பாவிற்கு' என்பது - அவைகடையிற் காய் என்னுஞ் சொற்பெற்றுத் தேமாங்காய்- புளிமாங்காய் - கருவிளங்காய் - கூவிளங்காய் எனவரு நான்கு சீரும் வெண்பாவுரிச்சீருக்கு உதாரணமாம் எ-று.

'அந்தங்கனியா வகுத்த வஞ்சிக்குரிச்சீர்' எ-து - அவ் வீற்றின்கட் கனி என்னுஞ் சொற்பெற்றுத் தேமாங்கனி - புளிமாங்கனி - கருவிளங்கனி - கூவிளங்கனி எனவருநான்கு சீரும் வஞ்சியுரிச்சீருக்கு உதாரணமாம் எ-று.

'வாமாண்கலையல்குன்மாதே' எ-து - மகடூஉமுன்னிலை.

'நாமாண்புரைத்த வசைச்சீர்க் குதாரண நாண் மலரே' எ-து - ஓரோவிடத்தாமென்றுரைக்கப்பட்ட ஓரசைச்சீருக்கு உதாரணம் - நாள் என்பதூஉம் - மலர் என்பதூஉம் - ஆம் என்றவாறு.

நாள் - என்பது - நேரசைச்சீருக்கும், மலர் - என்பது - நிரையசைச்சீருக்கும் உதாரணமாம்.

ஆம் என்பதனை எல்லாவற்றோடுங் கூட்டி மத்திமதீபமாகப்பொருளுரைத்துக்கொள்க.

**வேண்டுறை.**

"அம்ம்பவள் வரிநெடுங்க ணய்வஞ்சிக்
கொஃம்ம்பவள் கொடிமருங்குல் கோங்கின்
அரும்ம்பவண்முலையொக்குமே யொக்கும்
கரும்ம்பவள் வாயிற் சொல்"

என்னும் பொய்கையார் வாக்கினுள் 'ஒக்கும்' என்பதனை எல்லாவற்றோடுங்கூட்டிப் பொருளுரைத்துக் கொண்டாற்போலக்கொள்க.

8. தண்ணிழ றண்பூ நறும்பூ நறுநிழ றந்துறழ்ந்தால்
எண்ணிரு நாலசைச் சீர்வந் தருகு மினியவற்றுட்
கண்ணிய பூவினங் காய்ச்சீ ரனைய கனியொடொக்கும்
ஒண்ணிழற் சீரசைச் சீரிய ற்சீரொக்கு மொண்டளக்கே.

இ-கை. பொதுச்சீருக் குதாரணமாமாறும், அவற்றதெண்ணும், பொதுச்சீரும், அசைச்சீரும், செய்யுளகத்து வருங்காற் றளைவழங்கு முறைமையு முணர்த்து - ற்று.

'தண்ணிழல்...அருகும்' என்பது - தேமா - புளிமா - கருவிளம் - கூவிளம் என்னும் நான்கினோடும், தண்ணிழல் - தண்பூ - நறும்பூ - நறுநிழல் என்னு நான்கினையும், முறையானே கொணர்ந்துறழ்ந்தாற் பதினாறு நாலசைச்சீருக்கு உதாரணமாம் எ-று.

தேமா - புளிமா - கருவிளம் - கூவிளம் - என்பன அதிகாரத்தால் வருவித்துரைக்கப்பட்டன.

'அருகும்' என்பதனால் அச்சீர் செய்யுளகத்தருகியன்றிவாராவெனக்கொள்க.

வ-று: தேமாந்தண்ணிழல் — தேமாந்தண்பூ — தேமாநறும்பூ
புளிமாந்தண்ணிழல் — புளிமாந்தண்பூ — புளிமாநறும்பூ
கருவிளந்தண்ணிழல் — கருவிளந்தண்பூ — கருவிளநறும்பூ
கூவிளந்தண்ணிழல் எ-ம் — கூவிளந்தண்பூ எ-ம் — கூவிளநறும்பூ எ-ம்,

தேமாநறுநிழல் — கருவிளநறுநிழல்
புளிமாநறுநிழல் — கூவிளநறுநிழல் எனவுங்கொள்க.

இனி அவற்றுள், 'காய்ச்சீரணைய' என்பது - அந்நாலசைச்சீர் பதினாறனுள்ளும், பூவென்னுஞ் சொல்லிறுதியாகிய நேரீற்றுப் பொதுச்சீரெட்டும், காயென்னுஞ் சொல்லிறுதியாகிய வெண்பாவுரிச்சீரே போலக்கொண்டுவருஞ்சீர் முதலசையோ டொன்றுவது வெண்சீர்வெண்டளையாகவும், ஒன்றாதது கலித்தளையாகவும் வழங்கப்படும் எ-று.

'கனியொடொக்கு மொண்ணிழற்சீர்' எ-து - நிழலென்னுஞ் சொல்லிறுதியாகிய நிரையீற்றுப் பொதுச்சீரெட்டும், கனியென்னுஞ் சொல்லிறுதியாகிய வஞ்சியுரிச்சீரேபோலக் கொண்டுவருஞ் சீர் முதலசையோ டொன்றினும் ஒன்றாவிடினும் வஞ்சித்தளையென்று வழங்கப்படும் எ-று.

'அசைச்சீரியற்சீரொக்கும்' எ-து - ஓரசைச்சீர் ஆசிரிய வுரிச்சீரேபோலக்கொண்டுவருஞ்சீர் முதலசையோ டொன்றுவது ஆசிரியத்தளையாகவும், ஒன்றாதது இயற்சீர் வெண்டளையாகவும் வழங்கப்படும் எ-று.

[இயற்சீரெனினும்—ஆசிரிய வுரிச்சீரெனினு மொக்கும்.]

என்னை :—

"இயற்சீ ரெல்லா மாசிரிய வுரிச்சீர்" என்றாராகலின்.

'ஒண்டளைக்கே' எ-து-ஒவ்வியதளைவழங்குமிடத்து எ-று.

ஒண்டளையென்பதனை இறுதிவிலக்காகப் பொருளுரைத்துக்கொள்க. 'கண்ணியபூவினம்' என்று சிறப்பித்த வதனால் வெண்பாவினுள் நாலசைச்சீர்வாரா: ஆசிரியத்துள்ளுங் குற்றுகாம் வந்துழியன்றி வாரா: கலியினுள்ளும் பெரும்

பான்மையுங் குற்றுகரம் வந்துழியன்றி வாரா: வஞ்சியுட் குற்றுகரம் வாராதேயும் வரப்பெறும் வஞ்சியுளிரண்டு நாலசைச் சீர் ஓரடியுள்ளருகிக் கண்ணுற்றுநிற்கவும் பெறும்: அல்லன வற்றுள் பெரும்பான்மையும் ஓரடியு ளொன்றன்றிவாரா: இரண்டுவரினுங் கண்ணுற்று நில்லா: பாவினத்துள்ளும் பயின்றுவாராவெனக் கொள்க. 'ஒண்ணிழற்சீர்' என்று சிறப்பித்தவதனால் நிழலென்னுஞ் சொல்லிறுதியாகிய நிரையீற்றுப் பொதுச்சீரெட்டும், வஞ்சியுளல்லது வாராவெனக்கொள்க.

என்னை :—

"நாலசை யானடை பெற்றன வஞ்சியு
ளீரொன் றணைதலு மேனுழி யொன்றுசென்
றுகலு மந்த நிரையசை வந்தன
கூறிய வஞ்சிக் குரியன வாதலு
மாகு மென்ப வறிந்திசி னோரே"

என்றார் காக்கைபாடினியார்.

இனிஒருசாரார் வெண்பாவினுள் அளபெழுந்தால் நாலசைச்சீர் வருமென்பா ருளராயினும் அவ்வாறலகிட்டு உதாரணவாய்பாட்டா லோசை யூட்டும்பொழுது செப்பலோசை பிழைக்குமென்பதூஉம், ஆண்டுச் சீருந்தளையுஞ் சிதையவாராமையா னள பெடுப்பனவுமல்ல. அளபெடுப்பினு மளபெடைகள் அலகுகாரியம் பெறுவனவுமல்லவென்பதூஉம் காக்கைபாடினியார் முதலாகிய தொல்லாசிரியர் துணிவு. அதுவே இந்நூலுடையாருக்கு முடன்பாடு.

### உதாரண இலக்கிய முதனினைப்புச் செய்யுள்.

9. குன்றக் குறவ னகவல்பொன் னாரம்வெண் பாட்டுவஞ்சிக்
கொன்று முதாரணம் பூந்தா மரையென்ப வோரசைச்சீர்
நன்றறி வாரிற் கயவரும் பாலொடு நாலசைச்சீர்க்
கன்றதென் னாரள்ளற் பள்ளத்தி னேடங்கண் வானத்துமே.

இ-கை. முறையானே ஐந்துவகைப்பட்ட சீரானும் வந்த இலக்கியங்கட்கு முதனினைப் புணர்த்து-ற்று.

'குன்றக்குறவ னகவல்' என்பது :—

**ஆசிரியப்பா.**

"குன்றக் குறவன் காதன் மடமகள்
வரையர மகளிர் புரையுஞ் சாயல
ளையளரும்பிய முலையள்
செய்யவாயினள் மார்பினள் சுணங்கே"

இச்செய்யுளில் ஆசிரியவுரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டுகொள்க.

'பொன்னாரம் வெண்பாட்டு' என்பது :—

**வெண்பா.**

"பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபோர்
உன்னேனென் றாழுலக்கை பற்றினேற் - கென்னே
மனனொடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
புனலுடன் பேரே வரும்"

இச்செய்யுளில் வெண்பாவுரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டுகொள்க.

'வஞ்சிக்கொன்று முதாரணம் பூந்தாமரை' யென்ப என்பது :—

**வஞ்சிப்பா.**

"பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவு
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவு—நாளு
மகிழுமகிழ் தூங்கூரன்
புகழ்தலானுப் பெருவண்மையனே."

இச்செய்யுளில் வஞ்சியுரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டுகொள்க.

'ஓரைச்சீர் நன்றறிவாரிற் கயவரும் பாலொடொன்பது'

## குறள் வெண்பா.

"நன்றறி வாரிற்கயவர் திருவுடையர்
நெஞ்சத்தவலமிலர்.
பாலொடு தேன்கலந் தற்றே பனிமொழி
வாலெயி றூறியநீர்"

என்னுமிச்செய்யுட்களில் 'இலர்' எ-ம், 'நீர்' எ-ம் அசைச்சீர்க ளாயினவாறு கண்டுகொள்க.

'நாலசைச்சீர்க் கன்றதென்
றோரள்ளற் பள்ளத்திஞேடங்கண் வானத்தும்'

என்பது:—

'அள்ளற்பள்ளத்தகன் சோணாட்டு
வேங்கைவாயில் வியன்குன்றூரான்'

என்னும் பழம்பாட்டினுள் ஓரடியுள் இரண்டு நாலசைச்சீர் வந்தவாறு கண்டுகொள்க.

## வஞ்சிப்பா.

"அங்கண்வானத் தமரராசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்
வடிவார்கூந்தன் மங்கையரும்
கடிமலரேந்திக் கதழ்ந்திறைஞ்சச்
சிங்கஞ்சுமந்த மணியணைமிசைக்
கொங்கவிரசோகின் குளிர்நிழற்கீழ்ச்
செழுநீர்ப்பவளத் திரள்காம்பின்
முழுமதிபுரையு முக்குடைநீழல்
வெங்கண்வினைப்பகை விளிவெய்தப்
பொன்புனைநெடுமதில் புடைவளைப்ப

அனந்தசதுட்டய மவையெய்த
நனந்தலேயுலகுட னவைநீங்க
மந்தமாருத மருங்கசைப்ப
அந்தரதுந்துபி நின்றியம்ப
இலங்குசாமரை யெழுந்தலமர
நலங்கிளர்பூமழை நனிசொரிதர—இனிதிருந்
தருணெறிநடாத் தியவாதிதன்
திருவடிபரவுதுஞ் சித்திபெறற் பொருட்டே"

இச்செய்புளில் நாலசைச்சீர் பதினாறும் அடிதோறு முதற்கண்ணே வந்தவாறு கண்டுகொள்க.

இதனுள்—நேரீற்றுப் பொதுச்சீர்நின்று தன்வருஞ்சீர் முதலசையோடொன்றுவது வெண்சீர்வெண்டளை யாகவும், ஒன்றுதது கலித்தளையாகவும், நிரையீற்றுப்பொதுச்சீர் நின்று தன்வருஞ்சீர்முதலசையோடொன்றினும், ஒன்று விடினும் வஞ்சித்தளையாகவுங்கொண்டு வழங்கப்படும் எ—று.

இவ்வாறு பிறரும்:—
"குன்றுகூதிர் பண்புமேதாழி
விளியிசைமுத்துற ழென்றிவை யெல்லாந்
தெளியவந்த செந்துறைச் செந்துறை"

என்றுஉதாரண மெடுத்தோதினு ரெனக்கொள்க.

'அன்றமெதன்னர்' என்பதை அன்றவென்னு ரெனக் கொள்க.

### * தளை.

10. தண்சீர் தனதொன்றிற் றன்றளை யாந்தண வாதவஞ்சி
வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்து வல்லோர்வகுத்த
வெண்சீர் விகற்பங் கலித்தளை யாய்விடும் வெண்டளையாம்
ஒண்சீ ரகவ லுரிச்சீர் விகற்பமு மொண்ணுதலே.

* தளை - சீரிரண்டு தட்டு நிற்றல்.

இ-கை. நின்றசீரினீற்றசையும் வருஞ்சீரின்முதலசையும், தம்முளொன்றுவதும் ஒன்றாததுமாகிய வேழ்தளையுமாமாறுணர்த்து-ற்று.

'தண்சீர்தனதொன்றிற் றன்றளையாம்' என்பது—தன்சீர் நின்று தன்வருஞ்சீர் முதலசையோடொன்றுவது தன்றளையாம் எ-று.

எனவே ஆசிரியவுரிச்சீர்நின்று தன்வருஞ்சீர் முதலசையோடு நேராயொன்றுவது நேரொன்றாசிரியத்தளையாம். நிரையாயொன்றுவது நிரையொன்றாசிரியத்தளையாம். வெண்பாவுரிச்சீர்நின்று தன்வருஞ்சீர் முதலசையோடொன்றுவது வெண்சீர்வெண்டளையாம். வஞ்சியுரிச்சீர்நின்று தன்வருஞ்சீர் முதலசையோடொன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாம் எ—று.

'தணவாத' என்று மிகுத்துச்சொல்லியவதனல் தன்சீர்நின்று பிறிதாகிவருஞ்சீர் முதலசையோடொன்றுவதுஉந், தன்றளையேசிறப்பின்றாயினு மெனக்கொள்க.

'வஞ்சிவண்சீர்விகற்பமும் வஞ்சிக்குரித்து' என்பது-வஞ்சியுரிச்சீர்நின்று தன்வருஞ்சீர்முதலசையோ டொன்றாததூஉம் ஒன்றாதவஞ்சித்தளையாம் எ-று.

'வண்சீர்' என்று சிறப்பித்தவதனல் வஞ்சியுரிச்சீர்நின்று பிறிதாகிவருஞ்சீர்முதலசையோடொன்றாததூஉம், ஒன்றாத வஞ்சித்தளையே சிறப்பின்றாயினு மெனக்கொள்க.

'வல்லோர்வகுத்த வெண்சீர் விகற்பங் கலித்தளையாய் விடும்' என்பது-வெண்பாவுரிச்சீர்நின்று தன்வருஞ்சீர்முதலசையோடொன்றாதது கலித்தளையாம் எ-று.

'வல்லோர் வகுத்த' என்று சிறப்பித்தவதனல் வெண்பாவுரிச்சீர்நின்று பிறிதாகிவருஞ்சீர் முதலசையோ டொன்றாததூஉம், கலித்தளையே சிறப்பின்றாயினு மெனக்கொள்க.

'வெண்டளையாமொண்சீரகவலுரிச்சீர்விகற்பமும்' என்பது - ஆசிரியவுரிச்சீர்நின்று தன்வருஞ்சீர் முதலசையோடொன்றுதது இயற்சீர் வெண்டளையாம் எ-று.

'ஒண்சீர்' என்று சிறப்பித்தவதனால் ஆசிரியவுரிச்சீர் நின்று பிறிதாகிவருஞ்சீர் முதலசையோ டொன்றுததூஉம், இயற்சீர்வெண்டளையே சிறப்பின்றாயினுமெனக் கொள்க. 'ஒண்ணுதல்' என்பது மகடூஉ முன்னிலை.

என்னை :—

"இயற்சீரிரண்டு தலைப்பெயறம்முள்
விகற்ப மிலவாய் விரவிநடப்பி
னதற்பெய ராசிரியத் தளையாகும்:
வெண்சீரொன்றலு மியற்சீர் விகற்பமு
மென்றிரண்டென்ப வெண்டளைக்கியல்பே:
இயற்சீரிரண்டு தலைப்பெயறம்முள்
விகற்பவகையது வெண்டளையாகும்:
உரிச்சீரதனு ளுரைத்தமை யன்றிக்
கலக்குந்தளையெனக் கண்டிசினோரே:
வெண்சீரிறுதிக் கிணையசைபின்வரக்
கண்டனவெல்லாங் கலித்தளையாகும்:
தன்சீரிரண்டு தலைப்பெய றம்முளொத்
தொன்றினு மொன்றா தொழியினும் வஞ்சியின்
பந்தமெனப்பெயர் பகரப்படுமே"

என்றார்-காக்கைபாடினியார்.

## உதாரண இலக்கிய முதனினைப்புச் செய்யுள்.

11. திருமழை யுள்ளா ரகவல் சிலைவிலங் காகும்வெள்ளை
மருளறு வஞ்சிமங் தாநிலம் வந்துமை தீர்கலியின்
தெரிவுறு பந்தநல் லாய்செல்வப் போர்க்கதக் கண்ணனென்ப
துரிமையின் கண்ணின்மை யோரசைச் சீருக் குதாரணமே.

இ-கை. அத்தளைகளான்வந்த இலக்கியங்கட்கு முதனினைப் புணர்த்து-ற்று.

'திருமழையுள்ளாரகவல்' என்பது-

ஆசிரியப்பா.

" திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப்
பண்ணமைந் தவர்தேர் சென்ற வாறே"

இதுநிரையொன்றாசிரியத் தளையான் வந்தசெய்யுள்.

ஆசிரியப்பா.

" உள்ளார்கொல்லோ தோழிமுள்ளுடை
அலங்குகுலையீந்தின் சிலம்பிபொதிசெங்காய்
துகில்பொதி பவளமேய்க்கும்
அகில்படுகள்ளியங் காடிறந்தோரே"

இது நேரொன்றாசிரியத் தளையான் வந்த செய்யுள்.

'சிலைவிலங்காகும் வெள்ளை' என்பது:—

வெண்பா.

சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற்றென்று முனிவாள்—மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது"

இது வெண்சீர் வெண்டளையானும் இயற்சீர் வெண்டளையானும் வந்தசெய்யுள்.

'மருளறுவஞ்சி மந்தாநிலம் வந்து' என்பது:—

வஞ்சிப்பா.

" மந்தாநிலம் வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை
எனவாங்கினிதி னொதுங்கியவிறைவனை
மனமொழிமெய்களின் வணங்குதுமகிழ்ந்தே"

இது மயக்கப்படாத வகுத்த வஞ்சித்தளை ஒன்றாததூஉம் ஒன்றியதூஉமாகவந்த செய்யுள்.

'மைதீர்கலியின்றெரிவுறு பந்தம் செல்வப்போர்க்கதக் கண்ணன் என்பது'

### கலிப்பா.

"செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே"

இது மயக்கமில்லாக் கலித்தளையான் வந்தசெய்யுள். 'நல்லாய்' என்பது-மகடூஉ முன்னிலை.

'உரிமையின்கண்ணின்மையோரசைச்சீருக்குதாரணம்' என்பது.

### வஞ்சி விருத்தம்

"உரிமையின்கண் ணின்மையால்
அரிமதர்மழைக் கண்ணாள்
செருமதிசெய் தீமையால்
பெருமைகொன்ற வென்பவே"

இம்முச்சீரடி வஞ்சி விருத்தத்துண் மழை, என்னு நிரையசைச் சீரியற் சீரேபோல நின்று வருஞ்சீர் முதலசையோடொன்றாமையின் இயற்சீர் வெண்டளையாயிற்று. செய் யென்னும் நேரசைச்சீரியற் சீரேபோல நின்று வருஞ்சீர் முதலசையோ டொன்றினமையின் ஆசிரியத்தளையாயிற்று.

### * அடி.

12 குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி நாலொருசீர்
அறைதரு காலை யளவொடு நேரடி யையொருசீர்
நிறைதரு பாத நெடிலடி யாநெடு மென்பணைத்தோட்
கறைகெழு வேற்கணல் லாய்மிக்க பாதங் கழிநெடிலே.

---

* அடி - தளை அடுத்து நடத்தல்.

இ-கை. அத்தளைகளான் வந்த அடிகளது பெயர்வேறு பாடுணர்த்து-ற்று,

'குறளிருசீரடி' என்பது-இருசீரான் வந்தவடி குறளடி யெனப்படும்.

'சிந்துமுச்சீரடி' என்பது-முச்சீரான் வந்தவடி சிந்தடி யெனப்படும்.

'நாலொருசீரறைதருகாலையளவொடு நேரடி' என்பது-நாற்சீரான் வந்தவடி யளவடியென்றும் நேரடியென்றுஞ் சொல்லப்படும்.

'ஐயொருசீர் நிறைதருபாத நெடிலடியாம்' என்பது-ஐஞ்சீரான் வந்தவடி நெடிலடி யெனப்படும் எ-று.

'நெடுமென்பணைத்தோட்கறைகெழுவேற்கணல்லாய்' என்பது-மகடூஉ முன்னிலை.

'மிக்கபாதங்கழிநெடில்' என்பது-ஐஞ்சீரின்மிக்க சீரான்வருமடி யெல்லாங்கழி நெடிலடி யெனப்படும் எ-று. அகலம் உரையிற்கொள்க.

என்னை :—

"குறளடி சிந்தடி யிருசீர் மூச்சீ
ரளவடி நெடிலடி நாற்சீ ரைஞ்சீர்
நிரனிறை வகையா னிறுத்தனர் கொளலே:
கழிநெடி லடியே கசடறக் கிளப்பி
னறுசீர் முதலா வையிரண் டீரு
வருவன பிறவும் வகுத்தனர் கொளலே"

என்பன யாப்பருங்கலம்.

**உதாரண இலக்கிய முதனினைப்புச் செய்யுள்.**

13. திரைத்த விருது குறள்சிந் தளவடி தேம்பழுத்து
விரிக்கு நெடிலடி வேனெடுங் கண்ணிவென் றூன்வினையின்
இரைக்குங் கணிகொண்ட மூவடி வோடிடங்கொங்குமற்றுங்
கரிக்கைக் கான்மருப் போர்மூலை மாதர் கழிநெடிலே.

இ-கை. அவ்வடிகளான் வந்த இலக்கியங்கட்கு முத
னினைப் புணர்த்து-ற்று.

"திரைத்தவிருது, குறள்சிந்து" என்பது:—

**வஞ்சித்துறை.**

"திரைத்த சாலிகை
நிரைத்த போனிரைந்
திரைப்பத் தேன்களே
விரைக்கொண் மாலையாய்"

இது குறளடியான்வந்த செய்யுள்.

**வஞ்சி விருத்தம்.**

"இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே!
கருது வேற்றடக் கையினாய்"

இது சிந்தடியான் வந்தசெய்யுள்.

"அளவடி தேம் பழுத்து" என்பது:—

**கலி விருத்தம்.**

"தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளு மதுத்தண் டட்டமும்
தாம்பழுத் துளசில தவள மாடமே"

இஃது அளவடியான் வந்த செய்யுள்.

"விரிக்கு நெடிலடிவென்றான் வினையின்" என்பது:—

**கலித்துறை.**

"வென்றான் வினையின் றொகையாய் விரிந்து தன்க
ணொன்றாய்ப் பரந்த வுணர்வின் னொழியா துமுற்றுஞ்
சென்றான் றிகழுஞ் சுடர்சூ ழொளிமூர்த் தியாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார் வினைநீங் கினின்றார்"

இது நெடிலடியான் வந்த செய்யுள்.

"இரைக்குங் கணிகொண்ட மூவடிவோடிடங் கொங்கு மற்றும்" என்பது:—

### அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

" இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெய
 ரினவண்டு புடைசூழ
நுரைக்க ளென்னுமக் குழம்புக டிகழ்ந்தெழ
 நுடங்கிய விலயத்தால்
திரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத்
 திரள்களைக் கரைமேல்வைத்
தரைக்கு மற்றிது குணகடற் றிரையொடு
 பொருதல தவியாதே "

இஃது அறுசீர்க்கழி நெடிலடியான் வந்த செய்யுள்.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

" கணிகொண் டலர்ந்த நறவேங்கை யோடு
 கமழ்கின்ற காந்த ளிதழால்
அணிகொண் டலர்ந்த வனமாலை சூடி
 யகிலாவி குஞ்சி கமழ
மணிகுண் டலங்க ளிருபா லும்வந்து
 வரையாக மீது திவளத்
துணிகொண் டிலங்கு சுடர்வேலி னோடு
 வருவானி தென்கொ றுணிவே "

இஃது எழுசீர்க்கழி நெடிலடியான் வந்த செய்யுள்.

### எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

" மூவடிவி னுலிரண்டு சூழ்சுடரு நாண
 முழுதுலக மூடிமூளை வயிர நாறித்
தூவடிவி னுலிலங்கு வெண்குடையி னீழற்
 சுடரோயுன் னடிபொற்றிச் சொல்லுவதொன் றுண்டால்

சேவடிக டாமரையின் சேயிதழ்க டுண்டச்
சிவந்தனவோ சேவடியின் செங்கதிர்கள் பாயப்
பூவடிவு கொண்டனவோ பொங்கொளிகள் சூழ்ந்து
புலங்கொளா வீரலெமக்கெம் புண்ணியர்தங் கோவே"

இஃது எண்சீர்க்கழி நெடிலடியான்வந்த செய்யுள்.

**ஒன்பதின்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

"இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியி னெதிர்ந்த தாணுவை
யிலங்கு மாழியின் விலங்கியோன்
முடங்கு வாலுளை மடங்கன் மீமிசை முனிந்து சென்றுடன்
முரண்ட ராசனை முருக்கியோள்
வடங்கொண் மென்முலை நுடங்கு நுண்ணிடை மடந்தை சுந்தரி
வளங்கொள் பூமழை மகிழ்ந்தகோன்
தடங்கொ டாமரை யிடங்கொள் சேவடி தலைக்கு வைப்பவர்
தமக்கு வெந்துயர் தவிர்க்குமே."

இஃது ஒன்பதின் சீர்க்கழி நெடிலடியான்வந்த செய்யுள்.

**பதின்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

"கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு
கூடி நீடு மோடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத
நாத வென்று நின்று தாழ்
அங்க * பூவ மாதி யாய வாதி நூலி
னீதி யோது மாதி யாய
செங்கண் மாலை காலை மாலை சென்று சேர்வர்
சோதி சேர்ந்த சித்தி தானே"

இது பதின்சீர்க்கழி நெடிலடியான் வந்தசெய்யுள்.

"மற்றும்" என்பதனால் பதின்சீரின் மிக்குவருவனவு முள. அவை யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க.

---

* பூர்வமென்றும் பாடம்.

"வேனெடுங்கண் ணி" என்பதும், "கரிக்கைக் கவான் மருப்பேர் முலைமாதர்" என்பதும் மகடூஉ முன்னிலை.

"கழிநெடிலே" என்பது, இவை யெல்லாங் கழிநெடிலடி யாம் எ-று.

"விரிக்குநெடிலடி" என்று சிறப்பித்தவதனால் எண் சீரின்மிக்க சீரான்வருமடிகள் சிறப்பில வெனக்கொள்க.

என்னை:—

"இரண்டு முதலா வெட்டி ருகத்
திரண்ட சீரா னடிமுடி வுடைய
விறந்து வரினு மடிமுடி வுடைய
சிறந்த வல்ல செய்யு ளுள்ளே"

என்றார் காக்கைபாடினியார்.

**நான்குபாக்களுக்கு முரிய அடியின் சிறுமையும், பெருமையும்.**

14. வெள்ளைக் கிரண்டடி வஞ்சிக்கு மூன்றடி மூன்றகவற்
கெள்ளப் படாக்கலிக் கீரிரண் டாகு மிழிபுரைப்போர்
உள்ளக் கருத்தி னளவே பெருமையொண் போதலைத்த
கள்ளக் கருநெடுங் கட்சுரி மென்குழற் காரிகையே.

இ-கை. அவ்வடி வரையறையான்வந்த நான்கு பாவிற்குஞ் சிறுமை பெருமை யுணர்த்து-ற்று.

"வெள்ளைக்கிரண்டடி" எ-து-வெண்பாவிற்கு இரண்டடியே சிறுமை எ-று.

"வஞ்சிக்கு மூன்றடி" எ-து-வஞ்சிப்பாவிற்கு மூன்றடியே சிறுமை எ-று.

"மூன்றகவற்கு" எ-து-ஆசிரியப்பாவிற்கு மூன்றடியே சிறுமை எ-று.

"எள்ளப்படாக் கலிக்கீரிரண்டாகும்" எ-து-கலிப்பாவிற்கு நான்கடியே சிறுமை எ-று.

"இழிபு" எ-து-நான்குபாவிற்குஞ் சிறுமை எ-று.

"உரைப்பொருள்ளக் கருத்தினளவேபெருமை" எ-து:— நான்குபாவிற்கும்பெருமைக்கெல்லைபாடுவோனது பொருண் முடிவுக்குறிப்பே வரையறையில்லை எ-று.

"ஒண்போதலைத்த...காரிகையே" எ-து - மகடூஉமுன் னிலை.

"எள்ளப்படாக் கலிக்கு" என்று சிறப்பித்த வதனால் துள்ளலோசையிற் சிறிதும் வழுவாது நாற்சீர் நாலடியான் வருவது தரவுகொச்சகக் கலிப்பாவென்றும், துள்ளலோசை யிற் சிறிதுவழுவி நாற்சீர் நாலடியான் வருவது கலிவிருத்த மென்றும் தெரிந்துணரப்படும் எனக்கொள்க.

"வெள்ளைக் கிரண்டா மகவற்கு மூன்று கலிக்கடி நான் கெள்ளப் படாவஞ்சிப் பாவிற்கு மூன்று மிழிபு" என்று பாக்களைமுறையிற் கூறாது தலைதடுமாற்றமாகக் காரிகைசொ ல்ல வேண்டிய தென்னையோவெனின், தலைதடுமாற்றந்தந்து புணர்ந்துரைத்தலென்பது தந்திரவுத்தியாகலின். அன்றியும், மயேச்சுரர் முதலாகிய ஒருசாராசிரியர் வஞ்சிப்பா இரண்ட டியானும் வரப்பெறும் என்றாரென்பதூஉம் ஆசிரியப்பா இரண்டடிச் சுரிதகமாய் வரப்பெறும் என்றாரென்பதூஉம் அறிவித்தற்கு எனக்கொள்க.

என்னை:—

" வெண்பா வாசிரியங் கலியே வஞ்சியென
நுண்பா வுணர்ந்தோர் நுவலுங் காலை
யிரண்டு மூன்று நான்கு மிரண்டுந்
திரண்ட வடியின் சிறுமைக் கெல்லை "

என்றெடுத்தோதிய மயேச்சுரர் வஞ்சிச் சிறுமைக்குக் காட்டும் பாட்டு:—

## வஞ்சிப்பா.

" பூந்தண்சினை மலர்மல்கிய பொழிற்பிண்டி
வேந்தன்புகழ் பரவாதவர் வினைவெல்லார்

அதனால்,

அறிவன தடியிணை பரவிப்
பெறுகுவர் யாவரும் பிறவியி னெறியே "

இதனை முச்சிரடி வஞ்சியாக அலகிட்டு இரண்டடியபா மாறுகண்டு கொள்க.

என்னை:—

" ஒருதொடை யீரடி வெண்பாச் சிறுமை
யிருதொடை மூன்று மடியி னிழிந்து
வருவன வாசிரிய மில்லென மொழிப "

" வஞ்சியு மப்பா வழக்கின வாகும் "

" நான்சா மடியினு மூன்றுந் தொடையினுந்
தாழ்ந்து கலிப்பா தழுவுத லிலவே "

" உரைப்போர் குறிப்பினை நீக்கிப் பெருமை
வரைத்தித் துணையென வைத்துரை யில்லென்
றுரைத்தனர் மாதோ வுணர்ந்தி சினோரே "

என்றார் காக்கைபாடினியார்.

## உதாரண இலக்கிய முதனினைப்புக்காரிகை.

15. அறத்தா றிதுவென வெள்ளைக் கிழிபக வற்கிழிபு
குறித்தாங் குரைப்பின் முதுக்குறைந் தாங்குறை யாக்கலியின்
திறத்தா றிதுசெல்வப் போர்ச்செங்கண் மேதிவஞ் சிச்சிறுமை
புறத்தாழ் கருமென் குழற்றிரு வேயன்ன பூங்கொடியே.

இ-கை. அவ்வடி வரையறையான் வந்த இலக்கியங்கட்கு முதனினைப்புணர்த்து—ற்று.

"அறத்தாறிதுவென வெள்ளைக்கிழிபு" எ-து:—

## குறள் வெண்பா.

" அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை "

இஃது இரண்டடியான் வெண்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

"அகவற்கிழிபு குறித்தாங்குரைப்பின் முதுக்குறைந் தாம்" என்பது:—

**ஆசிரியப்பா.**

" முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலைய னொள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே "

இது மூன்றடியான் ஆசிரியப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

"குறை யாக்கலியின் றிறத்தா றிதுசெல்வப் போர்" எ-து:—

**தரவுகொச்சகக்கலிப்பா.**

* "செல்வப்போர்க் கதக்கண்ணன்-மருமம்பாய்ந் தொளித்ததே"

இது நான்கடியாற் கலிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

"செங்கண்மேதி வஞ்சிச் சிறுமை" எ-து:—

**வஞ்சிப்பா.**

" செங்கண்மேதி கரும்புழக்கி
அங்கணீலத் தலரருந்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுயிலும்

செழுநீர்,

நல்வயற் கழனி யூரன்
புகழ்த லானுப் பெருவண் மையனே "

இது மூன்றடியான் வஞ்சிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

"புறத்தாழ் கருமென் குழற்றிருவேயன்ன பூங்கொடியே" எ-து, மகடூஉமுன்னிலை. ஆங்கு-அசை.

**தொடை.** தொடைவகை

16. எழுவா யெழுத்தொன்றின் மோனை யிறுதி யியைபிரண்டாம்
வழுவா வெழுத்தொன்றின் மாதே யெதுகை மறுதலைத்த
மொழியான் வரினு முரணடி தோறு முதன்மொழிக்கண்
அழியா தளபெடுத் தொன்றுவ தாகு மளபெடையே.

---

* இச்செய்யுளை 31 வது பக்கத்திற்காண்க.

இ-கை.

| | |
|---|---|
| அடிமோனை | கூழைமோனை |
| இணைமோனை | மேற்கதுவாய்மோனை |
| பொழிப்புமோனை | கீழ்க்கதுவாய்மோனை |
| ஒரூஉமோனை | முற்றுமோனை—எனவும், |
| அடியியைபு | கூழையியைபு |
| இணையியைபு | மேற்கதுவாயியைபு |
| பொழிப்பியைபு | கீழ்க்கதுவாயியைபு |
| ஒரூஉவியைபு | முற்றியைபு—எனவும், |
| அடியெதுகை | கூழையெதுகை |
| இணையெதுகை | மேற்கதுவாயெதுகை |
| பொழிப்பெதுகை | கீழ்க்கதுவாயெதுகை |
| ஒரூஉவெதுகை | முற்றெதுகை—எனவும், |
| அடிமுரண் | கூழைமுரண் |
| இணைமுரண் | மேற்கதுவாய்முரண் |
| பொழிப்புமுரண் | கீழ்க்கதுவாய்முரண் |
| ஒரூஉமுரண் | முற்றுமுரண்—எனவும், |
| அடியளபெடை | கூழையளபெடை |
| இணையளபெடை | மேற்கதுவாயளபெடை |
| பொழிப்பளபெடை | கீழ்க்கதுவாயளபெடை |
| ஒரூஉவளபெடை | முற்றளபெடை—எனவும், |

அந்தாதித்தொடை, இரட்டைத்தொடை, செந்தொடை எனவுங்,

கிடந்த தொடையும், தொடைவிகற்பமு மா மாறுணர்த்துவானெடுத்துக்கொண்டார்.

அவற்றுள்-இக்காரிகை அடிமோனையும், அடியியைபும், அடியெதுகையும், அடிமுரணும் அடியளபெடையு மா மாறுணர்த்து.ற்று.

"எழுவாயெழுத்தொன்றின்மோனை" எ-து:- அடிதோறுமுதலெழுத்தொன்றி வரத்தொடுப்பது அடிமோனைத்தொடையெனப்படும் எ-று. எழுவாயெனினும், ஆதியெனினும், முதலெனினுமொக்கும். மோனையெனினும், முதற்றொடை

யெனினுமொக்கும். "இறுதியியைபு" எ-து:—அடிதோறும் றுதிக்கண்ணின் றவெழுத்தானும், சொல்லானும் ஒன்றிவரத் தொடுப்பது அடியியைபுத்தொடை யெனப்படும் எ-று.

"இரண்டாம்வழுவாவெழுத்தொன்றினெதுகை" எ-து:— அடிதோறு முதற்கண் இரண்டாமெழுத் தொன்றிவரத்தொடுப்பது அடியெதுகைத்தொடை யெனப்படும் எ-று.

"மாதே" எ-து—மகடூஉமுன்னிலை. "இரண்டாமெழுத் தொன்றினெதுகை" என்னாது "வழுவாவெழுத்து" என்று மிகுத்துச்சொல்லியவதனல், இரண்டா மெழுத்தொன்றிவரி னுமுதலெழுத்தெல்லாந் தம்முள் ஒத்த வளவினவாய் வந்து கட்டு என்பதற்குப் பட்டு என்பதல்லது பாட்டுஎன்பது எதுகையாகாது; காட்டு என்பதற்குப் பாட்டுஎன்பதல்லது பட்டு என்பது எதுகையாகாது எனக்கொள்க.

"மறுதலைத்த மொழியான் வரினுமுரண்" எ-து:— அடிதோறு முதற்கட் சொல்லானும், பொருளானு மறுதலைப் படத்தொடுப்பது அடிமுரண்டொடையெனப்படும் எ-று.

"மொழியான்வரினும்" என்றவும்மையாற் பொருளான் வரினுமென்பதாயிற்று. "அடிதோறும்" எ-து-மத்திமதீபம் எனக்கொள்க.

"முதன்மொழிக் கண்ணழியாதளபெடுத்தொன்றுவதா குமளபெடையே" எ-து:—அடிதோறு முதற்கண் உயிரா னும், ஒற்றானுமளபெடுத்தொன்றி வரத்தொடுப்பது அடி யளபெடைத்தொடை யெனப்படும் எ-று.

"அழியாது" என்றுமிகுத்துச்சொல்லியவதனல் நான்கு யிரளபெடையும், இரண்டொற்றளபெடையுந் தம்முள் ஒன் றிவரத்தொடுப்பது சிறப்புடைத்து. தொடைவிகற்பத்துள் நான்குயிரளபெடையும், இரண்டொற்றளபெடையுந் தம் முண்மறுதலைப்படத்தொடுப்பினும் இழுக்காது.. எனக்கொ ள்க.

என்னை:—

" முதலெழுத் தொன்றின் மோனை யெதுகை
முதலெழுத் தளவோ டொத்தது முதலா
வஃதொழித் தொன்றி னாகு மென்ப "

என்றார் பல்காயனார்.

" இறுவா யொப்பினஃ தியைபென மொழிப "

என்றார் கையனார்.

" மொழியினும் பொருளினு முரணுதன் முரணே "

என்றார் தொல்காப்பியனார்.

" அளபெடைத் தொடைக்கே யளபெடை யொன்றும் "

என்றார் நத்தத்தனார்.

17. அந்த முதலாத் தொடுப்பதந் தாதி யடிமுழுதும்
வந்த மொழியே வருவ திரட்டை வரன்முறையான்
முந்திய மோனை முதலா முழுதுமொவ் வாதுவிட்டால்
செந்தொடை நாமம் பெறுநறு மென்குழற் றேமொழியே

இ-கை. அந்தாதித்தொடையும், இரட்டைத்தொடையும், செந்தொடையுமா மாறுணர்த்து-ற்று.

"அந்தமுதலாத் தொடுப்பதந்தாதி" எ-து:—அடிதோறுமிறுதிக்கண்ணின்ற எழுத்தானும், அசையானும், சீரானும், அடியானுமற்றையடிக்காதியாகத் தொடுப்பது அந்தாதித்தொடை எனப்படும் எ-று.

"அடிமுழுதும் வந்தமொழியே வருவதிரட்டை வரன் முறையான்" எ-து:—ஓரடி முழுதும் ஒரு சொல்லே வரத் தொடுப்பது இரட்டைத்தொடை எனப்படும் எ-று.

"வரன் முறையான்" என்று மிகுத்துச் சொல்லியவதனால், ஈற்றெழுத்தொன்று குன்றினுமிழுக்காது; நாற்சீரின் மிக்கு வரப்பெறாது எனக்கொள்க.

"முந்திய மோனை முதலாமுழுது மொவ்வாதுவிட்டாற் செந்தொடை நாமம் பெறும்" எ-து:—மேற்சொல்லப்பட்ட மோனை முதலாகிய தொடையும், தொடைவிகற்பமும் போலாது வேறுபடத் தொடுப்பது செந்தொடை யெனப்படும் எ-று.

"முந்தியமோனை" என்றுசிறப்பித்தவதனால் அசையும், சீருந்தம்முண் மறுதலைப்படத் தொடுப்பது சிறப்புடைத்தெனக்கொள்க.

"நறுமென்குழற் றேமொழியே" எ-து. மகடூஉமுன்னிலை.

என்னை:—

" அடியுஞ் சீரு மசையு மெழுத்து
முடிவு முதலாச் செய்யுண் மொழியினஃ
தந்தாதித் தொடையென் றறைதல் வேண்டும்"

என்றார் நத்தத்தனார்.

" ஒருசொல் லடிமுழுவதும் வருவ திரட்டை"

என்றார் மயேச்சுரர்.

" சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற்
சொல்லியற் புலவரது செந்துடை யென்ப"

என்றார் தொல்காப்பியனார்.

" அசையினுஞ் சீரினு மிசையினு மெல்லா
மிசையா தாவது செந்தொடை தானே"

என்றார் காக்கைபாடினியார்.

## உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை.

18. மாவும்புண் மோனை யியைபின் னகைவடி யேரெதுகைக்
கேவின் முரணு மிருள்பரந் தீண்டள பாஅவளிய
ஓவிலந் தாதி யுலகுட னுமொக்கு மேயிரட்டை
பாவருஞ் செந்தொடை பூத்தவென் றாகும் பணிமொழியே.

இ-கை. அடிமோனை முதலாகிய தொடைகளான் வந்த விலக்கியங்கட்கு முதனினைப்புணர்த்து-ற்று.

"மாவும்புண் மோனை" எ-து:—

### நேரிசை யாசிரியப்பா.

"மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடை
மாயோ ளின்னுயிர்ப் புறத்திறுத் தற்றே"

இஃது அடிதோறு முதலெழுத்தொன்றிவரத் தொடுத்தமையான் அடிமோனைத் தொடை எ-று.

இயைபின் னகை எ-து:—

### நேரிசை யாசிரியப்பா.

"இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளி கூடலு மணங்கே
அரிமதர் மழைக்கணு மணங்கே
திருநுதற் பொறித்த திலதமு மணங்கே."

இஃது அடிதோறு மிறுதிச்சீரொன்றிவரத் தொடுத்தமையான் அடியியைபுத்தொடை எ-று.

"வடியே ரெதுகைக்கு" எ-து:—

### இன்னிசை வெண்பா.

வடியேர்கண் ணீர்மல்க வான்பொருட்கட் சென்றார்
கடியார் கனங்குழாய் காணார்கொல்காட்டின்
இடியின் முழக்கஞ்சி யீர்ங்கவுள் வேழம்
பிடியின் புறத்தசைத்த கை.

இஃது அடிதோறு மிரண்டாமெழுத் தொன்றிவரத் தொடுத்தமையான் அடியெதுகைத்தொடை எ-று.

"ஏவின் முரணு மிருள்பரந்து" எ-து:—

### நேரிசையாசிரியப்பா.

" இருள்பரந் தன்ன மாநீர் மருங்கில்
நிலவுகுவித் தன்ன வெண்மண லொருசிறை
இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னி னன்ன நுண்டா திறைக்குஞ்
சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணு முடையவா லணங்கே"

இஃது அடிதோறு முதற்கண்ணே மறுதலைப்படத்தொடுத்தமையான் அடிமுரண்டொடை எ-று.

"ஈண்டள பாஅவளிய" எ-று:—

### பஃறொடை வெண்பா.

" ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோ
டீஇ ரிரையுங்கொண் டீரளைப் பள்ளியுட்
டூஉந் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றேஎள்
மேஎ வலைப்பட்ட நம்போ னறுநுதால்
ஓஒ வுழக்குந் துயர்"

இஃது அடிதோறு முதற்கண்ணேயளபெடுத்தொன்றி வரத்தொடுத்தமையான் அடியளபெடைத்தொடை எ-று.

"ஒவிலந்தாதி யுலகுடனும்" என்பது:—

### நேரிசையாசிரியப்பா.

" உலகுடன் விளக்கு மொளிதிக ழவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவன்
ஆசனத் திருந்த திருந்தொளி யறிவனை
அறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்த ரீதெனப்
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே"

இது நாற்கந்தாதித் தொடையும் வந்தசெய்யுள்.

"ஒக்கு மேயிரட்டை" என்பது:—

இன்னிசைச் சிந்தியல்வெண்பா.

" ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெரி யொக்குமே யொக்குங்
குளக்கொட்டிப் பூவி னிறம் "

இஃது ஓரடிமுழுதும் ஒருசொல்லே வரத்தொடுத்தமையால் இரட்டைத்தொடை எ-று.

"பாவருஞ் செந்தொடை பூத்தவென் றாகும்" எ-து:—

நேரிசை யாசிரியப்பா.

" பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே "

இது மோனை முதலாகிய தொடையும், தொடைவிகற்பமும் போலாது வேறுபடத் தொடுத்தமையாற் செந்தொடை எ-று.

"பணிமொழியே" எ-து, மகடூஉ முன்னிலை.

19. இருசீர் மிசையிணை யாகும் பொழிப்பிடை யிட்டொருவாம்
இருசீ ரிடையிட்ட கூழை முதலிறுவாய்
வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை கீழ்க்கதுவாய்
வருசீர் முழுவது மொன் றின்முற் றுமென்ப மற்றவையே

இ-கை. இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடைவிகற்பமுமாமாறுணர்த்து-ற்று.

"இருசீர் மிசையிணை யாகும்" எ-து:—முதலிரு சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது இணையெனப்படும் எ-று.

"பொழிப்பிடையிட்டு" எ-து:—முதற்சீர்க்கண்ணும், மூன்றாஞ் சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது பொழிப்பெனப்படும் எ-று.

"ஒருவா மிருசீ ரிடையிட்டது" எ-து;— நடுவிருசீர்க் கண்ணுமின்றி முதற்சீர்க்கண்ணும், இறுதிச்சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது ஒரூஉவெனப்படும் எ-று.

"ஈறிலி கூழை" என்பது:— இறுதிச்சீர்க்கணின்றி யொழிந்தமூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது கூழை யெனப்படும் எ-று.

"முதலிறுவாய், வருசீ ரயலில மேல்கீழ்வகுத்தமை தீர் கதுவாய்" எ-து:—முதலயற்சீர்க்கணின்றி யொழிந்த மூன்று சீர்க்கண்ணும், மோனை முதலாயினவரத் தொடுப்பது மேற் கதுவாயென்றும், ஈற்றயற்சீர்க்கணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனைமுதலாயின வரத்தொடுப்பது கீழ்க்க துவாய் என்றும் சொல்லப்படும்—எ-று.

இது நிரனிறையெனக் கொள்க.

என்னை:—

"கடையயன் முதலயல் கதுவாய் கீழ்மேல்"

என்றார் அவிநயனார்.

முதலயற்சீர்க்கணில்லாததனைக் கீழ்க்கதுவாயென்றும், ஈற்றயற்சீர்க்கணில்லாததனைமேற்கதுவாயென்றும் வேண்டி னார் கையனார் முதலாகிய ஒரு சாராசிரியரென்பதறிவித்தற்கு "மைதீர்கதுவாய்" என்றுவிதப்புரைத்தார் எனக்கொள்க.

"வருசீர் முழுவது மொன்றின்முற் றுமென்ப" எ-து:- எல்லாச் சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப் பது முற்றெனப்படும் எ-று.

"மற்றவையே" எ-து:—இணைமோனை முதலிய முப் பத்தைந்து தொடைவிகற்பமும் எ-று. இஃது இறுதிவிளக் கெனக்கொள்க.

"சீர்முழுது மொன்றின்முற்றும்" என்றது "வருசீர்" என்று சிறப்பித்தவதனால், இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடைவிகற்பமும் அளவடிக்கண்ணே வழங்கப்படுமென்பதூஉம், இணையியைபு முதலாகிய எழுவிகற்பமும் இறுதிச்சீரே முதற்சீராகக்கொண்டு வழங்கப்படுமென்பதூஉம் அறிவித்தற்கெனக் கொள்க.

என்னை:—

" இருசீர் மிசைவரத் தொடுப்ப திணையே
முதலொடு மூன்றுஞ் சீர்த்தொடை பொழிப்பே
சீரிரண் டிடைதபத் தொடுப்ப தொரூஉத்தொடை
மூவொரு சீர்முதல் வரத்தொ டுப்பது
கூழை யென்மனார் குறியுணர்ந் தோரே"

" முதலயற் சீரொழித் தல்லன மூன்றின்
மிசைவரத் தொடுப்பது மேற்கது வாயே"
ஈற்றயற் சீரொழித் தெல்லாந் தொடுப்பது
கீழ்க்கது வாயின் கிழமைய தாகும்"
சீர்தொறுந் தொடுப்பது முற்றெனப் படுமே."

## உதாரண இலக்கிய முதனினைப்புக்காரிகை.

20. மோனை விகற்ப மணிமலர் மொய்த்துட னுமியையிற்
கேனை யெதுகைக் கினம்பொன்னி னன்ன வினிமுரணிற்
கான விகற்பமுஞ் சீரடிப் பேர தளபெடையின்
றூன விகற்பமுந் தாட்டா மரையென்ப தாழ்குழலே.

இ-கை. இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பங்களால் வந்த இலக்கியங்கட்கு முதனினைப் புணர்த்து-ற்று.

"மோனை விகற்ப மணிமலர்" எ-து:—

### நேரிசை யாசிரியப்பா.

" அணிம லரசோகின் றளிர்நலங் கவற்றி
அரிக்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீறடி
அம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி
அகன்ற வல்கு லந்நுண் மருங்குல்

அரும்பிய கொங்கை யவ்வளை யமைத்தோள்
அவிர்மதி யனைய திருநுத லரிவை
அயில்வே லனுக்கி யம்பலத் தமர்ந்த
கருங்கய னெடுங்க ணேக்கமென்
திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே"

இதனுள் இணைமோனை முதலாகிய எழுவிகற்பமும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க.

"மொய்த்துட னுமியையிற்கு" எ-து:—

### நேரிசை யாசிரியப்பா.

"மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே
மற்றத னயலே முத்துறழ் மணலே
நிழலே யினியத னயலது கடலே
மாதர் நகிலே வல்லே யியலே
வில்லே நுதலே வேற்கண் கயலே
பல்லே தளவம் பாலே சொல்லே
புயலே குழலே மயிலே யியலே
அதனல்-இவ்வயி னிவ்வுரு வியங்கலின்
எவ்வயி னேரு மிழப்பர்தந் நிறையே"

இதனுள் இணையியைபு முதலிய எழுவிகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

"எனையெதுகைக் கினம்பொன்னி னன்ன" எ-து:—

### நேரிசை யாசிரியப்பா.

"பொன்னி னன்ன பொறிசுணங் கேந்திப்
பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி
மின்னிவ ரொளிவடந் தாங்கி மன்னிய
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி
என்னையு மிடுக்கண் டுன்னுவித் தின்னடை
அன்ன மென்பெடை போலப் பன்மலர்க்
கன்னியம் புன்னை யின்னிழற் றுன்னிய

மயிலே சாயல் வாணுதல்
அயில்வே லுண்கணெம் மறிவு தொலைத்தனவே"

இதனுள் இணையெதுகை முதலாகிய எழுவிகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

"இனி முரணிற் கானவிகற்பமுஞ் சீறடிப்போது" என்பது:—

## நேரிசை யாசிரியப்பா.

"சீறடிப் போதக லல்கு லொல்குபு
சுருங்கிய நுசுப்பிற் பெருகு வடந்தாங்கிக்
குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணும்
இருக்கையு நிலையு மேந்தெழி லியக்கமும்
துவர்வாய்த் தீஞ்சொலு முவந்தெனை முனியாது
என்று மின்னண மாகுமதி
பொன்றிகழ் நெடுவேற் போர்வல் லோயே"

இதனுள் இணைமுரண் முதலாகிய எழுவிகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

"அளபெடையின் றனவிகற்பமுந் தாட்டாஅ மரையென்ப" எ-து:—

## நேரிசையாசிரியப்பா.

"தாஅட் டாஅ மரைமல ருழக்கிப்
பூஉக் குவளைப் போஒ தருந்திக்
காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்
மாஅத் தாஅண் மோஒட் டெருமை
தேஎம் புனலிடைச் சேஒர் பாஅல்
மீஇ ஒஅர்ந் துகளுஞ் சீஇர்
எஎ ஞஅ நீஇ ணீஇர்
ஊரன் செய்த கேண்மை
ஆய்வளைத் தோளிக் கலரா னவே"

இதனுள், இணை யளபெடை முதலாகிய எழுவிகற்ப மும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

"தானவிகற்பம்", என்றுசிறப்பித்தவதனால் இரண்ட ளபெடையும் வரப்பெறும் எனக்கொள்க. "தாழ்குழலே" எ-து-மகடூஉமுன்னிலை.

முதலாவதுறுப்பியன் முற்றிற்று.

---

"கந்தமுந் தேனுஞ் சுருக்கமுங் காதற் குறில்குறிலே
சந்தமுந் தீரசை தேமாந்தண் குன்றந்தண் சீர்திருவுங்
கொந்தவிழ் கோதாய் குறடிணை வெள்ளைக் கறத்தெழுவாய்
அந்தமு மாவு மிருசீரு மோனையு மாமுறுப்பே.

இஃது உறுப்பியற் செய்யுட்களின் முதனினைப்புக் காரிகை.

---

இரண்டாவது.

## செய்யுளியல்.

1. வெண்பா வகவல் கலிப்பா வளவடி வஞ்சியென்னும்
ஒண்பா வடிகுறள் சிந்தென் றுரைப்ப வொலிமுறையே
திண்பா மலிசெப்பல் சீர்சாலகவல் சென்றோங்கு துள்ளல்
நண்பா வமைந்த நலமிகு தூங்க னறுநுதலே.

என்பது - காரிகை.

இவ்வியல் என்ன பெயர்த்தோவெனின் வெண்பா, வெள்ளொத்தாழிசை, வெண்டுறை, வெளிவிருத்தம்; ஆசிரியப்பா, ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம்; கலிப்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம்; வஞ்சிப்பா, வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம்; மருட்பா எனக்கிடந்த செய்யுட்களையாமா றுணர்த்திற்று தலாற் "செய்யுளியல்" என்னும் பெயர்த்து.

இவ்வியலுள் இக்காரிகை யென்னுதலிற்றோவெனின், வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சியென்னும் நான்கு பாவிற்கும் அடியும் ஓசையுமாமாறுணர்த்துஃற்று.

"வெண்பாவகவல் கலிப்பாவளவடி" எ-து.— வெண்பாவும், ஆசிரியப்பாவும், கலிப்பாவும் நாற்சீரடியான் வரப்பெறும் எ-று.

"வஞ்சியென்னுமொண்பாவடிகுறள்சிந்தென்றுரைப்ப" எ-து:—வஞ்சிப்பா இருசீரடியானும், முச்சீரடியானும் வரப்பெறுமென்று சொல்லுவர் புலவர் எ-று.

"வஞ்சியென்னுமொண்பா" என்று சிறப்பித்தவதனால் வெண்பாவின் ஈற்றடியும், நேரிசை யாசிரியப்பாவின் ஈற்றயலடியும், கலிவெண்பாவின் ஈற்றடியும் முச்சீரான் வரப்பெறுமென்றும், இணைக்குறளாசிரியப்பாவின் இடையடிகள் இரண்டும், பலவும், குறளடியானும், சிந்தடியானும் வரப்பெறுமென்றும், ஒருசார் அம்போதரங்கவுறுப்பும் இருசீரடியானும், முச்சீரடியானும் வரப்பெறு மென்றுங் கொள்க.

அராகவுறுப்புகள் நாற்சீரின்மிக்கு வருவனவுமுளவெனக்கொள்க.

அவைபோக்கித் தத்தம் இலக்கணச் சூத்திரத்துள்ளே காட்டுதும்.

என்னை:—

"கலியொடு வெண்பா வகவல் கூறி
னளவடி தன்னா னடக்குமற் றவையே"
"சிந்தடி குறளடி யென்றிரண் டடியான்
வஞ்சி நடக்கும் வழக்கினை யுடைய"

என்றாராகலின்.

"ஒலிமுறையே திண்பாமலிசெப்பல் சீர்சலாகவல்சென்றோங்குதுள்ள னண்பாவமைந்த நலமிகுதூங்கல்" எ-து:—

வெண்பா, செப்பலோசையான் வரும்; ஆசிரியப்பா அகவலோசையான் வரும்; கலிப்பா, துள்ள லோசையான்வரும்; வஞ்சிப்பா தூங்கலோசையான் வரும் எ-று.

"நறுநுதலே" எ-து-மகடூஉமுன்னிலை. "திண்பாமலி செப்பல் என்று சிறப்பித்தவதனால், செப்பலோசை மூன்று வகைப்படும்; ஏந்திசைச்செப்பலும், தூங்கிசைச்செப்பலும், ஒழுகிசைச் செப்பலும் என.

என்னை:—

" வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
யேந்திசைச் செப்ப லென்மனார் புலவர்"

" இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
தூங்கிசைச் செப்ப லென்மனார் புலவர்
வெண்சீ ரொன்றலு மியற்சீர் விகற்பமு
மொன்றிய பாட்டே யொழுகிசைச் செப்பல்"

என்றாகலின்.

அவற்றிற்குச்செய்யுள் வருமாறு:—

### குறள்வெண்பா.

" யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

இது வெண்சீர் வெண்டளையான் வந்தமையால் ஏந்திசைச் செப்பலோசை.

### குறள்வெண்பா.

* " பாலொடு—வாலெயி றூறிய நீர்"

இஃது இயற்சீர் வெண்டளையான் வந்தமையால், தூங்கிசைச் செப்பலோசை.

### குறள்வெண்பா.

" கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும் "

---

* இச்செய்யுளை 26வது பக்கத்திற்காண்க.

இஃது இரண்டு தளையும் விரவிவந்தமையால் ஒழுகிசைச்செப்பலோசை. "சீர்சாலகவ்ல்" என்று சிறப்பித்தவதனல் அகவலோசை மூன்று வகைப்படும்; ஏந்திசையகவலும், தூங்கிசையகவலும், ஒழுகிசையகவலும் என.

என்னை:—

"நேர்நே ரியற்றளை யான்வரு மகவலு
நிரைநிரை யியற்றளை யான்வரு மகவலு
மாயிரு தளையுமொத் தாகிய வகவலு
மேந்த றூங்க லொழுக லென்றிவை
யாய்ந்த நிரனிறை யாகுமென்ப"

என்றூராகலின்.

அவற்றிற்குச்செய்யுள் வருமாறு:—

**நேரிசை யாசிரியப்பா.**

† "போது சாந்தம்—துன்னுவாரே"

இது நேரொன்றாசிரியத்தளையான் வந்தமையால் ஏந்திசை யகவலோசை.

**நேரிசை யாசிரியப்பா.**

†† "அணிநிழல்—பரிசறுப்பவரே"

இது நிரையொன்றாசிரியத்தளையான் வந்தமையால் தூங்கிசை யகவலோசை.

**நேரிசை யாசிரியப்பா.**

‡ "குன்றக்குறவன்—சுணங்கே."

இஃது இரண்டு தளையும் விரவிவந்தமையால் ஒழுகிசை யகவலோசை.

"சென்றேங்குதுள்ளல்" என்றுசிறப்பித்தவதனல், துள்ளலோசை மூன்று வகைப்படும்; ஏந்திசைத் துள்ளலும், அகவற்றுள்ளலும், பிரிந்திசைத்துள்ளலும் என.

என்னை:—

"ஏந்திசைத் துள்ளல் கலித்தளை யியையின்
வெண்டளை தன்றளை யென்றிரண் டியையி

† இச்செய்யுளை 19-வது பக்கத்திற்காண்க.
†† இச்செய்யுளை 19-வது பக்கத்திற்காண்க.
‡ இச்செய்யுளை 25-வது பக்கத்திற்காண்க.

ஞென்றிய வகவற் றுள்ளலென் றேதுப"
"தன்றளை பிறதளை யென்றிவை யனைத்தும்
பொருந்தி வரினே பிரிந்திசைத் துள்ளல்"

என்றாராகலின்.

அவற்றிற்குச்செய்புள் வருமாறு:—

**தரவு கோச்சகக் கலிப்பா.**

"முருகவிழ்தா மரைமலர்மேன் முடியிமையோர் புடைவரவே
வருசினநா தருமறைநூல் வழிபிழையா மனமுடையார்
இருவினைபோய் விழமுனியா வெதிரியகா தியையறியா
நிருமலரா யருவினராய் நிலவுவர்சோ தியினிடையே"

இது கலித்தளையான் வந்தமையால் ஏந்திசைத்துள்ளலோசை.

**தரவுகோச்சகக்கலிப்பா.**

$ "செல்வப் போர்......ஒளித்ததே"

இது வெண்சீர்வெண்டளையும், கலித்தளையும் விரவி வந்தமையால் அகவற்றுள்ளலோசை.

**கலிப்பா.**

"குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇத் தாங்குவனத் தேறப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப

எனவாங்கு,

ஆனொடு புல்லிப் பெரும்புதன் முனையுங்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே"

இது பலதளையும் விரவி வந்தமையால், பிரிந்திசைத்துள்ளலோசை.

"நண்பாவமைந்த நலமிகு தூங்கல்" என்றுசிறப்பித்தவதனால், தூங்கலோசை மூன்று வகைப்படும்: ஏந்திசைத் தூங்கலும், அகவற்றூங்கலும், பிரிந்திசைத் தூங்கலும் என.

---

$ இச்செய்யுளை 31 வது பக்கத்திற்காண்க.

என்னை:—

" ஒன்றிய வஞ்சித் தளையே வரினு
மொன்றா வஞ்சித் தளையே வரினு
மென்றிவை யிரண்டும் பிறவு மயங்கினு
மேந்த லகவல் பிரிந்திசைத் தூங்கலென்
றாய்ந்த நிரனிறை யாகு மென்ப "

என்றாகலின்.

அவற்றிற்குச்செய்யுள் வருமாறு:—

வஞ்சிப்பா.

" வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளிணை
நினைத்தன்பொடு தொழுதேத்தினர்
நாளு,
மயலார் நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே "

இஃது ஒன்றிய வஞ்சித்தளையான் வந்தமையால் ஏந்திசைத் தூங்கலோசை.

வஞ்சிப்பா.

" வானோர்தொழ வண்டாமரைத்
தேனார்மலர் மேல்வந்தரு
ளானவருள் கூறறிவினைக்
காணார்,
மலர்கொண் டேத்தி வணங்குநர்
பலர்புகழ் முத்தி பெறுகுவர் விரைந்தே "

இஃது ஒன்றாத வஞ்சித்தளையான் வந்தமையால் அகவற் றூங்கலோசை.

வஞ்சிப்பா.

† " மந்தாநிலம்......மகிழ்ந்தே "

இது பலதளையும் விரவிவந்தமையாற் பிரிந்திசைத் தூங்கலோசை.

2. வளம்பட வென்பது வெள்ளைக் ககவற் குதாரணஞ்செங்
களம்படக் கொன்று கலிக்கரி தாயகண் ணார்கொடிபோல்

† இச்செய்யுளை 30 வது பக்கத்திற்காண்க.

துளங்கிடை மாதே சுறமறி தொன்னலத் தின்புலம்பென்
றுளங்கொடு நாவல ரோதினர் வஞ்சிக் குதாரணமே.

இ—கை. அவ்வடிகளானும், ஓசைகளானும் வந்த இலக்கியங்கட்கு முதனினைப் புணர்த்து-ற்று.

"வளம்பட வென்பது வெள்ளைக்கு" எ-து:—

இன்னிசைவெண்பா.

" வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லைக்-களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில் "

இஃது அளவடியானும், செப்பலோசையானும் வந்த இன்னிசை வெண்பா.

"அகவற்குதாரணஞ்செங்களம் படக்கொன்றி" எ-து:-

நேரிசை யாசிரியப்பா.

" செங்கள படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட் டியானை
கழறொடீஇ சேஎய்க் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே "

இஃது அளவடியானும், அகவலோசையானும் வந்த நேரிசையாசிரியப்பா.

"கலிக்கரிதாய" எ-து:—

நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா.

" அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாய் வலிப்பல்யான் கேளினீ "

இது தரவு.

" அடிதாங்கு மளவின்றி யழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாய் காடென்றா ரக்காட்டுள்

துடியடிக் கயந்தலைக் கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே"

"இன்பத்தி னிகந்தொரீஇ யிலைதீய்ந்த வுலவையால்
துன்புறூஉந் தகையவே காடென்றா ரக்காட்டுள்
அன்புகொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே"

"கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
துன்னரூஉந் தகையவே காடென்றா ரக்காட்டுள்
இன்னிழ லின்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே"

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு,

இது தனிச்சொல்.

"இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத்தி சைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே"

இது சுரிதகம்.

இஃது அளவடியானும், துள்ளலோசையானும் வந்தமையால் நேரிசையொத்தாழிசைக்கலிப்பா.

"கண்ணார் கொடிபோற் றுளங்கிடை மாதே" என்பது மகடூஉ முன்னிலை.

"சுறமறி தொன்னலத்தின் புலம்பென் றுளங்கொடு நாவல ரோதினர் வஞ்சிக் குதாரணமே" என்பது:—

வஞ்சிப்பா.

"சுறமறிவன துறையெல்லாம்
இறவீன்பன வில்லெல்லாம்
மீன்றிரிவன கிடங்கெல்லாம்
தேன்றாழ்வன பொழிலெல்லாம்

எனவாங்கு,

தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு நெடுமதின் மன்ன னூரே."

இஃது இருசீரடியானும், தூங்கலோசையானும் வந்தமையால், குறளடி வஞ்சிப்பா.

வஞ்சிப்பா.

"தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோண்மேல்
பன்னலத்த கலந்தொலையப் பரிவெய்தி
என்னலத்தகை யிதுவென்ன வெழில்காட்டிச்
சொன்னலத்தகைப் பொருள்கருத்தி னிற்சிறந்தாங்
கெனப்பெரிதும்,
கலங்களு ரெய்தி விடுப்பவும்
சிலம்பிடைச் செலவுஞ் சேணிவந் தற்றே"

இது முச்சீரடியானும், தூங்கலோசையானும் வந்தமையாற் சிந்தடிவஞ்சிப்பா. "உதாரணமே" யென்பது இறுதி விளக்காகக் கொள்க.

வெண்பாவும், அதனினமும்.

3 ஈரடி வெண்பாக் குறள்குறட் பாவிரண் டாயிடைக்கட்
சீரிய வான்றனிச் சொல்லடி மூய்ச்செப்ப லோசைகுன்று
தோரிரண் டாயு மொருவிகற் பாயும் வருவதுண்டேல்
நேரிசை யாகு நெரிசுரி பூங்குழ னேரிழையே.

இ-கை. குறள்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசைவெண்பா, பஃறொடைவெண்பா, நேரிசைச்சிந்தியல் வெண்பா, இன்னிசைச்சிந்தியல் வெண்பா எனவும்,

நேரிசையாசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, நிலை மண்டிலவாசிரியப்பா, அடிமறிமண்டில வாசிரியப்பா எனவும்,

நேரிசையொத்தாழிசைக்கலிப்பா, அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பா, வண்ணகவொத் தாழிசைக் கலிப்பா; கலிவெண்பா, வெண்கலிப்பா; தரவு கொச்சகக்கலிப்பா, தரவிணைக்கொச்சகக்கலிப்பா, சிஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா, பஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா, மயங்கிசைக்கொச்சகக் கலிப்பா எனவும்,

குறளடிவஞ்சிப்பா, சிந்தடிவஞ்சிப்பா எனவும்,

புறநிலைவாழ்த்துமருட்பா, கைக்கிளைமருட்பா, வாயுறைவாழ்த்துமருட்பா, செவியறிவுறூஉமருட்பா எனவுங்கிடந்த

பாவிகற்பங்களுட் செப்பலோசையுடைத்தாய், ஈற்றடிமுச்சீ ராய், ஏனையடி நாற்சீராய், வெண்சீரும் இயற்சீரும் வந்து, வெண்டளை தட்டு, வேற்றுத்தளைவிரவாது, காசு, பிறப்பு, நாள், மலர்என்னும் வாய்பாட்டாலிறும் வெண்பாவினை அடி யானும், தொடையானும், ஓசையானும், பெயர்வேறுபாடு ணர்த்துவானெடுத்துக்கொண்டார்.

அவற்றுள், இக்காரிகை குறள்வெண்பாவும், நேரிசை வெண்பாவுமாமாறுணர்த்து-ற்று.

"ஈரடிவெண்பாக்குறள்" எ–து:—இரண்டடியான்வரும் வெண்பா குறள்வெண்பா வெனப்படும் எ-று.

என்னை:—

"தொடையொன் றடியிரண் டாகி வருமேற்
குறளின் பெயர்க்கொடை கொள்ளப் படுமே"

என்றார் காக்கைபாடினியார்.

குறள் வெண்பா.

"உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து"

"உடையார்முன் னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்"

இவை யிரண்டடியான் இரண்டு விகற்பத்தானும், ஒரு விகற்பத்தானும் வந்த குறள்வெண்பா.

"குறட்பா விரண்டாயிடைக்கட்சீரியவான் றனிச்சொல் லடிமூய்ச்செப்பலோசை குன்றாதோரிரண்டாயுமொருவிற் பாயும் வருவதுண்டே னேரிசையாகும்" எ-து:—

இரண்டுகுறள்வெண்பாவாய் நடுவுமுதற்றொடைக்கேற்ற தனிச்சொல்லால் அடி நிரம்பிச், செப்பலோசை வழுவாது முதலிரண்டடியும் ஒரு விகற்பமாய்க் கடையிரண்டடியு மற் றொரு விகற்பமாய்வரினும், நான்கடியும் ஒரு விகற்பமாய் வரினும் இருகுறணேரிசை வெண்பாவெனப்படும் எ–று.

அவை வருமாறு:—

**நேரிசை வெண்பா.**

"தடமண்டு தாமரையின் ருதா டலவன்
இடமண்டிச் செல்வதனைக் கண்டு—பெடைஞெண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்
தூழி நடாயினு னூர்"

"அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு-தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு"

இவை இரண்டு குறள்வெண்பாவாய், நடுவுமுதற்றொடைக்கேற்ற தனிச்சொல்லான் அடிநிரப்பிச், செப்பலோசை வழுவாது இரண்டு விகற்பத்தானும், ஒரு விகற்பத்தானும் வந்த இருகுறணேரிசை வெண்பா.

"சீரியவான் றனிச் சொல்லடி மூய்" என்று சிறப்பித்தவதனால், முதற்குறட்பாவினோடு தனிச்சொல்லிடை வேறுபட்டு விட்டிசைப்பின் ஒற்றுமைப்படாத உலோகங்களை, ஒற்றுமைப்படப் பற்றுசிட்டு விளக்கினாற்போல முதற்குறட்பாவினிறுதிக்கண் ஒன்றும், இரண்டும் அசைகூட்டியுச்சரிக்கப்பட்டு இரண்டு விகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் வருவனவுமுள; அவை ஒரு சாராசிடை நேரிசைவெண்பா வெனக்கொள்க. அவை வருமாறு:—

**நேரிசை வெண்பா.**

"தாமரையின் றாதாடித் தண்டுவலைச் சேறளைந்து
தாமரையி னுற்றமே தானுறுந்—தாமரைபோற்
கண்ணன் முகத்தான் கரதலத்தான் சேவடியென்
கண்ணார்வஞ் செய்யுங் கருத்து"

"கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா—வொருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம்"

இவை முதற் குறட்பாவிறுதிக்கண் ஈரசையானும், ஓரசையானும் ஆசிட்டு இரண்டு விகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பா.

" ஆர்த்த வறிவின ராண்டிளை ஞராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப—மூத்தொறூஉந்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெரிவைபோற்
போத்தறார் புல்லறிவி னார் "

" வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனல் வாய்நேர்ந்தேன்—வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ "

இவை முதற்குறட்பாவின் இறுதிக்கண் ஓரசையானும்ஈரசையானும் ஆசிட்டு ஒருவிகற்பத்தான்வந்த ஆசிடை நேரிசை வெண்பா.

"நெரிசுரி பூங்குழ னேரிழையே" எ-து-மகடூஉ முன்னிலை. "வெண்பா வகவல் கலிப்பா வஞ்சி" என்னுங் காரிகையுள், வெண்பா செப்பலோசையான் வருமென்றும், ஈண்டுஞ்செப்பலோசைகுன்றுதென்றுங் கூறியது, கூறியது கூறிற்றாகாது.

என்னை:—

" கூறியது கூறினுங் குற்ற மில்லை
வேறொரு பொருளை விளக்கு மாயின் "

என்றாராகலின்.

ஒருசார் பிறபாக்களைத் தத்தம் உதாரணவாய்பாட்டால் ஓசையூட்டும் பொழுது தத்தமோசையிற்சிறிது வழுவி வருவன வுளவாயினும், வெண்பாவிற்குச் சிறிதுஞ் செப்பலோசை வழுவலாகாதென்று யாப்புறுத்தற் பொருட்டாகவும், செப்பலோசையிற்சிறிது வழுவிவந்த நேரிசை இன்னிசை வெண்பாக்களை ஒருபுடை யொப்புமை நோக்கி

வெண்டுறைப் பாற்படுத்து வழங்கினும் இழுக்காதென்ப தறிவித்தற் காகவும் எனக்கொள்க.

என்னை:—

" தத்தம் பாவினத் தொப்பினுங் குறையினு
மொன்றொன் றெவ்வா வேற்றுமை வகையாற்
பாத்தம் வண்ண மேலா வாயிற்
பண்போல் விகற்பம் பாவினத் தாகும் "

" குறட்பா விரண்டடி நால்வகைத் தொடையான்
முதற்பா தனிச்சொலி னடிமூஉ யிரண்டு
விகற்பி னடப்பன நேரிசை வெண்பா "

என்றார் அவிநயனார்.

" இரண்டா மடியின தீறொரூஉ வெய்தி
முரண்ட வெதுகைய தாயினு மாகா
திரண்டு துணியா விடைநனி போழ்ந்து
நிரந்தடி நான்கின நேரிசை வெண்பா "

என்றார் காக்கைபாடினியார்.

உருவுகண் டெள்ளா வுடையார் குறண்மட வாய்தடமண்
டரிய வரைகீண் டிருகுற ணேரிசை தாமரையின்
கருமமு மார்த்தவும் வஞ்சியுங் காமர்தனிச் சொன்முன்னு
நெரிநுண் கருங்குழ னேரிழை யாசிட்ட நேரிசையே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே குறள் வெண்பாவிற்கும், நேரிசை வெண்பாவிற்கும், ஆசிடை நேரிசை வெண்பாவிற்குங் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.

4. ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடி யாய்த்தனிச்சொல்
இன்றி நடப்பினஃ தின்னிசை துன்னு மடிபலவாய்ச்
சென்று நிகழ்வ பஃறொடை யாஞ்சிறை வண்டினங்கள்
துன்றுங் கருமென் குழற்றுடி யேரிடைத் தூமொழியே.

இ-கை. இன்னிசை வெண்பாவும், பஃறொடை வெண்பாவுமாமா றுணர்த்து-ற்று.

"ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடியாய்த் தனிச் சொலின்றி நடப்பினஃ தின்னிசை துன்னும்" என்பது:—

ஒரு விகற்பத்தானும், பல விகற்பத்தானும் வந்து, நான்கடியாய்த் தனிச்சொலில்லாமல் நடப்பின் அஃது இன்னிசை வெண்பா வெனப்படும் எ-று.

அவை வருமாறு:—

### இன்னிசை வெண்பா.

" வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலைவைத் துணரா தார் "

" துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக் காற்றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்
சகடக்காற் போல வரும். "

இவை நான்கடியாய்த் தனிச்சொல்லின்றி ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

### இன்னிசைவெண்பா.

" கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமில்
தவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டம்
கற்றான் கடந்து விடும் "

" இன்று கொலன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம் "

இவை நான்கடியாய்த் தனிச்சொல்லின்றிப் பல விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

"ஒன்றல்லன வெல்லாம் பல" என்பது, தமிழ் நடையாகலின்.

என்னை:—

" ஒன்றல் லவைபல தமிழ்நடை வடநூ
லிரண்டல் லவைபல வென்றிசி னோரே"

என்றாராகலின்.

'துன்னும்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், இரண்டாமடியினிறுதி தனிச்சொற்பெற்று மூன்று விகற்பத்தான் வருவனவும், மூன்றாமடியினிறுதி தனிச்சொற்பெற்று இரண்டு விகற்பத்தான் வருவனவும், தனிச்சொலின்றிப் பல விகற்பாகி அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்று வருவனவும், பிறவாற்றானும் நேரிசை வெண்பாவிற் சிறிது வேறுபட்டு நான்கடியான் வருவனவும் இன்னிசைவெண்பா எனப்படும்.

## அவை வருமாறு.

### இன்னிசை வெண்பா.

" அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற்—றிங்கள்
மறுவாற்றுஞ் சான்றோ ரஃதாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்."

" மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்முள்
ஒலியும் பெருமையு மொக்கு—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்."

இவை இரண்டாமடியினிறுதி தனிச்சொற் பெற்று மூன்று விகற்பத்தான் வந்த இன்னிசைவெண்பா.

### இன்னிசை வெண்பா.

* " வளம்பட வேண்டாதார்-செய்தாரு மில். "

இது மூன்ருமடியினிறுதிதனிச்சொற்பெற்று இரண்டு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

### இன்னிசை வெண்பா.

" இன்னுமை வேண்டி னிரவொழிக—இந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக-தன்னோடு
செல்வது வேண்டி னறஞ்செய்க-வெல்வது
வேண்டின் வெகுளி விடல்"

இஃது அடிதோறுந் தனிச்சொற்பெற்று மூன்று விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

### இன்னிசை வெண்பா.

" மழையின்றி மாநிலத்தார்க் கில்லை : மழையும்
தவமிலா ரில்வழி யில்லை : தவமும்
அரசிலா ரில்வழி யில்லை : அரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்."

இஃது அடிதோறும் * ஒரூஉத்தொடைபெற்று, நேரிசைவெண்பாவிற் சிறிது வேறுபட்டு வந்தமையான் இன்னிசை வெண்பா. பிறவும் வந்துழிக்கண்டுகொள்க.

---

* வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்ருன்
விளங்காய் திரட்டினு ரில்லைக்—களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்.

இச்செய்யுள் 57-வது பக்கத்திற் செப்பலோசைக்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

* இதனுள் வந்த ஒரூஉத்தொடை:—ஒரூஉமோனையும், ஒரூஉவெதுகையு மென்றறிக.

என்னை:—

“ தனிச்சொற் றழுவல வாகி விகற்பம்
பலபல தோன்றினு மொன்றே வரினு
மிதற்பெய ரின்னிசை யென்றி சினோரே”

“ ஒருவிகற் பாகித் தனிச்சொ லின்றியு
மிருவிகற் பாகித் தனிச்சொ லின்றியுந்
தனிச்சொற் பெற்றுப் பலவிகற் பாகியுந்
தனிச்சொ லின்றிப் பலவிகற் பாகியு
மடியடி தோறு மொரூஉத்தொடை யடைனவு
மெனவைந் தாகு மின்னிசை தானே”

என்றார் பிறருமெனக்கொள்க.

‘அடிபலவாய்ச் சென்று நிகழ்வ பஃறொடையாம்’ என்பது:—

நான்கடியின் மிக்க பலவடியான் வருவது பஃறொடை வெண்பா எனப்படும். எ-று.

நேரிசை வெண்பாவிற்கும், இன்னிசை வெண்பாவிற்கும் நான்கடியே யுரிமை சொன்னமையான் நான்கடியின் மிக்க பலவடியால் வருமென்பதாற்றலாற் போந்தபொருளெனக் கண்டுகொள்க.

---

இஃது “அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்றது” என்றாரேனும், ஈற்றடி யொழிந்த வனை மூன்றடிக்கண்ணே பெற்றதெனக் கொள்க.

என்னெனின்:—மோனைமுதலியன முதற் சீரின்கண்ணும், நான்காஞ்சீரின் கண்ணும் வருவதே ஒரூஉத்தொடையாதலால், நாற்சீரிற்குறைந்த சீர்களையுடைய அடிகளில் அத்தொடை வருதற்கிடனின்றாதலின்.

வ—று.

### ஏழடிப்பஃறொடை வெண்பா.

"வையக மெல்லாங் கழனியா, வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள் : செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு : வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் : சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் : கட்டியுட்
டானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம்."

இது பலவிகற்பத்தான் வந்த ஏழடிப் பஃறொடை வெண்பா.

### ஐந்தடிப் பஃறொடை வெண்பா.

"சேற்றுக்கா னீலஞ் செருவென்ற வேந்தன்வேல்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயற்
றேற்றந் தொழில்வடிவு தம்முட் டடுமாற்றம்
வேற்றுமை யின்றியே யொத்தன மாவேடர்
ஆற்றுக்கா லாட்டியர் கண்"

இஃது ஐந்தடியான் வந்த ஒரு விகற்பப் பஃறொடை வெண்பா.

### ஆறடிப்பஃறொடை வெண்பா.

"பன்மாடக் கூடன் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்றா ரிருவ ரவருள்ளும்
பொன்னோடை நன்றென்றா ளல்லளே பொன்னோடைக்
† கியானைநன் றென்றாளு மந்நிலையள் யானை
எருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் றியேன்."

இஃது ஆறடியான் வந்த பலவிகற்பப் பஃறொடை வெண்பா.

---

† ஈண்டுக் குற்றியலிகரம் அலகு பெற்றிலது.

இனி ஏழடியின் மிக்க பஃறொடை வெண்பாக்களை யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க.

"சென்று நிகழ்வ" என்று சிறப்பித்தது, செப்பலோசையிற் சிறிது வழுவிவந்த பஃறொடை வெண்பாக்களை ஒருபுடையொப்புமை நோக்கி வெண்கலிப்பாற் படுத்து வழங்கினு மிழுக்காதென்ப தறிவித்தற்கெனக் கொள்க.

"சிறை வண்டினங்க, டுன்றுங் கருமென் குழற்றுடி யேரிடைத் தூமொழியே" என்பது மகடூஉ முன்னிலை.

என்னை:—

"தொடையடி யித்துணை யென்னும் வழக்க
முடையதை யின்றி யுறுப்பழி வில்லா
நடையது பஃறொடை நாமங் கொளலே"

என்றார் காக்கை பாடினியார்.

வைகலும் வைக றுகடீர் கடற்குட்ட மின்றுமங்கண்
எய்து மலிதேர் வளமழை யின்னன வின்னிசைபோல்
வையக மெல்லாம் பலவிகற் பேற்றது சேற்றொருகால்
பையர வல்குற்பன் மாடம் $$ பஃறொடைப் பல்விகற்பே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே இன்னிசை வெண்பாவிற்கும், பஃறொடை வெண்பாவிற்கும் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க.

5. நேரிசை யின்னிசை போல நடந்தடி மூன்றின்வந்தால்
நேரிசை யின்னிசைச் சிந்திய லாகு நிகரில்வெள்ளைக்
கோரசைச் சீரு மொளிசேர் பிறப்புமொண் காசுமிற்ற
சீருடைச் சிந்தடி யேமுடி வாமென்று தேறுகவே.

இ-கை. நேரிசைச் சிந்தியல் வெண்பாவும், இன்னிசைச் சிந்தியல் வெண்பாவும், எல்லா வெண்பாவிற்கு மீறுமாறும் உணர்த்து-ற்று.

---

$$ ஈண்டு ஆய்தம் உயிர்க்குறிலேபோல நின்று அலகு பெற்றது.

'நேரிசை யின்னிசைபோல நடந்தடி மூன்றின்வந்தால், நேரிசை யின்னிசைச் சிந்தியலாகும்' என்பது:—

நேரிசை வெண்பாவே போல இரண்டா மடியினிறுதி தனிச்சொற்பெற்று இரு விகற்பத்தானும் ஒரு விகற்பத் தானும் மூன்றடியான் வருவன நேரிசைச்சிந்தியல் வெண்பா வெனவும், இன்னிசை வெண்பாவே போலத் தனிச்சொ லின்றி ஒரு விகற்பத்தானும் பலவிகற்பத்தானும் மூன்றடி யான்வருவன இன்னிசைச்சிந்தியல் வெண்பாவெனவும் வழங் கப்படும். எ-று.

என்னை:—

“நேரிசைச் சிந்து மின்னிசைச் சிந்துமென்
றீரடி முக்கா லிருவகைப் படுமே”

என்றாராகலின்.

வ-று.

### நேரிசைச்சிந்தியல் வெண்பா.

“ நற்கொற்ற வாயி னறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே—பொற்றேரான்
பாலைநல் வாயின் மகள்.”

“ அறிந்தானை யேத்தி யறிவாங் கறிந்து
சிறந்தார்க்குச் செவ்வ னுரைப்பச்—சிறந்தார்
சிறந்தமை யாராய்ந்து கொண்டு”

இவை இரண்டாமடியினிறுதி, தனிச்சொற் பெற்று இருவிகற்பத் தானும், ஒரு விகற்பத்தானும் வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.

### இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

“ நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
அறநாட்டுப் பெண்டி ரடி.”

இது தனிச்சொலின்றி ஒருவிகற்பத்தான் வந்த இன் னிசைச் சிந்தியல்வெண்பா.

### இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

" சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை."

" முல்லை முறுவலித்துக் காட்டின மெல்லவே
சேயிதழ்க் காந்த டுடைப்பீன்ற போயினர்
திண்டேர் வரவுரைக்குங் கார் "

இவை தனிச்சொலின்றிப் பலவிகற்பத்தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

நற்கொற்ற வாயி லறிந்தா னையுநறும் பூங்குழலாய்
சொற்பெற்ற நேரிசைச் சிந்திய லாஞ்சுரை யாழவம்மி
நிற்றற் குரிய நறுநீல நெய்தலு முல்லையுமென்
றெற்றப் படாதன வின்னிசைச் சிந்திற் கிலக்கியமே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின் வழியே நேரிசைச் சிந்தியல் வெண்பாவிற்கும், இன்னிசைச் சிந்தியல் வெண்பா விற்குங் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.

'நிகரில் வெள்ளைக், கோரசைச்சீரு மொளிசேர் பிறப்பு மொண்காசுமிற்ற, சீருடைச் சிந்தடியே முடிவாமென்று தேறுகவே' எ-து:—

எல்லாவெண்பாவிற்கும் நாள் என்னும் நேரசைச் சீரானும், மலர் என்னும் நிரையசைச் சீரானும், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டிற் குற்றியலுகரமீறாகிய நேரீற்றியற்சீரானும் இற்ற முச்சீரடியே யீற்றடி யாவதென்று தெளிக எ-று.

வெண்பாவி னிறுதிச்சீர்க்குக் குற்றியலுகர மீறாக வேறுதாரண மெடுத்தோதியதூஉம் அசைச்சீர்க் குதாரணம் வேறு காட்டிப் போந்ததூஉம், வெண்பாவினை அலகிட்டுதாரணவாய்பாட்டா னோசை யூட்டும்பொழுது, பிற வாய்பாட்டானோசையூட்ட லாகாதாகலின் எனக்கொள்க. இனி யவ்வாற்றா னோசை யூட்டுமாறு:—

$$ "பாலொடு—நீர்" என்பதனை அலகிட்டு, முறையானே, கூவிளம், கூவிளம், தேமா, கருவிளம், கூவிளம், கூவிளம், நாள் என்றோசை யூட்டுக.

† "நன்றறிவாரில்—அவலமிலர்" என்பதனை அலகிட்டு முறையானே கூவிளம், தேமா, புளிமா, கருவிளங்காய், தேமா, புளிமா, மலர் என்று ஓசையூட்டுக.

"மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல னன்மக்கட் பேறு"

என்பதனை அலகிட்டு முறையானே கூவிளம், தேமா புளிமாங்காய், கூவிளம், கூவிளம், தேமாங்காய், காசு என்றோசை யூட்டுக.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்பதனை அலகிட்டு முறையானே புளிமா, புளிமா, புளிமாங்காய், தேமா, புளிமா, புளிமா, பிறப்பு என்றோசை யூட்டுக.

பிறவெண்பாக்களையும் இவ்வாறலகிட் டோசையூட்டிச் செப்பலோசை வழுவாமற் கண்டுகொள்க.

---

$$ "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்"

இச்செய்யுள் 26-வது பக்கத்தில் ஓரசைச் சீருக்கும், 53-வது பக்கத்திற் செப்பலோசைக்கும் உதாரணமாகக் காட்டப்பட்டது.

† "நன்றறி வாரிற் கயவர் திருவுடையார்
நெஞ்சத் தவல மிலர்."

இச்செய்யுள் 26-வது பக்கத்தில் ஓரசைச்சீருக்கு உதாரணமாகக் காட்டப்பட்டது.

'நிகரில் வெள்ளைக்கு' என்று சிறப்பித்தவதனால், குறள் வெண்பாவினை ஓரடி முக்கால் என்றும், சிந்தியல் வெண்பாவினை ஈரடிமுக்கால் என்றும், நேரிசைவெண்பாவினை மூவடிமுக்கால் என்றும், இன்னிசை வெண்பாவினை இன்னிசை மூவடிமுக்கால்என்றும், பஃறொடை வெண்பாவினைப்பலவடி முக்கால் என்றும் பெயரிட்டு வழங்குவர் ஒருசாராசிரியர் எனக்கொள்க.

'ஒளிசேர்பிறப்பு மொண்காசும்' என்று சிறப்பித்தது, காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டான் முற்றியலுகரம் ஈறாகிய நேரீற்றியற்சீர் இறுதியாகிய முச்சீரடியானும் இறுவன வுமுள ஒருசார்வெண்பா வென்பது அறிவித்தற் கெனக் கொள்க.

வ-று.

**குறள் வெண்பா.**

" மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலும்
அஞ்சொன் மடவார்க் கருளு "

இது பிறப்பு என்னும் வாய்பாட்டான் முற்றியலுகரம் ஈறாபிற்ற வெண்பா.

**குறள் வெண்பா.**

" இனமலர்க் கோதா யிலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் புல்லு "

இதுகாசுஎன்னும் வாய்பாட்டான் முற்றியலுகரம் ஈறாயிற்ற வெண்பா. இவை செய்யுளியலுடையார் காட்டியவெனக்கொள்க.

என்னை:—

" செப்பலி சையன வெண்பா மற்றவை
யந்தடி சிந்தடி யாகலு மவ்வடி
யந்த மசைச்சீ ராகவும் பெறுமே "

என்பதியாப்பருங்கலம்.

" குற்றிய லுகரமு முற்றிய லுகரமும்
பெற்றவாய் பாட்டா னின்றிறு மென்ப "

என்ருராகலின்.

" மாவாழ் புலிவாழ் சுரமுள வாக மணியிறுவா
யோவா தளபெடுத் $$ தூஉவுங் கெழூஉவு முதாரணமாய்
நாவார் பெரும்புகழ் நத்தத்தர் யாப்பி னடந்ததுபோல்
தேய்வா முகரம்வந் தாலியற் சீரிங்குச் செப்பியதே "

இக்காரிகைச் சூத்திரத்துள் ஓசையூட்டுதற் கருத்தாவது 'மாவாழ்சுரம், புலிவாழ்சுரம்' என்னும் வஞ்சியுரிச்சீரிரண்டு முளவாகவைத்து, ஒரு பயனேக்கித் தூஉமணி, கெழூஉமணி என்றளபெடுத்து நேர்நடுவாகிய வஞ்சியுரிச்சீர்க்கு உதாரண மெடுத்துக்காட்டினுர் நத்தத்தனுர் முதலாகிய வொருசாராசிரியர். அதுவேபோல இந்நூலுடையாருந் தேமா, புளிமா என்னு மிரண்டு நேரீற்றியற்சீரு முளவாக வெண்பாவின் இறுதிச்சீர்க்கு உதாரணவாய்பாட்டான் ஓசையூட்டுதற் பொருட்டாகக்குற்றிய லுகரம் ஈருகியகாசு, பிறப்புஎன்னும் வாய்பாட்டா னேரீற்றியற் சீருக வேறுதாரண மெடுத்தோதினுர் எனக்கொள்க.

6. அந்தமில் பாத மளவிரண் டொத்து முடியின்வெள்ளைச்
செந்துறை யாகுந் திருவே யதன்பெயர் சீர்பலவாய்
அந்தங் குறைனவுஞ் செந்துறைப் பாட்டி னிழிபுமங்கேழ்
சந்தஞ் சிதைந்த குறளுங் குறளினத் தாழிசையே.

இ—கை. குறள்வெண்பாவிற் கினமாகிய துறையும், தாழிசையும் ஆமாறுணர்த்துற்று.

" அந்தமில்பாத மளவிரண்டொத்து முடியின்வெள்ளைச், செந்துறையாகும் " என்பது:—

---

$$ ஈண்டு அளபெடைகள் இரண்டும் அலகுபெற்றில எனவும், 'அளபெடுத்துத்தூஉவும்' என்பது, 'து' தொகுத்தல் விகாரம்பெற்று 'அளபெடுத்தூஉம்' என்ருயிற்றெனவுங்கொள்க.

இரண்டடியாய்த்தம்முள் அளவொத்துவருவது வெண் செந்துறை யென்றும், செந்துறை வெள்ளையென்றும் பெய ரிட்டு வழங்கப்படும் எ-று.

'அந்தமில்பாதம்' என்று சிறப்பித்தவதனால், விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையுமுடைத்தாய் வருவதெனக் கொள்க.

என்னை:—

" ஒழுகிய வோசையி னொத்தடி யிரண்டாய்
விழுமிய பொருளது வெண்செந் துறையே."

என்பதியாப்பருங்கலம்.

வ-று.

**வெண்செந்துறை.**

" ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"

" கொன்றை வேய்ந்த செல்வ னடியிணை
என்று மேத்தித் தொழுவோ மியாமே"

இவை விழுமிய பொருளும், ஒழுகிய வோசையுமாய் வந்தமையான் வெண்செந்துறை.

'திருவே' என்பது மகடூஉ முன்னிலை.

'சீர்பலவாய், அந்தங் குறைனவும்' எ-து:—

நாற்சீரின் மிக்கபலசீரான்வந்து அடியிரண்டாய் ஈற்ற டி குறைந்துவருவன குறட்டாழிசை யெனப்படும் எ-று.

இரண்டடி யென்பததிகாரத்தான் வருவித்துரைக்க ப்பட்டது. குறட்டாழிசை யெனினும், தாழிசைக்குறளெனி னுமொக்கும். சீர்வரையறையில்லாமையால் எனைத்துச்சீரானும் அடியானும் வரப்பெறும் எனக்கொள்க.

வ—று.

துறட்டாழிசை.

" நண்ணு வார்வினை நைய நாடொறு நற்ற வர்க்கர சாய ஞான
நற், கண்ணினு னடியே யடைவார்கள் கற்றவரே "
" நீலமாகடனீடுவார் திரைநின்றபோற்பொங்கிப் பொன்றுமாங்க
வை, காலம்பல காலஞ் சென்றுஞ் செல்வர்யாக்கை கழிதலுமே "

இவை ஈற்றடிகுறைந்து இரண்டடியாய்ப் பல சீரான் வந்தமையால், குறட்டாழிசை.

' செந்துறைப்பாட்டினிழிபும் ' எ—து:—

அடியிரண்டாய் அளவொத்து விழுமிய பொருளும், ஒழுகியவோசையுமின்றி இவ்வாறே செந்துறை வெள்ளையிற்சிதைந்து வருவனவெல்லாஞ் செந்துறைச் சிதைவுத் தாழிசைக் குறள் எனப்படும். எ-று.

வ-று.

துறட்டாழிசை.

" பிண்டியி னீழற் பெருமான் பிடர்த்தலை
மண்டலந் தோன்றுமால் வாழி யன்னாய் "
" அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கௌந்தி
மறுவறு பத்தினி போல்வையி னீரே. "

இவை விழுமிய பொருளும் ஒழுகிய வோசையுமின்றி இரண்டடியுந் தம்முள் ஒத்து வந்தமையிற் செந்துறைச் சிதைவுத் தாழிசைக்குறள்.

' அங்கேழ், சந்தஞ் சிதைந்த குறளுங்குறளினத்தாழிசையே ' எ—து:—

செப்பலோசையிற் சிதைந்து வேற்றுத் தளைதட்டுக் குறள்வெண்பாவிற் சிதைந்து வருவன வெல்லாங் குறள் வெண்பாவிற் கினமாகிய குறட்டாழிசை எனப்படும். எ-று.

வ—று.

**குறட்டாழிசை.**

" வண்டார் பூங்கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி"

இது சந்தஞ் சிதைந்த தாழிசைக்குறள்.

என்னை:—

" அந்தடி குறைனவுஞ் செந்துறைச் சிதைவுஞ்
சந்தழி குறளுந் தாழிசைக் குறளே"
" உரைத்தன விரண்டுங் குறட்பா வினமே"

என்பன யாப்பருங்கலம்.

7 மூன்றடி யானு முடிந்தடி தோறு முடிவிடத்துத் [யே
தான்றனிச் சொற்பெறுந் தண்டா விருத்தம்வெண் டாழிசை
மூன்றடி யாய்வெள்ளை போன்றிறு மூன்றிழி பேழுயர்வாய்
ஆன்றடி தாஞ்சில வந்தங் குறைந்திறும் வெண்டுறையே.

இ-கை. வெளிவிருத்தமும், வெண்டாழிசையும், வெண்டுறையும்ஆமா றுணர்த்து-ற்று.

'மூன்றடி யானு முடிந்தடிதோறு முடிவிடத்துத், தான்றனிச் சொற்பெறுந் தண்டாவிருத்தம்' எ—து:—

மூன்றடியானுமுற்றுப்பெற்று அடிதோறும் ஒரு சொல்லே இறுதிக்கட்டனிச் சொல்லாய் வருவது வெளிவிருத்தம் எனப்படும் எ-று.

'மூன்றடியானும்' என்ற உம்மையால் நான்கடியானும் வரப்பெறும் எனக்கொள்க.

'தண்டாவிருத்தம்' என்று சிறப்பித்த வதனல் நாற்சீரடியுட்பட்டடங்காது வேறாய் வருவது ஈண்டுத் தனிச்சொல் எனக் கொள்க.

என்னை:—

" ஒருமூன் றொருநான் கடியடி தோறுந்
தனிச்சொற் றழுவி நடப்பது வெள்ளை
விருத்த மெனப்பெயர் வேண்டப் படுமே"

என்றார் காக்கைபாடினியார்.

வ-று

**வெளி விருத்தம்.**

" கொண்டன் முழங்கினவாற் கோபம் பரந்தனவா லென்செய் [கோயான்
வண்டு வரிபாட வார்தளவம் பூத்தனவா லென்செய்கோயான்
எண்டிசையுந் தோகை யிருந்தகவி யேங்கினவா லென்செய் [கோயான்"

இது மூன்றடியான் என்செய்கோயான் என்னுந் தனிச்சொற்பெற்று வந்த வெளிவிருத்தம்.

**வெளி விருத்தம்.**

" ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா ரொருசாரார்
ஏகீர் நாகீ ரென்செய்து மென்று ரொருசாரார் "

இது நான்கடியாய் ஒருசாரார் என்னுந் தனிச்சொற்பெற்று வந்த வெளிவிருத்தம்.

'வெண்டாழிசையே, மூன்றடியாய் வெள்ளைபோன்றிறும்' எ-து:—

மூன்றடியாய் ஈற்றடிவெண்பாவே போல முச்சீரடியான் இறுவது வெண்டாழிசை யென்றும், வெள்ளொத்தாழிசை யென்றும் வழங்கப்படும் எ-று.

என்னை:—

" அடியொரு மூன்றுவந் தந்தடி சிந்தாய்
விடினது வெள்ளொத் தாழிசை யாகும் "

என்பதியாப்பருங்கலம்.

வ-று.

**வெண்டாழிசை.**

" நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு செய்யார்
அன்பு வேண்டு பவர் "

இது மூன்றடி யாசிரியத்தளையான் வந்த வெண்டாழிசை.

'மூன்றிழிபேழுயர்வாய், ஆன்றடிதாஞ் சில வந்தங் குறைந்திறும் வெண்டுறையே' எ—து:—

மூன்றடிச் சிறுமையாய் ஏழடிப்பெருமையாய் இடையிடை நான்கடியானும், ஐந்தடியானும், ஆறடியானும் வந்து பின்பிற் சில அடிசில சீர் குறைந்து வருவன வெண்டுறை எனப்படும் எ-று.

'ஆன்றடிதாம்' என்று சிறப்பித்தவதனல், முன்பிற் சில வடியோரோசையாயும், பின்பிற் சிலவடி மற்ருேரோசையாயும்வருவன ஒரு சார் வேற்ருெலி வெண்டுறை எனக் கொள்க.

என்னை:—

" மூன்றடி முதலா வேழடி காறும்வந்
தீற்றடி சிலசில சீர்தப நிற்பினும்
வேற்ருெலி விரவினும் வெண்டுறை யாகும்"

என்பதி யாப்பருங்கலம்.

வ-று.

**வெண்டுறை.**

" குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலைமேற்பாய
அழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென் றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோ னெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாட னீப்பனோ வல்லன்"

இது நான்கடியாய் ஈற்றடி யிரண்டும், இரண்டுசீர் குறைந்துவந்த ஓரொலிவெண்டுறை.

" தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா லென்னுமென்னும்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்ந்துவிழும் பிலிற்றி யாங்கே"

இது மூன்றடியாய் ஈற்றடியிரண்டும் இரண்டுசீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

" முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலகு மேவல்செய்
முறைசெய் கோமான்,
வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன் ருக்கரிய
வைவேல் பாடிக்,
கலங்கிநின் ருரெலாங் கருதலா காவணம்,
இலங்குவா ளிரண்டினு லிருகைவீ சிப்பெயர்ந்,
தலங்கன் மாலையவிழ்ந் தாடவா டிமிவள்,
பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் ருரெலாம்,
விலங்கியுள் ளந்தப விளிந்துவே ருபவே."

இஃது எழுடியாய் முதல் இரண்டடியும் அறுசீராய் ஓரோசையாய்ப் பின்பில் ஐந்தடியும் நாற்சீராய் வேருேர் ஓசையாய் வந்த வேற்றொலிவெண்டுறை.

ஐந்தடியானும், ஆறடியானும் வருவன யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க.

மூன்றடி யாய்வெள்ளை போன்றிறுந் தாழிசை மூன்றிழிபேழ்
ஆன்றடி தாஞ்சில வந்தத் தடிக ளவைகுறைந்து
தோன்றுந் துறைவெள்ளை தண்டா விருத்தந் தனிச்சொல்வந்து
மூன்றடி யானு முடியு முடியுமோர் நான்கினுமே.

என்று வெண்பாவிற்கு இனமாகிய தாழிசை, துறை, விருத்தங்கட்கு முறையானே இலக்கணஞ் சொல்லாது தலை தடுமாற்றமாகக் காரிகை சொல்லவேண்டியது என்னையோ வெனின், ஒருசார் வெண்டுறையின் ஈற்றடி யொன்ருெரு சீர்குறைந்து வருதலும் உளதென்பதூஉம், வெள்ளொத்தாழிசையின் முதல் இரண்டடியும் நான்குசீரான் வருமென்பதூஉம், சிந்தியல் வெண்பா ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வருவன வெல்லாம் வெள்ளொத்தாழிசை என்று வழங்கப் படும் என்பதூஉம் அறிவித்தற்கு வேண்டப்பட்டது. 'தலை தடுமாற்றந்தந்து புணர்ந்துரைத்தல்' என்பது தந்திர உத்தி யாகலான்.

வ-று.

**வேண்டுறை.**

" வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்
உறவுற வரும்வழி யுரைப்பன வுரைப்பன்மற்
செறிவுறு தகையினர் சிறந்தன ரிவர்நமக்
கறிவுறு தொழிலரென் றல்லவை சொல்லன்மின்
பிறபிற நிகழ்வன பின். "

இஃது ஈற்றடி யொன்றொரு சீர்குறைந்துவந்த ஓரொலிவெண்டுறை.

வெள்ளொத்தாழிசை முதலிரண்டடியும் நாற் சீராய் வருவது * 'நண்பிது' என்னு மிலக்கியத்துட் கண்டுகொள்க.

**வெண்டாழிசை.**

" அன்னா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
ஒன்னா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்னான் றுறந்து விடல் "

" ஏடி யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
நீடான் றுறந்து விடல் "

" பாவா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
காவான் றுறந்து விடல் "

இவை சிந்தியல் வெண்பா. ஒருபொருண்மேன் மூன்றடுக்கி வந்தமையான் வெள்ளொத்தாழிசை.

என்னை:—

" ஈரடி முக்கா லிசைகொள நடந்து
மூன்றுட னடுக்கித் தோன்றினொத் தாழிசை "

என்றார் மயேச்சுரர்.

---

* இச்செய்யுளை 78-வது பக்கத்திற் காண்க.

கொண்டன் முழங்கின வாவா விருத்தங் குழலிசைய
வண்டினம் வெண்டுறை தாளா முழங்கொடு தாழிசையே
நண்பிதென் னூர்கலி கொன்றைவெண் செந்துறை நீலநண்ணும்
பிண்டி யறுவர்வண் டார்வெறி தாழிசை பெய்வளையே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே வெண்பா வினங்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.

வெண்பாவும், அதன் இனமும்
முற்றிய.

---

## ஆசிரியப்பாவும், அதன் இனமும்.

8 கடையயற் பாதமுச் சீர்வரி னேரிசை காமருசீர்
இடைபல குன்றி னிணைக்குற ளெல்லா வடியுமொத்து
நடைபெறு மாயி னிலைமண் டிலநடு வாதியந்தத்
தடைதரு பாதத் தகவ லடிமறி மண்டிலமே.

இ-கை. அகவலோசையோ டளவடித்தாகியும், இயற்சீர் பயின்றும், அயற்சீர்விரவியும், தன்றளை தழுவியும், பிறதளை மயங்கியும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் வருதலில்லா ஆசிரியப்பாவினை, அடியானுந், தொடையானும், ஓசையானும், பொருளானும் பெயர்வேறுபாடுணர்த்துவா னெடுத்துக்கொண்டார். அவற்றுள், இக்காரிகை நேரிசையாசிரியப்பாவும், இணைக்குறளாசிரியப்பாவும், நிலைமண்டில வாசிரியப்பாவும், அடிமறி மண்டில வாசிரியப்பாவும் ஆமா றுணர்த்துற்று.

“ கடையயற் பாத முச்சீர்வரி னேரிசை ” எ-து:—

ஈற்றயலடி முச்சீரான் வருவது நேரிசை யாசிரியப்பா எ-று.

என்னை:—

" அந்த வடியி னயலடி சிந்தடி
வந்தன நேரிசை யாசிரி யம்மே."

என்பதியாப் பருங்கலம்.

வ-று.

**நேரிசையாசிரியப்பா.**

" நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே."

இஃது ஈற்றயலடிமுச்சீரான் வந்தமையானேரிசை யாசிரியப்பா.

'காமருசீ, ரிடை பலகுன்றினிணைக்குறள்' எ-து:—

ஈற்றடியும், முதலடியும் ஒழிந்து, இடையடிகள் இரண்டும் பலவும் குறளடியானும், சிந்தடியானும் வருவன இணைக்குறளாசிரியப்பா எ-று.

என்னை:—

" அளவடி யந்தமு மாதியு மாகிக்
குறளடி சிந்தடி யென்று விரண்டு
மிடைவர நிற்ப திணைக்குற ளாகும்"

என்றார் காக்கை பாடினியார்.

வ-று.

**இணைக்குறளாசிரியப்பா.**

நீரின் றண்மையுந் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே.

இது முதலடியும் ஈற்றடியும் நாற்சீராய், இடையடி இரு சீரானும், முச்சீரானும் வந்தமையான் இணைக்குற ளாசிரியப்பா.

### இணைக்குற ளாசிரியப்பா.

"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந்துண்ணு மன்னே
சிறுசோற் றானும்
நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானும்
நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம்
எமக்கீயு மன்னே
அம்பொடு வேனுழை வழியெல்லாம்
தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவுநாறு மென்றலை தைவரு மன்னே
அருங்கலை யிரும்பாண ரகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பார்வை சோர
அஞ்சொனுண்டேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன்
திருநிறத் தியங்கிய வேலே
அரசர்க் கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப்பாடுநரு மில்லை
பாடுநருக்கொன் றீகுநரு மில்லை
பனித்துறைப் பகன்றை நறைகொண் மாமலர்
சூடாது வைகி யாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே."

இஃது இடையிடையே இருசீரடியும், முச்சீரடியுமாய் வந்தமையால் இணைக்குறளாசிரியப்பா.

'காமருசீர்' என்று சிறப்பித்தவதனால் ஆசிரியப்பா நான்கிற்கும் 'ஏ' என்னும் அசைச்சொல்லான் இறுவது சிறப்புடைத்து; பிற எழுத்தும் ஈறாய் வரப்பெறுமாயினும் எனக்கொள்க.

என்னை:—

" அகவலி சையன வகவன் மற்றவை
ஏ ஓ ஈ ஆ வென்னையென் றிறுமே"

என்றார் தொல்காப்பியனார்.

" எல்லாவடியுமொத்து, நடைபெறுமாயினிலை மண்டிலம்" எ-து:—

எல்லா வடியுந் தம்முள் அளவொத்து நாற் சீர் அடியாய் வருவது நிலைமண்டில ஆசிரியப்பா எ-று.

வ-று.

**நிலைமண்டில ஆசிரியப்பா.**

" வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே."

இஃது எல்லாவடியும் நாற்சீராய் அளவொத்து வந்தமையால் நிலைமண்டில ஆசிரியப்பா. மண்டிலம் எனினும், நிலைமண்டிலம் எனினும் ஒக்கும்.

நிலைமண்டில ஆசிரியப்பாவிற்கு 'என்' என்னும் அசைச்சொல்லான் இறுவது சிறப்புடைத்து; மற்றொருசார் ஒற்றினானும், உயிரினானும் ஈறாய் வரவும் பெறும் எனக்கொள்க.

என்னை:—

" ஒத்த வடித்தா யுலையா மரபொடு
நிற்பது தானே நிலைமண் டிலமே."

" என்னென் கிளவியை யீறாப் பெறுதலு
மன்ன பிறவு மந்த நிலைபெற
நிற்கவும் பெறூஉ நிலைமண்டிலமே."

என்றாராகலின்.

"நடுவாதியந்தத், தடைதரு பாதத் தகவ லடிமறி மண்டிலமே." எ-து:—

எல்லாவடியும் முதல், நடு, இறுதியாக உச்சரிப்பினும் ஓசையும், பொருளும் பிழையாது வருவது அடிமறிமண்டில ஆசிரியப்பா. எ-று.

என்னை:—

" மனப்படு மடிமுத லாயிறின் மண்டிலம் "

என்பதியாப்பருங்கலம்.

" உரைப்போர் குறிப்பி னுணர்வகை யன்றி
யிடைப்பான் முதலீ றென்றிவை தம்முண்
மதிக்கப் படாதன மண்டில யாப்பே "

என்றார் காக்கை பாடினியார்.

வ-று.

அடிமறிமண்டில ஆசிரியப்பா.

" சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளி ராரணங் கினரே
வார லெனினே யானஞ் சுவலே
சார னாட நீவர லாறே."

இஃது எல்லாவடியும் முதல், நடு, இறுதியாக உச்சரிக்க ஓசையும், பொருளும் பிழையாது வந்தமையால் அடிமறி மண்டில ஆசிரியப்பா.

நேரிசை யாகு நிலத்தினு மென்ப திணைக்குறட்பா
நீரின் சிறிய நிலைமைய தாநில மண்டிலப்பா
வேரலென் றுரும் விரைமலர்க் கோதைவில் லேர்நுதலாய்
சூரல்பம் பென்ப தடிமறி யாகத் துணிந்தனரே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே ஆசிரியப்பா நான்கிற்குங் காட்டிய இலங்கியங்களை முதனினைத்துக் கொள்க.

9. தருக்கிய முழிசை மூன்றடி யொப்பன நான்கடியாய்
எருத்தடி நைந்து மிடைமடக் காயு மிடையிடையே
சுருக்கடி யாயுந் துறையாங் குறைவிறுரல் சீரகவல்
விருத்தங் கழிநெடி லான் கொத்திறுவது மெல்லியலே.

இ-க. ஆசிரியத்தாழிசையும், ஆசிரியத்துறையும், ஆசிரிய விருத்தமும் ஆமாறு உணர்த்து-ற்று.

"தருக்கிய முழிசை மூன்றடி யொப்பன" எ-து:—

மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து வருவன ஆசிரியத்தாழிசை எ-று.

'தருக்கியல்' என்று சிறப்பித்தவதனால் அவை ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வருவன சிறப்புடையன; தனியே வரப்பெறுமாயினும் எனக்கொள்க.

என்னை:—

"மூன்றடி யொத்த முடிவின வாய்விடி
னான்ற வகவற் முழிசை யாகும்."

என்பதி யாப்பருங்கலம்.

வ-று.

ஆசிரியத்தாழிசை.

"கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி."

"பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி."

"கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லிநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி."

இவை ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வந்த ஆசிரியத்தாழிசை.

### ஆசிரியத்தாழிசை.

" வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணநின் னிரைகழ றொழுதனம். "

இது தனியேவந்த ஆசிரியத்தாழிசை.

"நான்கடியாய், எருத்தடி நைந்து மிடைமடக்காயு மிடையிடையே, சுருக்கடி யாயுந் துறையாம்" எ-து:—

நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருவனவும், நான் கடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து வருவனவும், நான்கடி யாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வருவனவும் ஆசிரியத்துறை எ-று.

'நான்கடியாய்' என்பதனை எல்லாவற்றிேனாடுங் கூட்டி, 'இடைமடக்காய்' என்பதனை ஒருகாலிருதலையுங்கூட்டி மத் திமதீபமாகப் பொருள் உரைத்துக்கொள்க.

சீர்வரை யறுத்திலாமையால் எனைத்துச் சீரானும் அடி யாய் வரப்பெறும் எனக்கொள்க.

வ-று.

### ஆசிரியத்துறை.

" கரைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்முள்ளி வருவிராயின்
அரையிருள் * யாமத் தடுபுலியே றஞ்சி யகன்றுபோக
நரையுரு மேறுநுங் கைவே லஞ்சு நும்மை
வரையர மங்கையர் வெளவுத லஞ்சுதும் வாரலையோ. "

இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்துவந்த ஆசிரியத் துறை.

---

* 'யாமத் தடுபுலியேறு நும்மஞ்சி' என்பது இலக்கண விளக்கத்திற்கண்ட பாடம்.

ஆசிரியத்துறை.

"வண்டுளர் பூந்தார் வளங்கெழு செம்பூட்சேய் வடிவே போலத்
தண்டளிர்ப்பூம் பிண்டித் தழையேந்தி மாவினவித் தணந்தோன்
[யாரே.
தண்டளிர்ப் பூம்பிண்டித் தழையேந்தி வந்துநம்
பண்டைப் பதிவினவிப் பாங்குபட மொழிந்து படர்ந்தோ னன்றே"

இது நான்கடியாய், ஈற்றயலடி குறைந்து, இடைமடக்காய்வந்த ஆசிரியத்துறை.

ஆசிரியத்துறை.

"* கொன்றூர்ந் தமைந்த குருமுகத் தெழினிறக் குருதிக் கோட்டன விருந்தாட் பெருங்கைக் குன்றுமென வன்றுமெனக் குமுறு நின்றன கொடுந்தொழில் வேழம்,

---

* இவ்வாசிரியத்துறையின் ஈற்றடி எளிதாகச் சீர் பிரித்தற்கியலாததாய் அமைந்திருக்கின்றது.

சிதம்பரச் செய்யுட்கோவையில் இதே இலக்கணம் பெற்றமைந்துள்ள ஆசிரியத்துறையானது நான்கடியும் எளிதாகச் சீர்பிரித்தற்கியன்றதாய் இருக்கின்றது.

அது வருமாறு.

"உண்டாங் கெனினு மிலதென் றறிஞர்கள் பொய்யெனப் புகலவு மெய்யெனப் பெயர்பெற் றன்றுமுன மின்றுமென வுளதாய் மாய்வது நிலையில் யாக்கை,

கண்டாங் கிகழுங் கிழமுதி ரமையத் தைவளி பித்தென மெய்தரும் வித்திற் கடலிற் றிரையென வுடலிற் றிரையொடு கலியா நின்றன நலிவுசெய் நோய்கள்,

புண்டாங் கயின்முக் குடுமிப் படையொடு மெயிறலைத் தழல்விழித் துயிருணக் கனல்சேர் புகையாமென நிழலாமெனத் திரியா நின்றது கொலைசெய் கூற்றம்,

விண்டாங் ககலுபு மெய்ப்பொரு டுணிவோர் மின்பொலி பொன்புனை மன்றிலெம் முயிராம் விமலன் குஞ்சித கமலங் கும்பிட வேண்டுவர் வேண்டார் விண்மிசை யுலகே."

வென்றூர்ந் தமைந்த விளங்கொளி யிளம்பிறைத் துளங்குவா ளிலங்கெயிற் றழலுளைப் பரூஉத்தா ளதிரும் வானென வெதிருங் கூற்றெனச் சுழலா நின்றன சுழிக்கண் யாளி,

சென்றூர்ந் தமைந்த சிறுநுதி வள்ளுகிர்ப் பொறியெருத் தெறுழ்வலிப் புலவுநா றழல்வாய்ப் புனலாமெனக் கனலாமெனப் புகையா நின்றன புலிமா னேற்றை,

என்றூங் கிவையிவை யியங்கலி னெந்திறத் தினிவரல் வேண்டலந் தனிவர லெனத்தலை விலக்கலி னிறுவரை மிசையெறி குறும்பிடை யிதுவென்னெனவது நோனூர்கரவிர விடைகளவுள மது கற்றோரோதுங் கற்பன்றே."

இது நான்கடியாய் முதலடியும், மூன்றுமடியும் பதினான்கு சீராய் அல்லாத அடியிரண்டும் பதினாறுசீராய் இடையிடை குறைந்துவந்த ஆசிரியத்துறை.

ஆசிரியத்துறை.

" இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனா
அரங்க மணிபொழிலா வாடும் போலு மிளவேனில்
அரங்க மணிபொழிலா வாடு மாயின் [னில்."
மரங்கொன் மணந்தகன்றூர் நெஞ்சமென் செய்த திளவே

இது நான்கடியாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வந்த ஆசிரியத்துறை.

என்னை:—

" கடையத னயலடி கடைதபு நடையவு
நடுவடி மடக்காய் நான்கடி யாகி
யிடையிடை குறைனவு மகவற் றுறையே"

என்பதி யாப்பருங்கலம்.

"குறைவிலொல் சீரகவல், விருத்தங் கழிநெடி லொன் கொத்திறுவது" எ-து:—

கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவொத்து வருவன ஆசிரியவிருத்தம் எ-று.

"குறைவிறெல் சீர்" என்று சிறப்பித்தவதனால் எண்சீரின் மிக்க சீரான் வந்த அடியெல்லாஞ் சிறப்பில எனக்கொள்க.

வ-று.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

" விடஞ்சூ ழரவி னிடைநுடங்க மின்வாள் வீசி விரையார்வேங்
கடஞ்சூழ் நாடன் காளிங்கன் கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சேர் கொங்கை மலைதாந்தாம் வடிக்கண் ணீல மலர்தாந்தாந்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா மென்னுந் தன்கைத் தண்ணு
[மையே."

இஃது அறுசீர்க்கழி நெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

1. "கணிகொண்ட" என்பது எழுசீர்க்கழி நெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

2. "மூவடிவினல்" என்பது எண்சீர்க்கழி நெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

3. "இடங்கை வெஞ்சிலை" என்பது ஒன்பதின் சீர்க்கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

4. "கொங்குதங்கு" என்பது பதின் சீர்க்கழி நெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

---

1, 2 இவ்விரண்டும் 34-வது பக்கத்தினும், 3, 4 இவ்விரண்டும் 35-வது பக்கத்தினுங் கழிநெடிலடிக்கு உதாரணமாகக்காட்டப்பட்டன.

இவை ஈண்டு எதற்காகக் காட்டப்பட்டனவெனின் அவ்வடியான் வரும் விருத்தத்திற்கு உதாரணமாகக்காட்டப்பட்டன வென்க.

என்னை:—

“ கழிநெடி லடிநான் கொத்திறின் விருத்தமஃ
தழியா மரபின தகவ லாகும்.”

என்பதி யாப்பருங்கலம்.

“மெல்லியலே” என்பது மகடூஉ முன்னிலை.

கன்று குணில்வா னுறத்தா ழிசையாங் கரைபொருகான்
என்றதும் வண்டுளர் பூந்தா ரிரங்கு குயின்முழவாக்
கொன்றூர்ந் தமைந்த வகவற் றுறைகுறை யாவிருத்தம்
பின்றாழ் குழலி விடங்கணி மூவடி வாதியவே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே ஆசிரியப் பா வினங்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.

ஆசிரியப்பாவும், அதனினமும் முற்றிய.

---

## கலிப்பாவும், அதனினமும்.

10. தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொற் சுரிதகமாய்
நிரலொன்றி னேரிசை யொத்தா ழிசைக்கலி நீர்த்திரைபோல்
மரபொன்று நேரடி முச்சீர் குறளடி வேமடுப்ப
தரவொன்று மல்கு லதம்போ தரங்கவொத் தாழிசையே

இ-கை. துள்ளல் ஓசைத்தாய், நேரீற்றியற்சீரும், நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வாராது, நிரைமுதலாகிய வெண் பாவுரிச்சீர்மிக்கு, நேரடித்தாய்க் கலித்தளையும் அயற் * றளை யுந்தட்டுத் தரவு, தாழிசை என்னும் முதல் உறுப்பும், அராகம், அம்போதரங்கம், தனிச்சொல் சுரிதகம் என்னுந் துணை உறுப்பும் உடைத்தாய், ஒத்தாழிசைக்கலி, வெண்கலி, கொச் சகக்கலி என்னும் வேறுபாட்டாற்கிடந்த கலிப்பாக்களை உறு ப்பினானும், ஓசையானும், பொருளானும் பெயர்வேறுபாடு உணர்த்துவா னெடுத்துக் கொண்டார்.

---

* தளைதட்டு—தளைபொருந்தி. இஃது இப்பொழுது தளை பிறழ்ந்து, தளைதவறி என்னும் அர்த்தத்தில் வழங்குகின் றது.

அவற்றுள், இக்காரிகை நேரிசை யொத்தாழிசைக் கலிப்பாவும், அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவும் ஆமாறுணர்த்து—ற்று.

" தரவொன்று தாழிசைமூன்று தனிச்சொற் சுரிதகமாய் நிரலொன்றி னேரிசை யொத்தாழிசைக்கலி" எ-து:—

முன் ஒரு தரவு வந்து, அதன் பின்பு மூன்றுதாழிசை வந்து, அதன் பின் ஒருதனிச்சொல்வந்து, அதன்பின் ஆசிரியத்தானவது, வெண்பாவானவது ஒருசுரிதக உறுப்புப் பெற்றுவருவது நேரிசை யொத்தாழிசைக்கலிப்பா எ-று.

தரவு எனினும், எருத்தம் எனினும் ஒக்கும்.

தாழிசை எனினும், இடைநிலைப்பாட்டு எனினும் ஒக்கும்.

தனிச்சொல் எனினும், விட்டிசை எனினும், கூன் எனினும், தனிநிலை எனினும் ஒக்கும்.

சுரிதகம் எனினும், மடக்கியல் எனினும், வாரம் எனினும், வைப்பு எனினும், போக்கியல் எனினும் ஒக்கும்.

என்னை:—

" தந்துமுன் னிற்றலிற் றரவே தாழிசை
யொத்தாழ்ந் திறினஃ தொத்தா ழிசையே
தனிதா நிற்றலிற் றனிச்சொற் குனிதிரை
நீர்ச்சுழி போல நின்றுசுரிந் திறுதலிற்
சோர்ச்சியில் புலவர் சுரிதக மென்ப."

என்று காரணக்குறி சொன்னாருமுளர் எனக்கொள்க.

இனித்தரவு, தாழிசைகட்கு அடிவரையறையாமாறு * "சுருங்கிற்று மூன்றடி" என்னுங் காரிகையுட் போக்கிச் சொல்லுதும்.

வ-று.

நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா.

" வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றுய்த்திரிந்து
தோணெடுந் தகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூணெடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ;

இது தரவு.

சூருடைய கடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவாற்
பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே.
சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ நலமிலரே.
சிலம்படைந்த வெங்கானஞ் சீரிலவே யென்பவாற்
புலம்படைந்த நலந்தொலையப் போவாரோ பொருளிலரே.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு, இது தனிச்சொல்.

அருளெனு மிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந் தேரொடுந் தானையிற் பொலிந்தே."

இது சுரிதகம்.

இது தரவு மூன்றடியாய்த், தாழிசை மூன்றும் இரண்டிரண்டடியாய்த், தனிச்சொற்பெற்று, மூன்றடி ஆசிரியச்சுரிதகத்தால் இற்ற நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா.

* இஃது ஒழிபியலுள் ஏழாவது காரிகை.

$$ வெள்ளைச் சுரிதகத்தால் இற்றன யாப்பருங் கல விருத்தியுட் கண்டுகொள்க.

என்னை:—

“ தரவு தாழிசை தனிச்சொற் சுரிதக
மெனுநான் குறுப்பின தொத்தா ழிசைக்கவி.”

என்றாராகலின்.

---

$$ வெள்ளைச் சுரிதகத்தாலிற்றநேரிசை யொத்தாழிசைக் கலிப்பாவிற்குச் செய்யுள்:—

வ-று.

“ முத்தொடு மணிதயங்கு முக்குடைக்கீழ் முனைவனே
யெத்திசையும் பல்லுயிர்க ளின்புற வினிதிருந்து
பத்துறு திசையனைத்தும் பகைபசி பிணிநீங்க
வுத்தமர்க டொழுதேத்த வொளிர்வரைபோற் செலவினாய்.”

இது தரவு.

எள்ளனைத்து மிடரின்றி யெழின்மாண்ட பொன்னெயி
லுள்ளிருந்த வுன்னையே வுறுதுணையென் றடைந்தோரை
வெள்ளில்சேர் வியன்காட்டு ளுறைகென்றல் விழுமிதோ.

குணங்களின் வரம்பிகந்து கூடிய பன்னிரண்டு
கணங்களும்வந் தடியேத்தக் காதலித்துன் னடைந்தோரைத்
பிணம்பிறங்கு பெருங்காட்டு ளுறைகென்றல் பெருமையோ.

விடத்தகைய வினைநீக்கி வெள்வளைக்கைச் செந்துவர்வாய்
மடத்தகைய மயிலனையார் வணங்கநின் னடைந்தோரைத்
தடத்தகைய காடுறைத லென்பதுநின் றகுதியோ.

இவை மூன்றுந் தாழிசை.

எனவாங்கு, தனிச்சொல்.

அனைத்துணையை யாயினு மாகமற் றன்கட்
டினைத்துணையுந் தீயவை யின்மையிற் சேர்ந்து
வினைத்தொகையை வீட்டுக வென்று.”

இது சுரிதகம்.

இஃது இலக்கண விளக்கத்துட் காட்டப்பட்ட உதாரணச் செய்யுள்.

" தரவொன் ருகித் தாழிசை மூன்ருய்த்
தனிச்சொ லிடைகிடந்து சுரிதகந் தழுவ
வைத்த மரபின தொத்தா ழிசைக்கலி."

என்ருர் மயேச்சுரர்.

" நீர்த்திரைபோன், மரபொன்று நேரடி முச்சீர் குறணடுவே மடுப்பது, அம்போதரங்கவொத்தாழிசை." எ-து:—

கரைசாரக் கரைசார ஒருகாலைக் கொருகாற் சுருங்கி வருகின்ற நீர்த்தரங்கம்போல நாற்சீர் அடியும், முச்சீர் அடியும், இருசிர் அடியும் ஆகிய அசையடிகளைத் தாழிசைக்கும், தனிச்சொற்கும் நடுவே தொடுத்துத் தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல் சுரிதகம் என்னும் ஐந்து உறுப்புடைத்தாய் வருவது அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா. எ-று.

" அரவொன்று மல்குல்" எ-து. மகடூஉ முன்னிலே.

"மரபொன்று நேரடி" என்று சிறப்பித்தவதனுல், அசையடிதான் * ஈரடியால் இரண்டும், $$ ஓரடியால்நான்கும், முச்சீரால் எட்டும், இருசீராற் பதினுறுமாய் வருவது சிறப்புடைத்து; எட்டும், பதினுறும் என்று சொல்லப்பட்டன, நான்கும், எட்டுமாகச் சுருங்கிவரப் பெறுமாயினும் எனக் கொள்க.

என்னை:—

" ஈரடி யிரண்டு மோரடி நான்கு
முச்சீ ரெட்டு மிருசீ ரிரட்டிய
மச்சீர் குறையினு மம்போதரங்கம்."

என்ருராகலின்.

அம்போதரங்கம் எனினும், அசையடி எனினும், பிரிந்திசைக்குறள் எனினும், சொற்சீரடி எனினும், எண்எனினும் ஒக்கும்.

---

*, $$. இவை நாற்சீரடி யென்றுணர்க.

என்னை:—

அனைய வாகிய வசையடி நான்குந்
தனியொடு தாழிசை யிடைவரு மென்ப.

வற்றைப் * பேரெண், அளவெண், இடையெண், சிற்
ன்று பெயரிட்டு வழங்குவாரும் உளர் †

வ-று.

**அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா.**

கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றெழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைய
அழலவிர் சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வார்புன லிழிகுருதி யகலிடமு முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்;

இது தரவு.

முரசதிர் வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியொடு முடியிறப்புண் டயர்ந்தவர் நிலஞ்சேர
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ.

கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணுதா ருடம்போடு மறம்பிதிர வெதிர்கலங்கிச்
சேணுய ரிருவிசும்பிற் செகுத்ததுநின் சினமாமோ.

---

† இச்சூத்திரத்தின்கீழ் இது பிறராற் செய்யப்பட்ட தெனக் கொள்ளும்படி யொன்றுங் குறிக்கப்படாமையின் உரைச் சூத்திரமா யிருக்குமென யூகிக்கப்படுகின்றது.

* நாற்சீரடியாய் வருவனபேரெண் எனவும், நாற்சீரோரடியாய் வருவன அளவெண் எனவும், முச்சீரோரடியாய் வருவன இடையெண் எனவும் இருசீரோரடியாய் வருவன சிற்றெண் எனவுஞ் சொல்லப்படும்.

படுமணி யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கடுமுரா ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வேரிஞெடு மருப்பொசிய வீழ்ந்துதிறம் வேறுக
ஏறுமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிகலாமோ.

இவை மூன்றுந்தாழிசை.

இலங்கொலி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கையின் மாஅ னின்னிறம்.
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை.

இவைநாற்சீரடி இரண்டப்போதரங்கம்.

இவைபேரெண்.

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை.
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை.
ஒலியிய லுவண மோங்கிய கொடியினை.
வலிமிகு சகட மாற்றிய வடியினை.

இவைநாற்சீரோரடி நான்கம்போதரங்கம்.

இவை அளவெண்.

போரவுணர்க் கடந்தோய் நீஇ.
புணர்மருதம் பிளந்தோய் நீஇ.
நீரகல மளந்தோய் நீஇ.
நிழறிகழைம் படையோய் நீஇ.

இவை முச்சீரோரடி நான்கம்போதரங்கம்.

இவையிடையெண்.

ஊழி நீஇ.
உலகு நீஇ.
உருவு நீஇ.
அருவு நீஇ.

ஆழி நீஇ.
அருளு நீஇ.
அறமு நீஇ.
மறமு நீஇ.

இவை இருசீரோரடி எட்டம்போதரங்கம்

இவை சிற்றெண்.

எனவாங்கு, இது தனிச்சொல்.

" அடுதிற லொருவனிற் பரவுது மெங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரி,
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
தொன்று முதிர்கட லுலக முழுதுடன்
ஒன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே."

இது சுரிதகம்.

இஃது எட்டும், பதினாறும் என்றுசொல்லப்பட்ட முச்சீர் அடியும், இருசீர் அடியும், நான்கும் எட்டுமாய்வந்த அம்போதரங்க ஒத்தாழிசைக்கலிப்பா.

" நலங்கிளர் திருமணியு நன்பொன்னுங் குயின்றழகார்
இலங்கெயிற் றழலரிமா னெருத்தஞ்சே ரணையின்மேல்
இருபுடையு மியக்கரச ரிணைக்கவரி யெடுத்தசைப்ப
விரிதாமந் துயல்வரூஉம் வெண்குடைமூன் றுடனிழற்ற
வண்டரற்ற நாற்காதம் வகைமாண வுயர்ந்தோங்குந்
தண்டளிர்ப்பூம் பிண்டிக்கீழ்த் தகைபெறவீற் றிருந்தனையே"

என்னும் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவினுள் * எட்டும், பதினாறும் என்று சொல்லப்பட்ட அம்போதரங்கங் குறையாதே வந்தவாறு யாப்பருங்கல விருத்தியுட்கண்டு கொள்க.

என்னை:—

" நீர்த்திரை போல நிரலே முறைமுறை
யாக்கஞ் சுருங்கி யசையடி தாழிசை
விட்டிசை விரியத் தொடுத்துச் சுரிதகந்
தாக்கித் தொடுத்த தரவினோ டேனவும்
யாப்புற் றமைந்த வம்போ தரங்கம்."

என்றார் காக்கைபாடினியார்.

---

* இவை இந்நூலுள் அடுத்து வரும் வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவில் அவ்வாறே குறையாமல் எட்டும், பதினாறுமாய் வந்தவாறு காண்க.

வாணெடுங் கண்பனி நேரிசை யாகு மதர்த்திருண்டு
சேணுற வோடிக் குழையி டறிச்செருச் செய்யும்விழி
நாணுந் திருவு மறிவுஞ் செறிவு முடைய நல்லாய்
ஏணுங் கெடலரு மாமுனி யம்போ தரங்கமென்னே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும், அம்போதரங்க ஒத்தாழிசைக்கலிப்பாவிற்குங் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க.

11. அசையடி முன்ன ரராகம்வந் தெல்லா வுறுப்புமுண்டேல்
வசையறு வண்ணக வொத்தா ழிசைக்கலி வான்றளைதட்
டிசைதன தாகியும் வெண்பா வியைந்துமின் பான்மொழியாய்
விசையறு சிந்தடி யாலிறு மாய்விடின் வெண்கலியே.

இ-கை. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவும், வெண் கலிப்பாவும் ஆமாறு உணர்த்து-ற்று.

"அசையடி முன்னரராகம்வந் தெல்லா வுறுப்புமுண் டேல், வசையறு வண்ணகவொத்தா ழிசைக்கலி" எ-து:—

அம்போதரங்க உறுப்பிற்குந் தாழிசைக்கும் நடுவே அராக உறுப்புப்பெற்றுத் தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்பினையும் உடைத்தாய் வருமெனின் அதுவண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும் எ-று.

அராகம் எனினும், வண்ணகம் எனினும், முடுகியல் எனினும், அடுக்கியல் எனினும் ஒக்கும்.

'வசையறு வண்ணகம்' என்று சிறப்பித்தவதனால் அராக உறுப்புத்தான் அளவடி முதலாகிய எல்லாவடியானும் வரப்பெறும் எனக்கொள்க.

அடிவரையறையாவது சிறுமை நான்கடி, பெருமை எட்டடி, இடை ஐந்தடியானும், ஆறடியானும், எழுடியானும் வரப்பெறும் எனக்கொள்க.

என்னை:—

" அளவடி முதலா வனைத்தினு நான்கடி
முதலா யிரட்டியு முடுகிய னடக்கும்."

என்றாராகலின்.

வ-று.

**வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா.**

" விளங்குமணி பசும்பொன்னின் விசித்தமைத்துக் கதிர்கான்று
துளங்குமணிக் கனைகழற்காற் றுறுமலர் நறும்பைந்தார்ப்
பருஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்று
குருஉக்கொண்ட மணிப்பூணுய் குறையிரந்து முன்னாட்கண்[ங்
மாயாத வனப்பினையாய் மகிழ்வார்க்கு மெல்லார்க்குந்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரகேள்;

**இது தரவு.**

காட்சியாற் கலப்பெய்தி யெத்திறத்துங் கதிர்ப்பாகி
மாட்சியார்க் கறியாத மரபொத்தாய்க் கரவினாற்
பிணிநலம் பெரிதெய்திப் பெருந்தடந்தோள் வனப்பழிய
அணிநலந் தனியேவந் தருளுவது மருளாமோ.

அன்பினு லமிழ்தளாஇ யறிவினாற் பிறிதின்றிப்
பொன்புனை பூணகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப்
பெருவரைத்தோ ளருளுதற் கிருளிடைத் தமியையாய்க்
கருவரைத்தோள் கதிர்ப்பிக்குங் காதலுங் காதலோ.

பாங்கனையே வாயிலாப் பல்காலும் வந்தொழுகுந்
தேங்காத கரவினையுந் தெளியாத விருளிடைக்கட்
குடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பிப்பான் றமியையாய்த்
தடமலர்த்தா ரருளுநின் றகுதியுந் தகுதியோ.

**இவை மூன்றுந்தாழிசை.**

தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை தழலென விரிவனபொழில்.
போதுறு நறுவிரை புதுமலர் தெரிதரு கருநெய்தல் விரிவனகழி.
தீதுறு திறமறு கெனநனி முனிவன துணையொடு பிணைவனதுறை.
மூதுறு மொலிகலி நுரைதரு திரையொடு கடிதொடர் புடையது
[கடல்.

**இவை நான்கும் அராகம்.**

கொடுந்திற லுடையன சுறவேறு கோட்பதனுல்
இடுங்கழி யிராவருதல் வேண்டாவென் றிசைத்திலமோ.
கருநிறத் துறுதொழிற் கராம்பெரி துடைமையால்
இருணிறத் தொருகானி விராவார லென்றிலமோ

**இவைநாற்சீர் ஈரடி யிரண்டம்போதரங்கம்.**

நாணொடு கழிந்தன்று பெண்ணரசி நலத்தகையே.
துஞ்சலு மொழிந்தன்றற் றொடித்தோளி தடங்கண்ணே.
அரற்றொடு கழிந்தன்று லாரிருளு மாயிழைக்கே.
நயப்பொடு கழிந்தன்று னனவது நன்னுதற்கே.

**இவை நாற்சீர் ஓரடி நான்கம்போதரங்கம்.**

அத்திறத்தா லசைந்தன தோள்.
அலர்தற்கு மெலிந்தன கண்.
பொய்த்துரையாற் புலர்ந்தது முகம்.
பொன்னிறத்தாற் போர்த்தன முலே.
அழலினு லசைந்தது நகை.
அணியினு லொசிந்த திடை.
குழலினு னிமிர்ந்தது முடி.
குறையினுற் கோடிற்று நிறை.

**இவை முச்சீர் ஓரடி யெட்டம்போதரங்கம்.**

உட்கொண்ட தகைத்தொருபால்.
உலகறிந்த வலத்தொருபால்.
கட்கொண்ட் றளித்தொருபால்.
கழிவெய்தும் படித்தொருபால்.
பரிவுறூஉந் தகைத்தொருபால்.
படிவுறூஉம் பசப்பொருபால்.
இரவுறூஉந் துயரொருபால்.
இளிவந்த வெளிற்றொருபால்.
மெலிவுறூஉந் தகையொருபால்.
விளர்ப்புவந் தடைந்தொருபால்.

பொலிவுசென் றகன்றொருபால்.
பொறைவந்து கூர்ந்தொருபால்.
காதலிற் கதிர்ப்பொருபால்.
கட்படாத் துயரொருபால்.
ஏதில்சென் றணைந்தொருபால்.
இயனுணிற் செறிவொருபால்.

இவை இருசீர் ஓரடிப் பதினறம்போதரங்கம்.

எனவாங்கு, இதுதனிச்சொல்.

" இன்னதிவ் வழக்க மித்திற மிவணல
மென்னவு முன்னாட் டென்னு யாகிற்றி
கலந்தவ ணிலைமை யாயினு நலந்தகக்
கிளையொடு கெழீஇய தளையவிழ் கோதையைக்
கற்பொடு காணிய யாமே
பொற்பொடு பொலிகநும் புணர்ச்சிதானே. "

இது சுரிதகம்.

இஃது ஆறுறுப்புங் குறைவின்றிவந்த வண்ணக ஒத்தாழிசைக்கலிப்பா.

என்னை:—

" அச்சொலப் பட்ட வுறுப்போ டராகவடி
வைத்த நடையது வண்ணக மாகும். "

என்றார் காக்கைபாடினியார்.

"வான்றளைதட்டு டிசைதன தாகியும் வெண்பா வியைந்தும், விசையறு சிந்தடி யாலிறு மாய்விடின் வெண்கலியே." எ-து.

கலித்தளைதட்டுக் கலியோசை தழூவியும், வெண்டளை தட்டு வெள்ளோசை தழூவியும் வந்து ஈற்றடி முச்சீரான் இறுமெனின் அது வெண்கலிப்பா என்றும், கலிவெண்பா என்றும் வழங்கப்படும் எ-று.

"இன்பான் மொழியாய்" என்பது மகடூஉ முன்னிலை.

"விசையறுசிந்தடி" என்றுசிறப்பித்தவதனால், * வேற்றுத்தளைதட்டு அருகிவரவும் பெறும் எனக்கொள்க.

---

* இங்ஙனம் பொதுப்படக் கூறினரேனும் வெண்கலிப்பாவே அவ்வாறு வேற்றுத் தளைதட்டு வருமெனக் கொள்க.

வ-று.

## வெண்கலிப்பா.

" வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்
கோளார்ந்த பூணுகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தஞ் சொன்முறையான்
மனையறமுந் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் டிவையுரைத்த
தொன்மைசால் கழிகுணத்தெந் துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்து மாறு."

இது தன்றளையானும், துள்ளல் ஓசையானும் வந்தமையான் வெண்கலிப்பா.

## கலிவெண்பா.

" சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில்யா மாடு
மணற்சிற்றிற் காலிற் சிதையா வடர்ச்சியபொற்
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானு மிருந்தேமா வில்லுளே
உண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானும்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்."

இதுவெண்டளைதட்டு வெள்ளோசை தழுவி ஒரு பொருண்மேல் வந்தமையாற் கலிவெண்பா.

என்னை:—

"ஒருபொரு ளுதலிய வெள்ளடி யியலாற்
றிரிவின்றி முடிவது கலிவெண் பாட்டே"

என்றார் தொல்காப்பியனார்.

"வெண்டளை தன்றளை யென்றிரு தன்மையின்
வெண்பா வியலது வெண்கலி யாகும்"

என்றார் காக்கைபாடினியார்.

இனிப்பிறதளையான் வருமாறு:—

## வெண்கலிப்பா.

"ஏர்மலர் நறுங்கோதை யெருத்தலைப்ப விறைஞ்சித்தன்
வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்தியவென்
தார்வரை யகன்மார்பன் றனிமையை யறியுங்கொல்
சீர்மலி கொடியிடை சிறந்து.

இஃது ஆசிரியத்தளையானும், தன்றளையானும் வந்த வெண்கலிப்பா.

பிறவும் யாப்பருங்கல விருத்தியுட்காண்க.

நின்று விளங்கு மணிப்பசும் பொன்னிற மாறுறுப்பும்
ஒன்றிய வண்ணக வொத்தா ழிசைக்கலி யோசைகுன்றாத்
துன்றிய வாளார் மழையுஞ் சுடர்த்தொடீஇ யேர்மலரும்
என்றிவை வெண்கலிப் பாவிற் கிலக்கிய மேந்திழையே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும், வெண்கலிப்பாவிற்குங் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க.

12. தரவே தரவிணை தாழிசை தாமுஞ் சிலபலவாய்
மரபே யியன்று மயங்கியும் வந்தன வாங்கமைத்தோள்
அரவே ரகலல்கு லம்பேர் நெடுங்கண்வம் பேறுகொங்கை
குரவே கமழ்குழலாய் கொண்ட வான்பெயர் கொச்சகமே.

இ-கை. தரவு கொச்சகக்கலிப்பாவும், தரவிணைக்கொச்சகக் கலிப்பாவும், சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவும், பஃறாழிசைக்கொச்சகக் கலிப்பாவும், மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவும் ஆமாறுணர்த்து-ற்று.

"தரவே தரவிணை தாழிசை தாமுஞ் சிலபலவாய், மரபேயியன்று மயங்கியும் வந்தன" எ-து:—

ஒருதரவுவந்தும், இரண்டு தரவுவந்தும், தாழிசைசில வந்தும், தாழிசை பலவந்தும், தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்புந் தம்முண் மயங்கியும், வெண்பாவினோடும், ஆசிரியத்தினோடும் மயங்கியும் வருவனவெல்லாங் கொச்சகக்கலிப்பா என்று பெயரிட்டு வழங்கப்படும் எ-று.

"சொல்லின் முடிவி னப்பொருண் முடித்தல்" என்பது தந்திர வுத்தியாகலின் தரவுகொச்சக முதலாயின அப்பெயரானே வழங்கப்படும் எனக்கொள்க.

ஒருதரவுவந்தால் தரவுகொச்சகக் கலிப்பா என்றும், தரவு இரண்டாய் வந்தால் தரவிணைக் கொச்சகக் கலிப்பா என்றும், சிலதாழிசைவந்தால் சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா என்றும், பலதாழிசை வந்தால் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா என்றும், தம்முண்மயங்கியும் பிறவற்றினோடு மயங்கியும் வருவனவெல்லா மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா என்றும் வழங்கப்படும்.

"தாமும்" என்று மிகுத்துச் சொல்லியவதனால் தனிச்சொல்லும், சுரிதகமும் இடையிடை வரப்பெறும் எனக்கொள்க.

"மரபேயியன்றும்" என்று சிறப்பித்தவதனால் வரலாற்று முறைமை யோடுங்கூட்டிக் கலியுறுப்பில் மிக்கும், குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், மயங்கியும், கலியுள்

வாரா என்ற நேரீற்று இயற்சீரும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும், ஐஞ்சீர் அடியும் வந்து, ஒத்தாழிசைக் கலிப்பாக்களோடு ஒவ்வாது வருவனவெல்லாம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்று வழங்கப்படும் எனக்கொள்க.

"வாங்கமைத்தோள்——குழலாய்" என்பது மகடூஉ முன்னிலை.

* "கொண்டவான் பெயர் கொச்சகமே" என்பது $$ இறுதிவிளக்கு எனக்கொள்க.

வ-று.

**தரவு கொச்சகக் கலிப்பா.**

† "செல்வப்போர்—ஒளித்ததே"

இது சுரிதகம் இல்லாத தரவு கொச்சகக்கலிப்பா.

---

* இதன்பொருள் (மேற்சொல்லப்பட்ட இலக்கணத்தான் வரும்பாக்கள்) அமையப்பெற்ற சிறந்தபெயரானது கொச்சகம் என்பது.

$$ செய்யுளின் ஈற்றிலே நிற்குஞ்சொல் முன்னேயுள்ள சொற்கள் பலவற்றினோடுஞ் சேர்ந்து பொருளை விளைப்பது இறுதி விளக்கு எனக்கொள்க. இஃது 'இறுதிநிலைத் தீவகம்' எனவுங் கூறப்படும்.

**தரவுகொச்சகம்.**

† "செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே"

இச்செய்யுள் 31-வது பக்கத்திற் கலித்தளைக்கும் 39 வது பக்கத்திற் கலிப்பாவின் சிறுமைக்கும் 55வது பக்கத்தில் அகவற்றுள்ள லோசைக்கும் உதாரணமாகக் காட்டப்பட்டது.

### தரவு கொச்சகக் கலிப்பா.

†† " குடநிலை—சென்றவாறே "

இது தனிச்சொல்லும், சுரிதகமும் பெற்று வந்த தரவு கொச்சகக்கலிப்பா,

### தரவிணைக்கொச்சகக் கலிப்பா.

" வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனுங்
கொடிபடு மணிமாடக் கூடலார் கோமானே

இது தரவு.

எனவாங்கு, இது தனிச்சொல்.

துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் தொடர்ப்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமே லிதுவிதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரே;

இது தரவு.

அதனால், இது தனிச்சொல்.

" செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா றுங்கொலிஃ தெண்ணிய வாறே"

இது சுரிதகம்.

இஃது இடையிடைத்தனிச் சொற்பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் இற்ற தரவிணைக் கொச்சகக்கலிப்பா.

சுரிதகமில்லாதது வந்தவழிக் கண்டுகொள்க.

---

### தரவுகொச்சகம்.

†† " குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇத் தாங்குவனத் தேறப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப "

இது தரவு.

எனவாங்கு, தனிச்சொல்.

" ஆனொடு புல்லிப் பெரும்புதன் முனையுங்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே"

## சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

"பரூஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் றேரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே;

இது தரவு.

ஆங்கொருசார்,

உச்சியார்க் கிறைவனா யுலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனாப் பாவித்தார்
வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே;

ஆங்கொருசார்,

அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனாப் பாவித்தார்
சக்கரங் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே;

ஆங்கொருசார்,

மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனாப் பாவித்தார்
வேல்கொண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே;

இவை மூன்றுந் தாழிசை,

அஃதான்று, இது தனிச்சொல்.

"கொடித்தேர்த் தோன்றல் கொற்கைக் கோமான்
நின்புக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே"

இதுசுரிதகம்.

இது நான்கடித்தரவும், மூன்றடித் தாழிசை மூன்றும், சுரிதகமுமாய், இடையிடை தனிச்சொற் பெற்று, நேரிசை ஒத்தாழிசைக்கலிப்பாவிற் சிறிது வேறுபட்டு வந்தமையாற் சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.

**பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா.**

" தண்மதியேர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடைநிறையு முடன்றளர முன்னாட்கட்
கண்மதியொப் பிவையின்றிக் காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ. "

## இதுதரவு.

இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பற் றாழ்குழ றளர்வாளோ.
தகைநல மிவள்வாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில் லிருப்பாளோ.
அணிநல மிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநல மகிழ்மேனி மாசோடு மடிவாளோ.
நாம்பிரியே மினியென்று நறுநுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியோ மெனவுரைத்த வுயர்மொழியும் பழுதாமோ.
குன்றளித்த திரடோளாய் கொய்புனத்திற் கூடியநாள்
அன்றளித்த வருண்மொழியா லருளுவது மருளாமோ.
சில்பகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பல்பகலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ.

## இவையாறுந் தாழிசை.

**எனவாங்கு, இது தனிச்சொல்.**

அரும்பெற லிவளினுந் தரும்பொரு ளதனினும்
பெரும்பெற லரியன வெறுக்கையு மற்றே.

அதனால், விழுமிய தறிமதி வாழி

கெழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே.

இது சுரிதகம்,

இது நாலடித்தரவும், இரண்டடித்தாழிசை ஆறும், தனிச்சொல்லும், நான்கடிச்சுரிதகமும் பெற்றுவந்தபஃறாழிசைக்கொச்சகக்கலிப்பா.

**மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.**

"மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன நொய்ப்பறைய சிறையன்னம்
இரைநயந் திரைகூரு மேமஞ்சார் துறைவகேள்.
மலையென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கலையெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கலா
தெழுமுந்நீர் பரந்தொழுகு மேமஞ்சார் துறைவகேள்.

**இவை இரண்டுந்தரவு.**

கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோள்
தொடிநெகிழ்ந்த தோள்கண்டுந் துறவலனே யென்றியால்.
கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைய சிறுபுறத்தோள்
தெண்பனிநீ ருகக்கண்டுந் தெரியலனே யென்றியால்.
நீர்பூத்த நிரையிதழ்க்க ணின்றுருசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்.
கனைவரலாற் றிருகரைபோற் கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டு நீங்கலனே யென்றியால்.
வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கலாத்
தாழுமென் னிலைகண்டுந் தாங்கலனே யென்றியால்.
கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்.

**இவை யாறுந்தாழிசை.**

**அதனால், இது தனிச்சொல்.**

அடும்பயி விரும்பி னெடும்பணை மிசைதொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு.

செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்.

அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைவரு திரையொடு கரைபொருங் கடல்.

அலங்கொளி யவிர்சுட ரிலங்கொளி மலர்தொறுங்
கலந்தெறி காலொடு புலம்பின பொழில்.

இவை நான்கும் அராகம்.

விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ.

ஒல்லாது கழலுமென் னொளிவளையுஞ் செறிப்பாய்மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ.

தாங்காது கழலுமென் றகைவளையுந் தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ.

மறவாத வன்பினேன் மனனிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.

காதலார் மார்பின்றிக் காமக்கு மருந்துரையாய்
ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்.

இணைபிரிந்தார் மார்பின்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.

இவையாறுந் தாழிசை.

எனவாங்கு, இது தனிச்சொல்.

பகைபோன்றது துறை.
பரிவா யினகுறி.
நகையிழந் ததுமுகம்.
நனிநா ணிற்றுளம்.
தகையிழந் தனதோள்.
தலைசிறந் ததுதுயர்.
புகைபரந் ததுமெய்.
பொறையாயிற் றென்னுயிர்.

இவை இருசீரோரடி எட்டம் போதரங்கம்.

அதனால், இது தனிச்சொல்.

இனையது நினையா லினையது பொழுதால்
நினையல் வாழி தோழி தொலையாப்

பனியொடு கழிக வுண்கண்
என்னொடு கழிகவித் துன்னிய நோயே.

இது சுரிதகம்.

இது தரவு இரண்டும், தாழிசை ஆறும், தனிச்சொல்லும், அராகம் நான்கும், பெயர்த்தும் ஆறுதாழிசையும், தனிச்சொல்லும், இருசீரோரடி யெட்டம்போதரங்க உறுப்பும் பெற்று நான்கடி ஆசிரியச் சுரிதகத்தாலிற்றுக் கலிக்கோதப்பட்ட ஆறுறுப்பும், மிக்கும், குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், மயங்கியும் வந்தமையான் மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

வெண்பாவினோடும், ஆசிரியத்தினோடும் வந்த மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா யாப்பருங்கல விருத்தியுள் "காமர் கடும்புனல்" என்னும் பழம்பாட்டிற் கண்டுகொள்க.

இன்னும் 'மரபேயியன்றும்' என்று சிறப்பித்தவதனால், ஒருபோகுமுதலா உடையன வற்றையெல்லாம் இதனாற் பெயர்கொடுத்துக் கொச்சகம் என்று வழங்கப்படுமெனக் கொள்க.

என்னை:—

"எருத்திய லின்றி யிடைநிலை பெற்று
மிடைநிலை யின்றி யெருத்துடைத்தாயு
மெருத்த மிரட்டித் திடைநிலை பெற்று
மிடைய திரட்டித் தெருத்துடைத் தாயு
மிடையு மெருத்து மிரட்டுற வந்து
மெருத்த மிரட்டித் திடைநிலை யாறு
யடக்கியல் காறு மமைந்த வுறுப்பிற்
கிடக்கை முறைமையிற் கிழமைய தாயுந்
தரவொடு தாழிசை யம்போ தரங்க
முடுகியல் போக்கிய லென்றிவை யெல்லா
முறைதடு மாற மொழிந்தவை யின்றி
யிடையிடை வெண்பா சிலபல சேர்ந்து

மற்றும் பிறபிற வொப்புறுப் பில்லன
கொச்சக மென்னுங் குறிப்பின வாகும்

என்றார் காக்கை பாடினியார்.

" தரவே தரவிணை தாழிசை சிலபல
வரன்முறை பிறழ வயற்பா மயங்கியுந்
தனிச்சொற் பலவா யிடையிடை நடந்து
மொத்தா ழிசைக்கலி யுறுப்பினிற் பிறழ
வைத்த முறையான் வண்ணக விறுவாய்
மயங்கிவந் தனவு மியங்குநெறி முறைமையிற்
கொச்சகக் கலியெனக் கூறினர் புலவர் "

" ஒதப் பட்ட வுறுப்புவகை யெல்லா
மேதப் படாமற் கலிக்கியல் பெய்தி
மிக்குங் குறைந்தும் பிறழ்ந்து முறழ்ந்தும்
வண்ணமு மடியுந் தொடையு மயங்கியு
மடக்கிய லந்தந் தொடுத்தன பல்கியுங்
கலிவயிற் கடிந்த சீரிடை மிடைந்து
நாற்சீ ரிறந்த சீரொடு சிவணியு
முச்சீ ரிருசீ ரம்போ தரங்க
மச்சீர் முடிவிடை யழிவில தழுவியுங்
கொச்சகக் கலியெனக் கூறவும் படுமே."

" கூறிய வுறுப்பிற் குறைபா டின்றித்
தேறிய விரண்டுந் * தேவ பாணியுந்
தரவே யொழியினுந் தாழிசை யொழியினு

---

* தேவபாணியின் இலக்கணந் தொல்காப்பியம், செய்யுளியலில்
" எனையொன்றே,
தேவர்ப் பராஅய முன்னிலைக்கண்ணே "
என்னுஞ் சூத்திரத்தானும் அதனுரையானுமுணர்க

மிருவகை முத்திறத் தெண்ணே நீங்கினு
† மொருபோ கென்ப வுணர்ந்திசி னோரே.''

என்றாராகலின்.

" தரவின் றாகித் தாழிசை பெற்றுந்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியு
மெண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியு
மடக்கிய லின்றி யடிநிமிர்ந் தொழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது
கொச்சக வொருபோ காகு மென்ப.''

என்றார் தொல்காப்பியனார்.

இவற்றிற்கிலக்கியம் யாப்பருங்கலவிருத்தியுட் கண்டு கொள்க.

" குடநிலைத் தண்செல்வப் போர்க்கதக் கண்ணன் றரவுகுன்றா
வடிவுடை யாகுந் தரவிணை மன்னும் பரூஉத்தடக்கை
இடமிக வாஞ்சிஃ றாழிசை தண்மதி யேர்பலவாய்
மடலவிழ் கோதை மணிகிள ராகு மயங்கிசையே.''

இவ்வுரைச் சூத்திரக் காரிகைபின் வழியே கொச்சகக் கலிப்பாக்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.

13. அடிவரை யின்றி யளவொத்து மந்தடி நீண்டிசைப்பிற்
கடிதவில் லாக்கலித் தாழிசை யாகுங் கலித்துறையே
நெடிலடி நான்காய் நிகழ்வது நேரடி யீரிரண்டாய்
விடினது வாகும் விருத்தந் திருத்தகு மெல்லியலே.

---

† ஒருபோகானது, கொச்சக ஒருபோகும் அம்போதரங்க ஒருபோகும் என இருவகையாம். அடுத்துள்ள 'தரவின்றாகி' யென்னுந் தொல்காப்பியச் சூத்திரம் கொச்சக ஒருபோகின் இலக்கணங்கூறுவது; அம்போதரங்க ஒருபோகின் இலக்கணச் சூத்திரம் வருமாறு:-

" எருத்தே கொச்சக மராகஞ் சிற்றெண்
அடக்கியல் வாரமோ டந்நிலைக் குரித்தே ''

இதுவுந் தொல்காப்பியச் சூத்திரமே. இவற்றின் விரிவைத் தொல்காப்பியஞ் செய்யுளியலின் மேற்காட்டிய சூத்திரங்களின் உரையைக் கண்டுணர்க.

இ-கை. கலித்தாழிசையும், கலித்துறையும், கலிவிருத்தமும் ஆமாறுணர்த்து-ற்று.

"அடிவரை யின்றி யளவொத் தந்தடி நீண்டிசைப் பிற், கடிதலில்லாக்கலித் தாழிசையாகும்." எ-து:—

இரண்டடியும், பலவடியும் வந்து, ஈற்றடிமிக்கு, அல்லாத வடிதம்முள் ஒத்தும், ஒவ்வாதும் வருவது கலித்தாழிசை எ-று.

"கடிதலில் லாக்கலித்தாழிசை" என்று சிறப்பித்தவதனால், ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வருவது சிறப்புடைத்து; தனியே வரப்பெறுமாயினும் எனக்கொள்க.

வ-று.

"கொய்தினை காத்துங் குளவி யடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்"

"ஆய்தினை காத்து மருவி யடுக்கத்தெம்
மாசில் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டின்"

"மென்றினை காத்து மிகுபூங் கமழ்சோலைக்
குன்றச் சிறுகுடில் வாரனீ யைய நலம்வேண்டின்."

இவை யிரண்டடியாய் ஈற்றடிமிக்கு ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வந்தமையால் கலித்தாழிசை.

"வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போதி னெழால்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போதி னெழாலாய்க் குறுலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்."

இஃது ஈற்றடிமிக்கு, ஏனையடி மூன்றும் ஒத்துவந்த கலித்தாழிசை.

'அளவொத்தும்' என்ற உம்மையால் ஈற்றடிமிக்கு ஏனையடி ஒவ்வாது வரப்பெறும் எனவுங்கொள்க.

"பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே

நீண்ட சடையா னுடு மென்ப
மாண்ட சாயன் மலைமகள் காணவே காணவே."

இஃது ஈற்றடிமிக்கு இரண்டாமடி குறைந்து, முதலடியும், மூன்றுமடியும் ஒத்துவந்த கலித்தாழிசை.

சீர்வரையறுத்திலாமையால் எனைத்துச் சீரானும் அடியாய் வரப்பெறும் எனக்கொள்க.

என்னை:—

" அடியெனைத் தாகியு மொத்துவந் தளவிற்
கடையடி மிகுவது கலித்தா ழிசையே

என்பதியாப்பருங்கலம்.

" அந்தடி மிக்குச் சிலபல வாயடி
தந்தமு ளொப்பன தாழிசை யாகும் "

என்றாராகலின்.

" கலித்துறையே, நெடிலடி நான்காய் நிகழ்வது எ-து:-
ஐஞ்சீரடி நான்காய் வருவது கலித்துறை எ-று.

வ-று.

" யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே "

† " வென்றான் வினையின்—நீங்கிநின்றார். "

இவை நெடிலடி நான்காய் வந்த கலித்துறை.

என்னை:—

" நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை. "

என்பதியாப்பருங்கலம்.

" ஐஞ்சீ ரடியி னடித்தொகை நான்மையோ
டெஞ்சா தியன்றன வெல்லாங் கலித்துறை. "

என்றாராகலின்.

---

† இச்செய்யுளை 33-வது பக்கத்திற்காண்க.

"நேரடி யீரிரண்டாய், விடினது வாகும் விருத்தம்" எ-து:—
நாற்சீரடி நான்காய் வருவது கலிவிருத்தம் எ-று.
"திருத்தகு மெல்லியலே" என்பது மகடூஉ முன்னிலை.

வ—று.

"வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலில்
ஆய்தலி லொண்சுட ராழியி னுன்றமர்
வாய்தலி னின்றனர் வந்தனர் மன்னர்முன்
நீதலை சென்றுரை நீள்கடை காப்போய்."

$$ "தேம்பழுத் தினிய—தவள மாடமே"

என்னை:—

"அளவடி நான்கின கலிவிருத்தம்மே"

என்பதி யாப்பருங்கலம்.

கொய்தினை யாய்தினை மென்றினை வாள்வரி பூண்டபறை
எய்திய தாழிசை யானும்வென் றுனுங் கலித்துறையே
மைதிக ழோதி வரிநெடுங் கண்ண வனமுலையாய்
மெய்தரு வேய்தலை தேம்பழுத் தென்ப விருத்தங்களே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின் வழியே கலிப்பாவின நங்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க.

கலிப்பாவும், அதனினமும் முற்றிய.

---

**வஞ்சிப்பாவினமும், † வஞ்சிப்பாவிற்கீறமாறும்.**

14. குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்வஞ்சித்
துறையொரு வாது தனிவரு மாய்விடிற் சிந்தடிநான்
கறைதரு காலை யமுதே விருத்தந் தனிச்சொல்வந்து
மறைதலில் வாரத்தி னுவிறும் வஞ்சிவஞ் சிக்கொடியே.

---

$$ இச்செய்யுளையும் 33-வது பக்கத்திற் காண்க.

† இப்பாவிற்கு ஈறுமாறொழிய மற்றைய இலக்கணங்கள் உறுப்பியலில் 14-வது சூத்திரமாகிய "வெள்ளைக்கிரண்டடி" என்னுங் காரிகையினும், இவ்வியலின் முதற்சூத்திரமாகிய "வெண்பாவகவல்" என்னுங்காரிகையினுங் கூறப்பெற்றுள்ளன; ஆகலின், ஈண்டு அவற்றுட் கூறப்பெறாத ஈறுமாறொன்றுமே கூறினர்.

இ-கை. வஞ்சித்தாழிசையும் வஞ்சித்துறையும், வஞ்சி விருத்தமும், வஞ்சிப்பாவிற்கு ஈருமாறும் உணர்த்து-ற்று.

" குறளடி நான்கின மூன்ருெரு தாழிசை கோதில் " எ-து:—

இருசீரடி நான்காய் மூன்று செய்யுள் ஒருபொருண் மேல் அடுக்கி வருவன வஞ்சித்தாழிசையாம் எ-று.

"கோதில்" என்றுமிகுத்துச் சொல்லியவதனுல், அவை யொரு பொருண்மேன் மூன்றடுக்கி யல்லது வாரா எனக் கொள்க.

வ-று.

" மடப்பிடியை மதவேழம்
தடக்கையான் வெயின்மறைக்கும்
இடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண். "

" பேடையை யிரும்போத்து
தோகையான் வெயின்மறைக்குங்
காடக மிறந்தார்க்கே
ஓடுமென் மனனேகாண் "

" இரும்பிடியை யிகல்வேழம்
பெருங்கையான் வெயின்மறைக்கும்
அருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண் "

இவை இருசீரடி நான்காய் ஒருபொருண்மேன் மூன்றடுக்கி வந்தமையான் வஞ்சித்தாழிசை.

" வஞ்சித், துறையொரு வாதுதனி வருமாய்விடின் " எ-து:—

---

வெண்பா முதலிய மற்றைய மூன்று பாக்களுக்கும் அவ்விரு காரிகைகளினுங் கூறப்பெற்ற இலக்கணங்களன்றி வேருகக் கூறவேண்டிய இலக்கணங்கள் பெரிது முண்மையின் அப்பாக்கள் வெவ்வேருக விதந்து இலக்கணங் கூறப் பெற்றன.

இருசீரடிநான்காய் ஒருபொருண்மேல் ஒன்ருய் வருவது வஞ்சித்துறை எ-று.

வ-று.

" மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் காதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய் "

இது குறளடி நான்காய் ஒருபொருண்மேற் றனியேவந்தமையான் வஞ்சித்துறை.

என்னை:—

" குறளடி நான்மையிற் கோவை மூன்ருய்
வருவன வஞ்சித் தாழிசை தனிவரிற்
றுறையென மொழிப துணிந்திசி னேரே "

என்ருராகலின்.

"சிந்தடிநான், கறைதரு காலைவிருத்தம்" எ-து:—

முச்சீரடி நான்காய் வருவது வஞ்சி விருத்தம் எ-று.

வ-று.

" சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்க ழலார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயின்
நீல வுண்க ணிவள்வாழுமே "

இது சிந்தடி நான்காய் வந்தமையான் வஞ்சிவிருத்தம்.

என்னை:—

" சிந்தடி நான்காய் வருவன வஞ்சி
யெஞ்சா விருத்த மென்மனர் புலவர் "

என்பதியாப்பருங்கலம்.

"தனிச்சொல்வந்து, மறைதலில் வாரத்தினுலிறும் வஞ்சி" எ-து:—

குறளடி வஞ்சிப்பாவும், சிந்தடி வஞ்சிப்பாவுந் தனிச் சொற்பெற்று ஆசிரியச் சுரிதகத்தாலிறும் எ-று.

"மறைதலில் வாரம்" என்று சிறப்பித்தவதனால் வஞ் சிப்பா ஆசிரியச் சுரிதகத்தா லிறுவதல்லது வெள்ளைச் சுரித கத்தா லிறப்பெறாது எனக்கொள்க.

வ-று.

† "பூந்தாமரை" என்னுங் குறளடி வஞ்சிப்பா "நாளும்" என்னுந் தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தாலிற் றவாறும்,

வஞ்சிப்பா.

" கொடிவாலன குருநிறத்தன குறுந்தாளன
வடிவாளெயிற் றழலுளையன வள்ளுகிரன
பணையெருத்தி னிணையரிமா னணையேறித்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி
எயினடுவ ணினிதிருந் தெல்லோர்க்கும்
பயில்படுவினை பத்திமையிற் செப்பினோன்

புணையெனத்

திருவுறு திருந்தடி திசைதொழ
விரிவுறு நாற்கதி வீடுநனி யெளிதே."

இச்சிந்தடி வஞ்சிப்பா "புணையென" என்னுந் தனிச் சொற்பெற்று ஆசிரியச் சுரிதகத்தா லிற்றவாறுங் கண்டு கொள்க.

என்னை:—

" தூங்க லிசையன வஞ்சி மற்றவை
யாய்ந்த தனிச்சொலோ டகவலி னிறுமே"

என்பது யாப்பருங்கலம்.

"அமுதே" என்பதும், "வஞ்சிக்கொடியே" என்பதும் மகடூஉ முன்னிலை.

---

† இச்செய்யுளை 25 வது பக்கத்திற்காண்க.

மடப்பிடி பேடை யிரும்பிடி வஞ்சியின் ஞழிசையாம்
வடிப்புரை கண்ணினல் லாய்மை சிறந்தன வான்றுரையாந்
தடப்பெருஞ் சோலை விருத்தம தாகுந் தயங்குவஞ்சிக்
கொடித்தொடி பூந்தா மரைகொடி வால னுதாரணமே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின் வழியே வஞ்சிப்பா வினங்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.

வஞ்சிப்பாவின் இனமும், வஞ்சிப்பாவிற்கோரு மாறும் முற்றிய.

---

### மருட்பா.

15. பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்
தொண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை யூனமில்லா
வெண்பா முதல்வந் தகவல்பின் னுக விளையுமென்ருல்
வண்பான் மொழிமட வாய்மருட் பாவென்னும் வையகமே.

இ-கை. மருட்பாவாமா றுணர்த்து-ற்று

### இதன் பொழிப்பு.

புறநிலை வாழ்த்தும், கைக்கிளையும், வாயுறைவாழ்த்தும், செவியறிவுறாஉம் என்னும் நான்கு பொருண்மேலும் வெண்பாமுதலாக, ஆசிரியம் ஈருக வருமெனின் அதனைமருட்பா வென்று வழங்குவர் புலவர் எ-று.

"வண்பான் மொழிமடவாய்" என்பது மகடூஉ முன்னிலை.

என்னை:—

"வெள்ளை முதலா வாசிரிய மிறுதி
கொள்ளத் தொடுப்பது மருட்பா வாகும்."

என்ருராகலின்.

வ-று.

### மருட்பா.

"தென்ற லிடைபோழ்ந்து தேனுர் நறுமுல்லை
முன்றின் முகைவிரியு முத்தநீர்த் தண்கோளூர்க்

குன்றமர்ந்த கொல்லேற்ரு னிற்புறங் காப்ப
என்றுந் தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே."

இது வழிபடு தெய்வ நிற்புறங்காப்பப்பழி தீர்செல்வமோடு ஒரு காலைக்கொருகாற்சிறந்து பொலிமின் என்றமையாற்புற நிலைவாழ்த்து மருட்பா.

என்னை:—

"வழிபடுதெய்வ நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெருஅ."

என்ருர் தொல்காப்பியனுர்.

**மருட்பா.**

"திருநுதல் வேர்வரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயு — மரிபரந்த
சேயித ழுண்கணு மிமைக்கும்
ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே."

இது துணிதலை நுதலிய ஒரு தலைக்காமமாதலிற்கைக்கிளை மருட்பா.

என்னை:—

"காட்சி முதலாக் கலவியி னொருதலை
வேட்கையிற் புலம்புதல் கைக்கிளை யதுதான்
கேட்போ ரில்லாக் கிளவிகள் பெறுமே."

என்ருராகலின்.

**மருட்பா.**

"பலமுறையு மோம்பப் படுவன கேண்மின்
சொலன்முறைக்கட் டோன்றிச் சுடர்மணித்தே ரூர்ந்து
நிலமுறைபி னுண்ட நிகரில்லார் மாட்டுஞ்
சிலமுறை யல்லது செல்வங்க ணில்லா
இலங்கு மெறிபடையு மாற்றலு மன்புங்
கலந்ததங் கல்வியுந் தோற்றமு மேனைப்

பொலன்செய் புனைகலனே டிவ்வா றனும்
விலங்கிவருங் கூற்றை விலக்கலு மாகா
அனைத்தாத னீயிருங் காண்டீர்—நினைத்தக்க
கூறிய வெம்மொழி பிழையாது
தேறினீ ரொழுகிற் சென்றுபயன் றருமே."

இது மெய்ப்பொருள் சொன்னமையால் வாயுறைவாழ்த்து மருட்பா.

என்னை:—

" வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்,
வேம்புங் கடுவும் போல வெஞ்சொற்
றாங்குத லின்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தன்றே."

என்றார் தொல்காப்பியனார்.

மருட்பா.

" பல்யானை மன்னர் முருங்க வமருழந்து
கொல்யானைத் தேரொடுங் கோட்டந்து நல்ல
தலையாலங் கானம்பொலியத் தொலையாப்
படுகளம் பாடுபுக் காற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோன் மருக வடுதிறல்
ஆளி நிமிர்தோட் பெருவழுதி யெஞ்ஞான்றும்
ஈர முடையையா யென்வாய்ச்சொற் கேட்டி
உடைய வுழவரை நெஞ்சனுங்கக் கொண்டு
வருகா லுழவர்க்கு வேளாண்மை செய்யல்
மழவ ரிழைக்கும் வரைக்கா ணிதியீட்டங்
காட்டு மமைச்சரை யாற்றத் தெளியல்
அமைத்த வரும்பொருளா றன்றி வெளவல்
இனத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று *
மன்ற மறுக வகழாதி யென்றும்

---

* ஈண்டு வெண்டளை பொருந்தவில்லை. இதனைக் கவனித்தல் வேண்டும்.

மறப்புற மாக மதுரையா ரோம்பும்
அறப்புற மாசைப்பட் டேற்க வறத்தால்
அவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி சிதையாதி யொட்டார்
செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற் கவியுடைத்தாய்க்
கற்றார்க் கினனாகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றார்ச் செறுத்துநிற் சேர்ந்தாரை யாக்குதி
அற்ற மறிந்த வறிவினாய்—மற்றும்
இவையிவை வீயா தொழுகு நிலையாப்
பொருகட லாடை நிலமகள்
ஒருகுடை நீழற் றுஞ்சுவண் மன்னே."

இது வியப்பின்றி உயர்ந்தோர்கண் வியந்தொழுகுதல் கடனென வரசர்க்குரைத்தமையாற் செவியறிவுறாஉ மருட்பா.

என்னை:—

"செவியுறை தானே
பொங்குதலின்றிப் புரையோர் நாப்ப
ணவிதல் கடனெனச் செவியுறுத் தற்றே."

என்றார் தொல்காப்பியனார்.

"என்றிப்பொருண்மிசை" என்று மிகுத்துச்சொல்லியவதனால் இந்நான்கு பொருண்மேலுமன்றி மருட்பா வரப்பெறுமெனக்கொள்க.

என்னை:—

"புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறநிலை மூன்றுந் திண்ணிதிற் றெரியின்
வெண்பா வியலினு மாசிரிய வியலினும்
பண்புற முடியும் பாவின வென்ப."

என்றார் தொல்காப்பியனார்.

"பண்பார் புறநிலை" என்றும், "ஒண்பாச்செவியறிவு" என்றுஞ்சிறப்பித்தவதனால், புறநிலை வாழ்த்தும், வாயுறை

வாழ்த்தும், செவியறிவுறூஉம் இவ்வாறன்றி வெண்பாவே யாயும், ஆசிரியமேயாயும் வரப்பெறும்: கலியும், வஞ்சியுமாய் வரப்பெறா எனக்கொள்க.

என்னை:—

"கலிநிலை வகையும் வஞ்சி யும்பெறா
வாயுறை வாழ்த்தே யவையடக் கியலே
செவியறி வுறூஉ மென்றவையு மன்னே."

என்றாராகலின்.

"பாங்குடைக் கைக்கிளை" என்று சிறப்பித்தவதனால் கைக்கிளை எல்லாப்பாவானும் வரப்பெறும் மருட்பாவேயாய் வருகவென்னும் யாப்புறவில்லை என்றும், கைக்கிளைவெண்பா முதலாக ஆசிரியம் ஈறாகவரும்வழி ஆசிரியவடி இரண்டே யாய், அவற்றுள், ஈற்றயலடி முச்சீராய் வரும் என்றும், வெண்பாவடியும், ஆசிரியவடியும் ஒத்து வருவன சமநிலை மருட்பாவென்றும் ஒவ்வாதன வியனிலை மருட்பாவென்றும் வழங்கப்படும் என்றுங்கொள்க. "ஊனமில்லா வெண்பா" என்று சிறப்பித்தது வேற்று வண்ணம் விரவாது, வெள்ளை வண்ணம் எல்லா வண்ணத்துள்ளுஞ் சிறப்புடைத் தாய் மங்கலமரபிற்றாய், அவ்வாறே வேற்றுத்தளையும், அடி யும், சீரும் விரவாமையால் எல்லாப்பாவினுள்ளும் வெண்பா சிறப்புடைத்தென்று முன்வைக்கப்பட்டதென்பது அறிவித் தற்கு எனக்கொள்க.

"வேதவாய் மேன்மகனும் வேந்தன் மடமகளும்
நீதியாற் சேர்ந்து நிகழ்ந்த நெடுங்குலம்போல்
ஆதிசால் பாவு மரசர் வியன் பாவும்
ஓதியவா றேத மருட்பாவா யோங்கிற்றே."

"பண்ணுந் திறமும்போற் பாவு மினமுமாய்
வண்ண விகற்ப வகைமையாற்—பண்ணின்

திறம்விளரிக் கில்லதுபோற் செப்பலகவல்
இசைமருட்கு மில்லை யினம்."

இவற்றை விரித்துரைத்துக்கொள்க.

தென்றலிடையுந் திருநுதல் வேர்வரும் பன்முறையென்
றொன்றிய பாவும் பல்யானையு மென்பவொண் போதமைந்த
பொன்றிக ழோதி புறநிலை கைக்கிளை வாயுறைவாழ்த்
தென்றிவற் றிற்குஞ் செவியறி விற்கு மிலக்கியமே

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின் வழியே மருட்பா நான்கிற்குங் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக்கொள்க.

மருட்பா முற்றிற்று.

வெண்பா வளம்பட வீரடி யொன்றுட னேரிசையும்
கண்பானல் போன்மயி லந்தமின் மூன்றுங் கடைதருக்கி
நண்பார் தரவொன் றசைதர வேயடி யோடுகுறள்
பண்பார் புறநிலை செய்யு ளியலென்ப பாவலரே.

இது செய்யுளியற் சூத்திரங்களின் முதனினைப்புக் காரிகை.

இரண்டாவது செய்யுளியல்
முற்றிற்று.

## மூன்றுவது

### ஒழிபியல்.

1. சீருந் தளையுஞ் சிதையிற் சிறிய இஉ அளபோ
டாரு மறிவ ரலகு பெருமையை காரனைவேல்
ஒருங் குறிலிய லொற்றள பாய்விடி னேரலகாம்
வாரும் வடமுந் திகழு முகிழ்முலை வாணுதலே.

என்பது காரிகை.

இவ்வியல் என்ன பெயர்த்தோவெனின், உறுப்பியலுள்ளும், செய்யுளியலுள்ளுஞ் சொல்லா தொழிந்தவைகளை யுணர்த்தினமையால் ஒழிபியல் என்னும் பெயர்த்து.

இவ்வியலுள் இக்காரிகை என்னுதலிற்றோ வெனின் ஒருசார் எழுத்துகட் கெய்தியதோர் இலக்கண முணர்த்து-ற்று.

"சீருந் தளையுஞ் சிதையிற் சிறிய இஉ அளபோ, டாரு மறிவ ரலகுபெருமை" எ-து:—

சீருந்தளையுங் கெடவந்த விடத்துக் குற்றியலிகரமும், குற்றியலுகரமும், உயிரளபெடையும் அலகு காரியம் பெரு. எ-று.

"ஒற்றளபாய் விடினேரலகாம்" என்றுரைத் தமையால் ஈண்டுயிரளபெடை கொள்ளப்பட்டது.

"ஆருமறிவர்" என்று மிகுத்துச் சொல்லியவதனல், குற்றியலிகரமும், குற்றியலுகரமும் ஒற்றியல்பினவாய்நிற்கும்; உயிரளபெடைகள் நெட்டெழுத்தியல்பினவாய் நிற்கும் அலகிடு மிடத்தெனக்கொள்க.

எனவே எதிரது மறுத்தலென்னும் இலக்கணத்தாற் சீருந்தளையுந் திருந்த நிற்புழிச் 'சிறிய இஉ அளபோ டாரு மறிவ ரலகுபெறும்' என்பதாயிற்று.

இன்னும் "ஆருமறிவர்" என்று மிகுத்துச் சொல்லிய வதனால், அவை அலகு காரியம் பெறும்போது குற்றியலிக ரமும், குற்றியலுகரமுங் குற்றெழுத்தின் பயத்தவாம். உயி ரளபெடை அலகு காரியம் பெறுமாறு தங்காரிகையுட்போ க்கிச் சொல்லுதும்.

வ-று.

**நேரிசைவெண்பா.**

" சிறுநன்றி யின்றிவ*ர்க் கியாஞ்செய்தக்கா ளூளப்
பெறுநன்றி பின்னும் பெரிதென்—றுறுநன்றி
தானவாய்ச் செய்வதுந் தானமன் றென்பவே
வானவா முள்ளத் தவர் "

இதனுள், "இன்றிவர்க்கியாம்" என்புழி, குற்றியலி கரம்வந்து வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீராயிற்று. வெண் பாவினுள் வஞ்சியுரிச்சீர் விரவுமென்னும் ஒத்தில்லாமையால் வெண்பா வழிய நிற்குமாதலால், ஈண்டுக்குற்றிய லிகரத் தை இவ்விலக்கணத்தால் அலகு பெறாதென்று களையச் சீர்சி தையாதாம்.

**குறள்வெண்பா.**

† " குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர் "

**குறள்வெண்பா.**

" அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல் "

---

* ஈண்டுக் குற்றியலிகரம் அலகு பெற்றில தெனக் கொண்டு மூன்றேற்றுட னிலையாயினவாறு கண்டுகொள்க.

† "குழலினிதி யாழினி தென்பதம் மக்கள்" எனப்பிரி ப்பின் குற்றிய லிகரம் அலகுபெற நின்றே இவ்வடி வெண் டளை பொருந்துகின்றதாயினும் ஈண்டு உரையாசிரியர் உரை யிற் பிரித்துக்காட்டிய படியே பிரித்துக் காட்டப்பட்டது.

அடுத்த செய்யுளின் முதலடி குற்றிய லிகரம் அலகு பெறுதென நீக்கப்பட்டாலன்றி வெண்டளை பொருந்தும்படி பிரித்தற் கியலாமையைக் கண்டுகொள்க.

இவற்றுள், "குழலினி தியாழினிது" என்புழி ஆசிரியத்தளையும், "அருளல்ல தியாதெனில்" என்புழிக்கலித்தளையுந் தட்டு "வெள்ளைத்தன்மை குன்றிப்போஞ்சீர்கனி புகிற் புல்லாதயற்றளை" என்னும் இலக்கணத்தோடும், "வெள்ளையுட்பிறதளை வாராவல்லன, எல்லாத் தளையு மயங்கியும் வழங்கும்" என்னும் இலக்கணத்தோடும் மாறுகொள்ளு மாதலால், ஈண்டுக்குற்றிய லிகரத்தை இவ்விலக்கணத்தால் அலகுபெறாதென்று களையச் சீருந்தளையுஞ் சிதையாவாம்.

இனிக் குற்றிய லுகரத்திற்குச் சொல்லுமாறு.

### வஞ்சிப்பா.

" கொன்றுகோடுநீடு குருதிபாயவும்
சென்றுகோடுநீடு செழுமலைபொருவன
வென்றுகோடுநீடு விறல்வேழம்
என்றுமூடுநீடு பிடியுளபோலும்

### அதனால்,

இண்டிடை யிரவிவ ணெறிவரின்
வண்டுண் கோதை யுயிர்வா ழலளே "

இவ்விருசீரடி வஞ்சிப்பாவினுட் குற்றுகரம் வந்து ஐந்தசைச்சீரும், ஆறசைச்சீருமாயின. இவ்வாறு வருகவென்னும் ஒத்தில்லாமையிற் குற்றுகரத்தை இவ்விலக்கணத்தால் அலகு பெறாதென்று களையச்சீருந்தளையுஞ் சிதையாவாம்.

இனி உயிரளபெடைக்குச் சொல்லுமாறு.

### நேரிசைவெண்பா.

" பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்னந் தோன்றினவா—னெல்லுக்கு
நூறேூஒநூ றென்பா ணுடங்கிடைக்கு மென்முலைக்கு
மாறேூமா லன்றளந்த மண் "

இதனுள், "நூறேூஒநூறு" என்புழிப்பண்டமாற்றின்கண் அளபெடையநகரணம் வந்து வெண்பாவினுள் நாலசைச் சீராயிற்று. அவ்வாறு வருகவென்னும் ஒத்தில்லாமையால் இவ்வாறலகிட்டு உதாரணவாய்ப்பாட்டால் ஓசையூட்டும்பொழுது ஓசையுண்ணாது செப்பலோசை பிழைத்து நிற்குமாதலால், ஈண்டு உயிரளபெடையை இவ்விலக்கணத்தால்

அலகுபெறுதென்று நெட்டெழுத்தே போலக்கொண்டு அலகிடச் சீருந்தளையுஞ் சிதையாவாம்.

**நேரிசைவெண்பா.**

†† "இடைநுடங்க வீர்ங்கோதை பின்றாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்து-கடைகடையில்
உப்போஒ வெனவுரைத்து மீள்வா ளொளி முறுவற்
கொப்போநீர் வேலி யுலகு"

இதனுள், "உப்போஒ" என்புழிப் பண்டமாற்றின்கண் அளபெடையநுகரணம் வந்து கலித்தளைதட்டு வெண்பா வழிபடிற்கு மாதலின் ஈண்டு உயிரளபெடையை இவ்விலக்கணத்தால் அலகுபெறுதென்று நெட்டெழுத்தே போலக்கொண்டு அலகிடத் தளைசிதையாதாம்.

இனிக்குற்றியலிகர குற்றியலுகரங்கள் குற்றெழுத்தே போல நின்று அலகுபெறுமாறு:—

**நேரிசைவெண்பா.**

"வந்துநீ சேரி னுயிர்வாழும் வாராக்கான்
முந்தியாய் பெய்த வளைகழலு-முந்தியாங்
கோளானே கண்டநங் கோல்குறியா யின்னுமோர்
நாளானே நாம்புணரு மாறு."

இதனுள், "வந்துநீ" என்புழிக்குற்றியலுகரமும் "முந்தியாய்" என்புழிக்குற்றியலிகரமும்வந்து சீருந்தளையுந் திருந்திநிற்புழிக்குற்றெழுத்தின் பயத்தவாய்அலகுபெற்றவாறு கண்டுகொள்க.

---

†† இச்செய்யுளோடு அம்பிகாபதியும், கவிச்சக்கரவர்த்தி, கம்பநாட்டாழ்வாருமாகப் பாடியதென வழங்குவதாகிய

"இட்டடி நோக வெடுத்தடி கொப்புளிக்க
வட்டிற் சுமந்த மருங்கசையக்-கொட்டிக்
கிழங்கோஒ கிழங்கென்று கூறுவா ளவின்
வழங்கோசை வையம் பெறும்"

எனவருமிச் செய்யுள் ஒத்திருத்தலைக்காண்க.

என்னை:—

" தளைசீர் வண்ணந் தாங்கெட வரினே
குறுகிய விகரமுங் குற்றிய லுகரமு.
மளபெடை யாவியு மலகியல் பிலவே."

என்பதியாப்பருங்கலம்.

"ஐகாரநைவேலோருங் குறிலியல்" எ-து:—

ஒன்றரை மாத்திரை என்றோதப்பட்ட ஐகாரக்குறுக்கம் குற்றெழுத்தே போலக்கொண்டு அலகிடப்பெறும்எ-று.

'ஒரும்' என்பதிடைச்சொல்.

என்னை:—

" குறுமை யெழுத்தி னியல்பே யைகார
நெடுமையி னீங்கி யக்கால்"

என்றாகலின்.

வ-று.

**குறள்வெண்பா.**

" அன்னையையா னேவ தவமா லணியிழாய்
புன்னையையா னேவன் புலந்து"

**நேரிசைவெண்பா.**

" நடைக்குதிரை யேறி நறுந்தார் வழுதி
அடைப்பையையாய் கோறு வென லு-மடைப்பையரன்
சுள்ளற் சிறுகோல் கொடுத்தான் றனைப்பெறினும்
கொள்ளாதி யாங்காண் டலை."

**குறள்வெண்பா.**

" கெண்டையை வென்ற கிளரொளி யுண்கணாள்
பண்டைய ளல்லள் படி"

என்னுமிவற்றுள், ஐகாரக் குறுக்கம் குற்றெழுத்தே போலக் குறிலோடும், நெடிலோடுங் கூடி நின்ற நிரை அசையாயினவாறும், தனியே நின்ற நேரசையாயின வாறுங்கண்டு கொள்க.

"ஒற்றளபாய் விடினேரலகாம்" எ-து:—

ஒற்றுக்கள் அளபெழுந்தவிடத்து நேரசையாம் எ-று.

என்னை:—

" ஆய்தமு மொற்று மளபெழ நிற்புழி
வேறல கெய்தும் விதியின வாகும்"

என்ருர் காக்கைப்பாடினியார்.

அளபெழாதவிடத்து ஒற்றுக்கள் அலகுபெரு வென்ப தாம்.

என்னை:—

" தனிநிலை யொற்றிவை தாமல கியலா
வளபெடை யல்லாக் காலை யான"
" ஈரொற்ருயினு * மூவொற்ருயினு
மோரொற் றியல வென்மனர் புலவர்."

என்ருராகலின்.

---

* மூன்ருெற்றுட னிலையாய் வருதற்குதாரணம்:—

துவர்ப்பு, பீர்க்கு.

இவற்றுட் குற்றுகரத்தை மெய்யெழுத்தாகக்கொண்டு மூன்ருெற்றுடனிலையாதலைக் காண்க.

குற்றுகரத்தை மெய்யெழுத்தாகக்கொள்ள வேண்டுவ தென்னெனின் ஒரு மாத்திரையிற் குறைந்து மெய்யெழுத்திற்போல அரை மாத்திரைகொண்டு நிற்றலின் என்பது.

இதனைத் தொல்காப்பியம், எழுத்ததிகாரம், மொழிமர பியலில் "ஓரெழுத்தொருமொழி" என்னும் சூத்திரத்திற்கு நச்சினர்க்கினியார் எழுதியவுரையானுமுணர்க.

குற்றிய லிகரத்திற்கும் இவ்விதி யாமாறு கண்டு கொள்க.

"ஆருமறிவர் என்று மிகுத்துச் சொல்லிய வதனுன் அவை அலகுகாரியம் பெறும்போது குற்றியலிகரமும், குற்றியலுகரமுங் குற்றெழுத்தின் பயத்தவாம்" என்று இதற்குமுன்னே கூறப்பட்ட இச்சூத்திர உரையும் ஈண்டுக் கவனிக்கத்தக்கது.

கார்க்கடல், கார்ச்சேதம், கதிர்ச்செந்நெல், கடாய்க்கன்று என, ஈரொற்றுடனிலையாய் நிற்பினுங் குற்றெழுத்தின் பயத்தவாய் அலகுபெறு வென்பதூஉம், ஒற்றளபெழினும் மற்றோரெழுத்தினோடுங் கூடி நிரையசையாகா தென்பதூஉம் பெறப்பட்டன.

வ-று.

"கண்ண் டனனெனக் கண்டுங் கேட்டும்"

**இன்னிசைவெண்பா.**

" கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு
பொன்ன் பொறிசுணங்கு போழ்வா யிலவம்பூ
மின்ன் னுழைமருங்குன் மேதகு சாயலாள்
என்ன் பிறமகளா மாறு"

**குறள்வெண்பா,**

" எஃஃ கிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃஃ குவார்க்கில்லை வீடு."

இவற்றுள், ஒற்றும், ஆய்தமும் அளபெழுந்து ஓரலகு பெற்றவாறு கண்டு கொள்க.

"வாரும் வடமுந் திகழுமுகிழ்முலை வாணுதலே" என்பது மகடூஉ முன்னிலை.

2. விட்டிசைத் தல்லான் முதற்கட்டனிக்குறி னேரசையென்
றொட்டப் படாததற் குண்ணு னுதாரண மோசைகுன்று
நெட்டள பாய்விடி. னேர்நேர் நிரையொடு நேரசையாம்
இட்டத்தி னூற்குறில் சேரி னிலக்கிய மேர்சிதைவே.

---

இதனால் அலகு காரியம் பெறாதபோது குற்றிய லிகரமும், குற்றிய லுகரமு மெய்யெழுத்தின் பயத்தவாம் என்பதுபெறப்படுமா றறிக.

**நேரிசைவெண்பா.**

" குற்றிகரக் குற்றுகர மென்றிரண்டு மாய்தமு
மொற்று மெனவொரு நான்ககற்றிக்—கற்றோர்
உயிரு முயிர்மெய்யு மோதினர் கொள்ளச்
செயிர்தீர் செய்யு ளடிக்கு"

இவ்வெண்பாச் சூத்திரமும் ஈண்டுக் கவனிக்கத்தக்கது. இஃது இலக்கண விளக்கத்துட் காட்டப்பட்ட மேற்கோட் சூத்திரம்.

இ-கை. ஒருசார் அசைகட்கெய்தியதோர் இலக்கண முணர்த்து-ற்று.

"விட்டிசைத் தல்லான் முதற்கட்டனிக்குறி னேரசை யென் றெட்டப்படாது" எ-து:—

மேற்பொது வகையாற் † றனிக்குறில் நேரசை என் றராயினும், விட்டிசைத்து நின்றவழியல்லது மொழிமுதற் கணின்ற தனிக்குற்றெழுத்து நேரசையா மென்றுடம்படப் பெறாது. எ-று.

எனவே விட்டிசையாதவழி மொழிமுதற்கட்ட னிக்கு றில் குறிலோடும், நெடிலோடுங்கூடி நிரையசையாம் என்ப தாயிற்று.

"அதற்குண்ணு னுதாரணம்" எ-து:—

**நேரிசைவெண்பா.**

"உண்ணு னொளிநிறீஇ னோங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அ ஆ
இழந்தானென் றெண்ணப் படும்."

இதனுள் அ ஆ என்புழியருளின் கட்குறிப்பாய் மொழி முதற்கணின்ற குற்றெழுத்து விட்டிசைத்து நேரசையாயின வாறும், அல்லாதவழி குறிலோடும், நெடிலோடுங்கூடி நிரை யசையாயினவாறுங் கண்டுகொள்க.

**நேரிசைவெண்பா.**

"வெறிகமழ் தண்புறவின் வீங்கி யுகளு
மறிமுலை யுண்ணமை வேண்டிப்-பறிமுன்கை
அ உ மறியா வறிவி லிடைமகனே
நொஅலைய னின்னாட்டை நீ"

**குறள்வெண்பா.**

"அ அவனும் இ இவனும் உ உவனுங் கூடியக்கால்
எ எவனை வெல்லா ரிகல்"

---

† இதனை 17 வது பக்கத்தில் உறுப்பியலில் 5 வதுசூத் திரமாகிய "குறிலேநெடிலே" என்னுங் காரிகையுட் காண்க.

இவற்றின்கட் டனிக்குறின் முதற்கண் விட்டிசைத்து நேரசையாயினவாறு கண்டுகொள்க.

இவற்றுள் "அ உமறியா" என்பது தற்சுட்டுக் குறிப்புச்சொல். "நொ" என்பது செயவென் எச்சத்திறுதி தொக்கு முதனிலை குறுகிய ஏவற்குறிப்புச்சொல். "அ இ உ எ" என்பன சுட்டு வினாவாகிய குறிப்புச்சொல்.

"ஒட்டப்படா" என்று மிகுத்துச் சொல்லியவதனான் மொழிக்கு மூன்றிடத்தும் விட்டிசைத்து வந்த குற்றெழுத்து நேரசையாம் என்பதூஉம், விட்டிசைப்பதுதான் குறிப்பு, ஏவல், தற்சுட்டு, வினா, சுட்டு என்னும் ஐந்தன் கண்ணும் என்பதூஉம், குற்றெழுத்து விட்டிசைத்து நின்றவிடத்து மற்றோ ரெழுத்திேனாடுங் கூடி நிரையசை யாகாதென்பதூஉம் பெறப்பட்டன.

என்னை:—

"அ இ உ எ ஒ இவை குறிய
மற்றைய வேழ்நெட் டெழுத்தா நேரப்படும்"

இதனுண் மொழிக்கு மூன்றிடத்தும், விட்டிசைத்து வந்த குற்றெழுத்து நேரசையாயினவாறு கண்டுகொள்க.

இவைதற்சுட்டு. ஏவல்வந்தவழிக் காண்க.

என்னை:—

"ஏவல் குறிப்பே தற்சுட் டல்வழி
யாவையுந் தனிக்குறின் முதலசை யாகா"

என்றார் மயேச்சுரர்.

"ஓசைகுன்றா நெட்டளபாய் விடினேர் நேர்" எ-து:—

நெட்டெழுத்து அளபெழுந்து வருமெனின் அஃது இரண்டு நேரசையாக வைக்கப்படும் எ-று.

"ஓசைகுன்றா" என்று மிகுத்துச் சொல்லிய வதனான் மூன்று மாத்திரையின் மிக உச்சரிப்பினும்,நேர் நேராகவைக்கப்படும் எனக்கொள்க.

"நிரையொடு நேரசையாமிட்டத்தினுற் குறில் சேரின் எ-து:—

குற்றெழுத்தினேடு புணர்ந்த நெட்டெழுத்து அளபெழுந்தால் அவ்விரண்டனையுங் கூட்டி நிரை அசையும், நேர் அசையுமாக வைக்கப்படும் எ-று.

"இலக்கியமேர் சிதைவே" எ-து:—

**குறள்வெண்பா.**

" ஏஎர் சிதைய வழாஅ லெழாஅநின்
சேயரி சிந்திய கண்"

இப்பாட்டு நேர் நேராதற்கும், நிரைநேராதற்கும் இலக்கியமாம் என்க. "ஏஎர்" என நேர் நேராயிற்று.

"அழால், எழா அ" என நிரைநேராயிற்று.

"இட்டத்தினல்" என்று மிகுத்துச் சொல்லியவதனல், பின்னின்ற குறிலோடும், நெடிலோடுங் கூடி அளபெடை நிரை அசையாகாது எனக்கொள்க.

என்னை:—

" தனிநிலை யளபெடை நேர்நேரியற்றே
யிறுதிநிலை யளபெடை நிரைநேரியற்றே "

என்றார் நத்தத்தனர்.

3. மாஞ்சீர் கலியுட் புகாகலிப் பாவின் விளங்கனிவந்
தாஞ்சீ ரடையா வகவ லகத்துமல் லாதவெல்லாந்
தாஞ்சீர் மயங்குந் தளையும தேவெள்ளைத் தன்மைகுன்றிப்
போஞ்சீர் கனிபுகிற் புல்லா தயற்றளை பூங்கொடியே.

இ-கை. சீருந், தளையுஞ் செய்யுளகத்து நிற்பதோர் முறைமையுணர்த்து-ற்று.

"மாஞ்சீர்கலியுட்புகா" எ-து:—

'தேமா, புளிமா' என்னும் நேரீற்றியற்சீரிரண்டும் கலிப்பாவினுட் புகப்பெறு எ-று.

"கலிப்பாவின் விளங்கனி வந்தாஞ் சீரடையா" எ-து:—

'கருவிளங்கனி, கூவிளங்கனி' என்னும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரிரண்டுங் கலிப்பாவினுட் புகப்பெறு எ-று.

"அகவலகத்தும்" எ-து:—

ஆசிரியப்பாவினுள்ளுங் 'கருவிளங்கனி, கூவிளங்கனி' என்னும் இரண்டு சீரும்புகப்பெறா எ-று.

(கு) "அல்லாத வெல்லாந்தாஞ்சீர் மயங்கும்" எ-து:—

இவையொழிந்த சீர்கள் எல்லாப் பாவினுள்ளும், பாவினத்துள்ளும் வந்து மயங்கப்பெறும் எ-று.

"தளையுமதே" எ-து:—

எல்லாத்தளையும் எல்லாப்பாவினுள்ளும், எல்லாப்பாவினத்துள்ளும் வந்து மயங்கப்பெறும் எ-று.

"வெள்ளைத் தன்மை குன்றிப்போஞ் சீர்கனிபுகில்" எ-து:—

'எல்லாச்சீரும் எல்லாப் பாவினுள்ளும், பாவினத்துள்ளும் வந்துமயங்கப்பெறும்' என்றாராயினும் வஞ்சியுரிச்சீர் நான்கும் வெண்பாவிற் புகப்பெறா; புகிற்செப்பலோசையழிந்து வேறுபட்டு ஓசை யுண்ணாது கெடும் எ-று.

"புல்லா தயற்றளை" எ-து:—

'எல்லாத்தளையும் எல்லாப் பாவினுள்ளும், பாவினத்துள்ளும் வந்து மயங்கப்பெறும்' என்றாராயினும், வெண்பாவில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் அல்லது வேற்றுத்தளை விரவாது எ-று.

"பூங்கொடியே" என்பது மகடூஉ முன்னிலை.

வ-று.

$$ "குடநிலைத்தண்புறவில்—சென்றவாறே"

என்னுந்தரவு கொச்சகக்கலிப்பாவில் நேரீற்றியற்சீரும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வாராது, நிரையீற்றாசிரிய உரிச்சீரும், வெண்பா உரிச்சீரும், நேர்நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வந்து, வெண்டளையும், ஆசிரியத்தளையும், கலித்தளையும், வஞ்சித்தளையு மயங்கி வந்தவாறு கண்டுகொள்க.

---

$$ இச்செய்யுளை 108 வது பக்கத்திலுள்ள குறிப்பிற் காண்க.

### நேரிசையாசிரியப்பா.

" நெடுவரைச் சாரற் குறுங்கோட்டுப் பலவின்
விண்டுவார் தீஞ்சுளை வீங்குகவுட் கடுவன்
உண்டு சிலம்பேறி யோங்கிய விருங்கழைப்
படிகம் பயிற்று மென்ப
மடியாக் கொலைவி லென்னையர் மலையே "

இவ்வாசிரியத்துள், தன்சீரும், வெண்சீரும், நேர்நடு வாகிய வஞ்சியுரிச்சீரும்வந்து, வெண்டளையும், தன்றளையும், கலித்தளையும், வஞ்சித்தளையு மயங்கி வந்தவாறு கண்டு கொள்க.

### வஞ்சிப்பா.

" மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரும் வளியும்
வளிதலைஇய தீயும்
தீமுரணிய நீரும் "

### வஞ்சிப்பா.

" புன்காற் புணர்மருதின்
போதரும்பிய புனற்றாமரை
தேன்றூட் டீங்கரும்பின்
பூந்தாட் புனற்றாமரை
வார்காற் செங்கழுநீர் "

இக்குறளடி வஞ்சிப்பாக்களுள், வெண்சீரும், தன்சீரும், நேரீற்றியற்சீரும், வந்து, வெண்டளையும், தன்றளையும், கலித்தளையும், ஆசிரியத்தளையு மயங்கி வந்தவாறு கண்டு கொள்க.

"முழங்குதிரைக் கொற்கை வேந்தன்" என்னும் வெண்டுறையுள் வஞ்சியுரிச்சீரும், இயற்சீரும், வெண்சீரும், வஞ்சித்தளையும், ஆசிரியத்தளையும், வெண்டளையும், கலித்தளையு மயங்கி வந்தவாறு கண்டுகொள்க.

## கலிவிருத்தம்.

" வளர்கொடியன மணம்விரிவன மல்லிகையொடு மௌவல்
நளிர்கொடியன நறுவிரையன நகுமலரன வகுளம்
குளிர்கொடியன குழைமாதவி குவிமுகையன கோங்கம்
ஒளிர்கொடியன வுயர்தளிரினொ டொழுகிணரன வோடை"

இக்கலிவிருத்தத்துள், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும், நேரீற்றியற்சீரும், வஞ்சித்தளையும், ஆசிரியத்தளையு மயங்கி வந்தவாறு கண்டுகொள்க.

நேரீற்றியற்சீர் ஒத்தாழிசைக் கலியுள் வாராதவாறும். நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் கலிப்பாவுள்ளும், ஆசிரியத்துள்ளும் வாராதவாறும், வெண்பாவினுள்ளும் வஞ்சியுரிச்சீர் வாராதவாறும், வேற்றுத்தளை விரவாமையும் மேற்காட்டிய செய்யுளகத்தும், பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க.

நேரீற்றியற்சீர் வெண்கலியுள்ளும், கொச்சகத்துள்ளும் வருதலும், நிரைநடுவாகியவஞ்சியுரிச்சீர் கொச்சகத்துள் அருகிவருதலுஞ் செய்யுளோத்துள்ளே சொல்லப்பட்டன.

## நேரிசைவெண்பா.

" குலாவணங்கு வில்லெயினர் கோன்கண்டன் கோழி
நிலாவணங்கு வெண்மணன் மேனின்று—புலாலுணங்கல்
கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ நீபிறர்
உள்ளம்புக் காப்ப துரை"

இவ்வெண்பாவினுள், வஞ்சியுரிச்சீர் வந்தனவாலோ வெனின், திருவள்ளுவப்பயன், நாலடி நானூறு முதலாகிய கீழ்க்கணக்குள்ளும், முத்தொள்ளாயிர முதலாகியசான்றோர் செய்யுளுள்ளும் வஞ்சியுரிச்சீர் வந்திலாமையானும், வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீர் வருகவென்னும் ஒத்தில்லாமையானும், வேற்றுத்தளை வெண்பாவினுள் வந்திலாமையானும் இத்தொடக்கத்தன குற்றமல்லது குணமாகா என்பது காக்கைபாடினியார் முதலாகிய தொல்லாசிரியர் துணிவு. அதுவே இந்நூலுடையார்க்கு முடன்பாடு.

என்னை:—

“ இயற்சீர் நேரீற்றுத் தன்றளை யடைதல்
கலிக்கியல் பில்லே காணுங் காலை
வஞ்சி யுள்ளும் வரத்தகா வாயினு
மொரோவிடத் தாகு மென்ப”

என்றார் பல்காயனார்.

“ நிரைநடு வில்லா வஞ்சி யுரிச்சீர்
கலியினோ டகவலிற் கடிவரை யிலவே”

என்றாராகலின்.

4. இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாத மகவலுள்ளான்
மயக்கப் படாவல்ல வஞ்சி மருங்கினெஞ் சாவகவல்
கயற்கணல் லாய்கலிப் பாதமு நண்ணுங் கலியினுள்ளான்
முயக்கப் படுமுதற் காலிரு பாவு முறைமையினே.

இ-கை. அடிமயக்க மாமாறுணர்த்து-ற்று.

“இயற்றளை வெள்ளடி வஞ்சியின்பாத மகவலுண்மயக்கப்படாவல்ல” எ-து:—

இயற்சீர் வெண்டளையான் வந்த வெண்பாவடியும், வஞ்சியடியும் ஆசிரியப்பாவினுள்வந்து மயங்கப்பெறும் எ-று.

என்னை:—

“ இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கி
னிலைக்குரி மரபி னிற்கவும் பெறுமே”

என்றார் தொல்காப்பியனார்.

“ வஞ்சி விரவ லாசிரிய முரித்தே
வெண்பா விரவினுங் கடிவரையின்றே”

என்றார் பல்காயனர்.

வ—று.

## நேரிசையாசிரியப்பா.

“ எறும்பி யளையுட் குறும்பல் சுனைய
உலைக்க லன்ன பாறை யேறிக்
கொடுவில் லெயினர் பகழி மாய்க்குங்

கவலைத் தென்ப வவர்தேர் சென்றவாறே
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கலுழுமிவ் வழுங்க லூரே."

இதனுள், "எறும்பியளையுட் குறும்பல் சுனைய" என்பது இயற்றளை வெள்ளடி. இதனை,

"எறும்பி யளையுட் குறும்பல் சுனைய
குறுந்தொடி யாஞ்செல் சுரம்"

என உச்சரித்துவெள்ளடியாமாறு கண்டு கொள்க.

" இருங்கட லுடுத்த பெருங்கண் மாநிலத்
துடைநிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடு பதியாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தோரே
அதனால், நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்கண்
உப்பிலாவவிப் புழுக்கல் கைக்கொண்டுபி றர்க்குநோக்கா
திழிபி றப்பினோ னீயப் பெற்று
நிலங்கல னாக விலங்கு பலிமிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்திநீ முன்னிய வினையே
முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே."

இதனுள், "உப்பிலாவவிப் புழுக்கல் கைக்கொண்டுபிறர்க்குநோக்கா" எனவும், இழிபிறப்பினோ னீயப்பெற்று" எனவும் வஞ்சியடி விரவிவந்தவாறு கண்டு கொள்க.

"மயக்கப்படும்" என்னாது "மயக்கப்படாவல்ல" என்று இருகால் விலக்கிச் சொல்லியவதனால் வெண்சீர்விரவிய இயற்றளைவெள்ளடியும், கலியடியும் ஆசிரியத்துள் அருகிவரப் பெறும் எனக்கொள்க.

வ-று.

## நேரிசை யாசிரியப்பா.

" அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்பு மனைக்கலங்கி
எதின் மாக்களு நோவார் தோழி
யென்று நோவா ரில்லை
தண்கடற் சேர்ப்ப னுண்டவென் னலக்கே."

இதனுள், அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டென என்பது வெண்சீர்விரவிய இயற்றளை வெள்ளடி. இதனை,

" அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டெனப்
பொங்கிய பூசல் பெரிது"

என உச்சரித்து வெள்ளடியாமாறு கண்டுகொள்க.

## நேரிசை யாசிரியப்பா.

" குருகுவெண் டாளி கொடுபுயத் துண்டென
மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணது
மருள்பிடி திரிதருஞ் சாரல்
அருளா னுகுத லாயிழை கொடிதே"

இதனுள் இரண்டாமடி கலியடி. இதனை,

" மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணது
தீவழங்கு சுழல்விழிக்கட் சீயஞ்சென் றுழலுமே"

என உச்சரித்துக் கலியடி யாமாறு கண்டுகொள்க.

" வஞ்சி மருங்கினெஞ் சாவகவல், கலிப்பாதமு நண்ணும்" எ-து:—

வஞ்சிப்பாவினுள் ஆசிரிய அடியும், கலியடியும் விரவி வரப்பெறும் எ-று.

"எஞ்சாவகல்" என்று சிறப்பித்தவதனல், வஞ்சியுள் ஆசிரியவடி பயின்றுவரும்; கலியடியும், வெள்ளடியும் அருகியன்றி வாரா எனக்கொள்க.

"கயற்கணல்லாய்" எ-து. மகடூஉ முன்னிலை.

'பட்டினப்பாலை' என்னும் வஞ்சி நெடும்பாட்டினுள் ஆசிரிய வடிபயின்று வந்தன; கலியடியும், வெள்ளடியும் அருகின எனக்கொள்க.

"நேரிழை மகளி ருண்கண் கவரும்" என்றித் தொடக்கத்தன ஆசிரியவடி.

"வயலாமை புழுக்குண்டு வறளடம்பின் மலர்மிலைந்து" எ-து கலியடி. இதனை,

" வயலாமை புழுக்குண்டு வறளடம்பின் மலர்மிலைந்து
கயனுட்டக் கடைசியர்தங் காதலர்தோண் மணந்தனரே "

என உச்சரித்துக் கலியடியாமாறு கண்டு கொள்க.

"கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழாய்" என்பது வெள்ளடி. இதனை,

" கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
யாழிசூழ் வையக் கணி"

என உச்சரித்து வெள்ளடியாமாறு கண்டுகொள்க.

"கலியினுண் முயக்கப்படு முதற்காலிருபாவும்" எ-து:—

கலிப்பாவினுள் வெண்பா வடியும், ஆசிரிய வடியும் புக்குமயங்கப் பெறும் எ-று.

" முறைமையினே " எ-து:—

முறைமையோடுங் கூட்டி வழங்கப்படும் எ-று.

என்னை:—

**நேரிசை வெண்பா.**

" ஆசிரியப் பாவி னயற்பா வடிமயங்கும்
ஆசிரியம் வெண்பா கலிக்கண்ணு—மாசிரியம்
வெண்பாக் கலிவிரவும் வஞ்சிக்கண் வெண்பாவின்
ஒண்பா வடிவிரவா வுற்று. "

இதனை விரித்துரைத்துக் கொள்க.

"காமர் கடும்புனல்" என்னு மயங்கிசைக் கொச்சகக்கலிப்பாவினுள் வெண்பாவும், ஆசிரியப்பாவு மயங்கினவாறு கண்டுகொள்க. ஆல் இரண்டும் அசை.

5. அருகிக் கலியோ டகவன் மருங்கினைஞ் சீரடியும்
வருதற் குரித்தென்பர் வான்றமிழ் நாவலர் மற்றொருசார்
கருதிற் கடையே தடையிணை பின்கடைக் கூழையுமென்
றிரணத் தொடைக்கு மொழிவ ரிடைப்புணர் வென்பதுவே.

இ-கை. ஒருசார் அடிக்கும், தொடைக்கும் எய்தியதோர் இலக்கண முணர்த்து-ற்று.

"அருகிக் கலியோ டகவன் மருங்கினைஞ் சீரடியும், வருதற் குரித்தென்பர் வான்றமிழ் நாவலர்" எ-து:—

ஒருசார் கலிப்பாவி னுள்ளும், ஆசிரியப்பாவினுள்ளும் ஐஞ்சீர் அடியும் அருகிவரப்பெறும் என்று சொல்லுவர் புலவர் எ-று.

வ-று.

"அணிகிளர் சிறுபொறி யவிர்துத்தி மாநாகத் தெருத்தேறித்
துணியிரும் பனிமுந்நீர் தொட்டுழந்து மலைந்தனையே"

இக்கலிப்பாவில் முதலடி ஐஞ்சீரடி வந்தவாறு கண்டு கொள்க.

**நேரிசையாசிரியப்பா.**

"உமணர்ச் சேர்ந்து கழிந்த மருங்கி னகன்றலை
ஊர்பாழ்த் தன்ன வோமையம் பெருங்காட்
டின்னா வென்றீ ராயின்
இனியவோ பெரும தமியேற்கு மனையே"

இவ்வாசிரியத்துண் முதலடி ஐஞ்சீர் வந்தவாறு கண்டு கொள்க. "சிறியகட் பெறினே" என்னும் இணைக்குறளாசிரியப்பாவி னுள்ளும் ஐஞ்சீரடி வந்ததெனக்கொள்க. இவ்வாறே,

"வெண்டளை விரவியு மாசிரியம் விரவியு
மைஞ்சீ ரடியு முளவென மொழிப"

என்றார் தொல்காப்பியனார்

வெண்பாவினுள் ஐஞ்சீரடி வரப்பெறாதெனக்கொள்க

"ஐஞ்சீ ரடுத்தலு மண்டில மாகலும்
வெண்பா யாப்பிற் குரிய வல்ல"

என்று நத்தத்தனர் அடிநூலில் எடுத்தோதினர்.

"மற்றொருசார், கருதிற் கடையே கடையிணை பின் கடைக்கூழையுமென், றிரணத் தொடைக்கு மொழிவ ரிடைப்புண ரென்பதுமே" எ-து:—

ஒருசார் ஆசிரியர் முரண்டொடையைக் கடை முரணும், கடையிணை முரணும், பின்முரணும், கடைக்கூழை முரணும், இடைப்புணர்முரணும் என்றுவேண்டுவர்எ-று.

இரணத்தொடை எனினும், பகைத்தொடை எனினும், முரண்டொடை எனினும் ஒக்கும்.

என்னை:—

"மொழியினும் பொருளினு முரணத் தொடுப்பி
னிரணத் தொடையென் றெய்தும் பெயரே"

"மறுதலை யுரைப்பினும் பகைத்தொடை யாகும்"

என்றாராகலின்.

அவற்றுள்,கடைமுரணாவது:— அடிதோறும் இறுதிச் சீர்க்கண் மறுதலைப்படத் தொடுப்பது.

கடையிணை முரணாவது:—கடை இருசீர்க்கண் மறுதலைப்படத் தொடுப்பது.

பின்முரணாவது:— இரண்டாஞ் சீர்க்கண்ணும், நான்காஞ்சீர்க்கண்ணு மறுதலைப்படத் தொடுப்பது.

கடைக்கூழை முரணாவது:— முதற்சீர்க்கண் இன்றியொழிந்த மூன்று சீர்க்கண்ணு மறுதலைப்படத் தொடுப்பது.

இடைப்புணர் முரணாவது:— நடு இருசீர்க்கண்ணு மறுதலைப்படத் தொடுப்பது.

வ-று.

### நேரிசையாசிரியப்பா.

"கயன்மலைப் பன்ன கண்ணிணை கரிதே
தடமுலை திவளுந் தனிவடம் வெளிதே

நூலி னுண்ணிடை சிறிதே
ஆடமைத் தோளிக் கல்குலோ பெரிதே"

இஃது அடிதோறும் இறுதிச்சீர்க்கண் மறுதலைப்படத் தொடுத்தமையாற் கடையிணை முரண்.

நேரிசையாசிரியப்பா.

"மீன்றேர்ந் தருந்திய கருங்கால் வெண்குருகு
தேனுர் ஞாழல் விரிசினை குழூஉம்
தண்ணந் துறைவன் றவிர்ப்பவுந் தவிரான்
தேரோ காணலங் காண்டும்
பீரோ வண்ணமுஞ் சிறுநுதற் பெரிதே"

இஃது அடிதோறுங்கடை இருசீர்க் கண்ணு மறுதலைப்படத் தொடுத்தமையாற் கடையிணை முரண்.

நேரிசை யாசிரியப்பா.

"சார லோங்கிய தடந்தாட் டாழை
கொய்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து
தமியே மிருந்தன மாக நின்றுதன்
நலனுடைப் பணிமொழி நன்குபல பயிற்றி
வீங்குதொடிப் பணைத்தோ ணெகிழத்
துறந்தோ னல்லனம் மேனியோ தீதோ"

இஃது அடிதோறுங் கடைச்சீரும், இரண்டாஞ் சீரு மறுதலைப்படத் தொடுத்தமையாற் பின்முரண்.

நேரிசை யாசிரியப்பா.

"காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடி
பூவிரி சுரிமென் கூந்தலும்
வேய்புரை தோளு மணங்குமா லெமக்கே"

இது முதற்சீரொழிந்த மூன்றுசீரு மறுதலைப்படத் தொடுத்தமையாற் கடைக்கூழைமுரண்.

நிலைமண்டில வாசிரியப்பா.

"போதுவிரி குரிஞ்சி நெடுந்தண் மால்வரைக்
கோதையிற் றாழ்ந்த வோங்கல்வெள் ளருவி

காந்தளஞ் செங்குலைப் பசுங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விரைஇப்
பெருமலைச் சீறூ ரிழிதரு நலங்கவுர்ந்
தின்னு வாயி னினியோர் மாட்டே"

இஃது இடை இருசீரு மறுதலைப்படத் தொடுத்தமை யால் இடைப்புணர் முரண்.

இவ்வாறு சொன்னார் கையனார் முதலாகிய ஆசிரியர் எனக்கொள்க.

இனி "இரணத் தொடைக்கும்" என்ற உம்மையால் ஒழிந்தமோனை, இயைபு, எதுகை, அளபெடை என்னுந் தொடை நான்கிற்கும் இவ்வாறே யொட்டிக்கொள்க. அவை கூடி வழங்குமாறு:—

| | |
|---|---|
| கடைமோனை | கடையெதுகை |
| கடையிணைமோனை | கடையிணை யெதுகை |
| பின்மோனை | பின்னெதுகை |
| கடைக்கூழைமோனை | கடைக்கூழையெதுகை |
| இடைப்புணர்மோனை— எனவும் | இடைப்புணரெதுகை — எனவும் |
| கடையியைபு | கடையளபெடை |
| கடையிணை இயைபு | கடையிணையளபெடை |
| பின்னியைபு | பின்னளபெடை |
| கடைக்கூழையியைபு | கடைக்கூழையளபெடை |
| இடைப்புணரியைபு—எனவும் | இடைப்புணரளபெடை-எனவும் |

கண்டு கொள்க. இவற்றிற் கிலக்கியம் யாப்பருங்கலவிருத்தி யுட் கண்டுகொள்க.

6. வருக்க நெடிலினம் வந்தா லெதுகையு மோனையுமென்
றொருக்கப் பெயரா னுரைக்கப் படுமுயி ராசிடையிட்
டிருக்கு மொருசா ரிரண்டடி மூன்று மெழுத்துமொன்றி
நிரக்கு மெதுகையென் றுலுஞ் சிறப்பில நேரிழையே.

இ-கை. ஒருசார் எதுகைக்கும், மோனைக்கும் எய்திய தோர் இலக்கணமுணர்த்து-ற்று.

"வருக்க நெடிலினம் வந்தா லெதுகையு மோனையுமென், றொருக்கப் பெயரா னுரைக்கப்படும்" எ-து:—

வருக்கவெழுத்தும், நெடிலெழுத்தும், இனவெழுத்தும், எதுகையும், மோனையுமாய் வந்தால், அவை—வருக்கவெதுகை, நெடிலெதுகை, இனவெதுகை எனவும்,

வருக்கமோனை, நெடின்மோனை, இனமோனை எனவும் பெயரிட்டு வழங்கப்படும் எ-று.

வ-று.

இன்னிசை வெண்பா.

" நீடிணர்க் கொம்பர்க் குயிலாலத் தாதூதிப்
பாடும்வண் டஞ்சி யகலும் பருவத்துத்
தோடார் தொடிநெகிழ்த்தா ருள்ளார் படலொல்லாப்
பாடமை சேக்கையுட் கண் "

இது டகரமெய் வருக்க வெதுகை.

$$ " அறத்தா றிதுவென—னிடை "

இது றகரமெய் வருக்கவெதுகை.

†† " ஆவாவென்றே—ஒருசாரார் "

என்பது இரண்டாமெழுத்தொன்றா தாயினும் இரண்டாமெழுத்தின் மேலேறிய நெடில் ஒப்புமை நோக்கி நெடிலெதுகை என்று வழங்கப்படும்.

இனி, இனவெதுகை மூன்று வகைப்படும்; வல்லினவெதுகையும், மெல்லின வெதுகையும், இடையின வெதுகையும் என.

வ-று.

குறள் வெண்பா.

" தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும் "

இது வல்லின வெதுகை.

குறள் வெண்பா.

" அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு "

இது மெல்லின வெதுகை.

---

$$ இச்செய்யுளை 38-வது பக்கத்திற் காண்க.

†† இச்செய்யுளை 78-வது பக்கத்திற் காண்க.

குறள் வெண்பா.

" எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு "

இஃது இடையின வெதுகை.

வருக்கமோனை முதலாகிய மூன்றும் வருமாறு.

நேரிசை யாசிரியப்பா.

" பகலேபல் பூங்கானற் கிள்ளை யோப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதாளம் விரைஇப்
பின்னுப் பிணியவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீர்க்கப் பெய்து தேம்படத் திருகிப்
புனையீ ரோதி செய்குறி நசைஇப்
பூந்தார் மார்ப புனத்துட் டோன்றிப்
பெருவரை யடுக்கத் தொருவே லேந்திப்
பேயு மறியா மாவழங்கு பெருங்காட்டுப்
பைங்க ணுழுவைப் படுபகை வெரீஇப்
பொங்குசினந் தணியாப் பூநுத லொருத்தல்
போகாது வழங்கு மாரிரு ணடுநாள்
பௌவத் தன்ன பாயிரு ணீந்தி
இப்பொழுது வருதுவை யாயின்
நற்றோர் மார்ப தீண்ட லெங்க துப்பே "

இது பகரமெய் வருக்க மோனை.

* " ஆர்கலி யுலகத்து—ஒழுக்கமுடைமை "

இது முதலெழுத் தொன்றாதாயினும் முதலெழுத்தின் மேலேறிய நெடில் ஒப்புமை நோக்கி நெடின்மோனை என்று வழங்கப்படும்.

இனி இனமோனை மூன்று வகைப்படும்; வல்லின மோனையும், மெல்லினமோனையும், இடையினமோனையும் என.

நேரிசை யாசிரியப்பா.

" கயலே ருண்கண் கலுழ நாளுஞ்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத்

* இச்செய்யுளை 75-வது பக்கத்திற்காண்க.

திருந்திழை யமைத்தோ ளரும்பட ருழப்பப்
போகல் வாழி யைய பூத்த
கொழுங்கொடி யணிமலர் தயங்கப்
பெருந்தண் வாடை வரூஉம் பொழுதே"

இஃது எல்லாவடியும் முதற்கண்ணே வல்லெழுத்து வந்தமையான் வல்லினமோனை. மெல்லினமோனையும், இடையினமோனையும் வந்த வழிக்கண்டு கொள்க.

என்னை:—

"வருக்க நெடிலினம் வரையா ரண்டே
நெடிய பிறவு மினத்தினு மாகும்"

என்றார் பிறருமெனக்கொள்க.

"ஒருக்கப்பெயரான்" என்று சிறப்பித்தவதனால் ஒருசார் ஆசிரியர் தலையாகு எதுகை, இடையாகு எதுகை, கடையாகு எதுகை என்றும்,

தலையாகுமோனை, இடையாகுமோனை, கடையாகுமோனை என்றும் வேண்டுவர் எனக்கொள்க.

என்னை:—

† "சீர்முழு தொன்றிற் றலையா கெதுகை
யோரெழுத் தொன்றி னிடைகடை பிறவே"

என்றாராகலின்.

---

† அடிதோறுஞ் சீர் முழுதும் எதுகை ஒன்றி வருவது தலையாகெதுகை எனவும், அடிதோறும் இரண்டாமெழுத் தொன்றே யொன்றி வருவது இடையாகெதுகை எனவும், வருக்க வெதுகை முதலாகப் பிறவழியால் வருவன கடையாகு எதுகை எனவும், அவ்வாறே, அடிதோறுஞ்சீர்முழுது மோனை யொன்றிவருவது தலையாகுமோனை எனவும், அடிதோறு முதலெழுத் தொன்றுமே மோனை யொன்றிவருவது இடையாகுமோனை எனவும், வருக்கமோனை முதலாகப் பிறவழியால் வருவன கடையாகுமோனை எனவும் வழங்கப்படும் எனக்கொள்க.

இச்சூத்திரத்தான் மோனைக்கும் இவ்வாறே விரித்துரைத்துக் கொள்க.

வ-று.

நேரிசை வெண்பா.

$$ " சிலைவிலங்கு—போழ்து "

என்பது தலையாகெதுகை.

குறள்வெண்பா.

†† அகர முதல—யுலகு "

என்பது இடையாகெதுகை.

குறள் வெண்பா.

* " தக்கார்—காணப்படும் "

என்பது கடையாகெதுகை.

குறள் வெண்பா.

" பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு "

என்பது தலையாகுமோனை.

††† " மாவும் புள்ளும் "

என்பது இடையாகுமோனை.

நேரிசையாசிரியப்பா.

$ " பகலே பல் பூங்கானல் "

என்பது கடையாகுமோனை.

" உயிராசிடைப்பிட், டிருக்கு மொருசாரிரண்டடி மூன்றுமெழுத்துமொன்றி, நிரக்கு மெதுகையென்றாலுஞ் சிறப்பில" எ-து:—

உயிரெதுகை, ஆசெதுகை, இடைப்பிட் டெதுகை, இரண்டடியெதுகை, மூன்றுமெழுத் தொன்றெதுகை என்று

---

$$ இச்செய்யுளை 30 வது பக்கத்திற்காண்க.
†† இச்செய்யுளை 72 வது பக்கத்திற்காண்க.
* இச்செய்யுளை 149 வது பக்கத்திற்காண்க.
††† இச்செய்யுளை 44 வது பக்கத்திற்காண்க.
$ இச்செய்யுளை 150வது பக்கத்திற்காண்க.

ஒருசார் எதுகையு முளவாயினும் பெரியதோர் சிறப்பில எனக்கொள்க.

"நேரிழையே" ஏ-து- மகடூஉ முன்னிலை.

வ-று.

**நேரிசை யாசிரியப்பா.**

"துளியொடு மயங்கிய தூங்கிரு ணடுநாள்
அணிகிளர் தாரோ யருஞ்சுர நீந்தி
வடியமை யெஃகம் வலன்வயி னேந்தித்
தனியே வருதி நீயெனின்
மையிருங் கூந்தலுய்தலோ வரிதே."

இஃது * இரண்டாமெழுத் தொன்றாதாயினும், இரண்டாமெழுத்தின்மேலேறிய உயிரொன்றி வந்தமையால் உயிரெதுகை.

இனி ஆசெதுகை 'ய, ர, ல, ழ,' என்னும் ஒற்றுநான்கும் ஆசாய் வரும் எனக்கொள்க.

என்னை:—

"யரலழ வென்னு மீரிரண்டொற்றும்
வரன்முறை பிறழாது வந்திடை யுயிர்ப்பினஃ
தாசிடை யெதுகையென் றறைதல் வேண்டும்."

என்றாராகலின்.

வ-று.

**கலித்துறை.**

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே."

இது யகர ஒற்றிடைவந்த ஆசெதுகை.

---

* ஈண்டு "இரண்டாமெழுத்து" என்றது மெய்யெழுத்தை என்றுணர்க.

### கலிவிருத்தம்.

" மாக்கொடி யானையு மௌவற் பந்தருங்
கார்க்கொடி முல்லையுங் கலந்து மல்லிகைப்
பூக்கொடிப் பொதும்பருங் கான ஞாழலுந்
தூக்கடி கமழ்ந்துதான் றுறக்க மொத்ததே "

இது ரகர ஒற்றிடை வந்த ஆசெதுகை.

### நேரிசை வெண்பா.

" ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம்—பால்போல்
ஒருதன்மைத் தாகு மறநெறி யாபோல்
உருவு பலகொள வீங்கு "

இது லகர ஒற்றிடை வந்த ஆசெதுகை.

### நேரிசைவெண்பா.

" அந்தரத் துள்ளே யகங்கை புறங்கையா
மந்தரமே போலு மனைவாழ்க்கை—யந்தரத்து
வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாழ்நாளும்
போகின்ற பூளையே போன்று"

இது ழகர ஒற்றிடைவந்த ஆசெதுகை.

### குறள்வெண்செந்துறை.

$ " ஆர்கலியுலகத்து"

இஃது ஆசிடையிட்டுவந்த வல்லினவெதுகை. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

இடையிட்டெதுகை வருமாறு:—

### நேரிசையாசிரியப்பா.

" தோடா ரெல்வளை நெகிழ நாளு
நெய்த லுண்கண் பைத லுழல்க
வாடா வவ்வரி புதைஇப் பசலையும்
வைக றோறும் பைபயப் பெருகி
நீடா ரிவரென நீண்மனங் கொண்டார்
கேளார் கொல்லோ காதலர் தோழி

$ இச்செய்யுளை 75 வது பக்கத்திற் காண்க.

வாடாப் பௌவ வறன்முகந் தெழிலி
பருவம் பொய்யாது வலனேர்பு வளைஇ
ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே"

இஃது அடிதோறும் இடையிட்டு வந்தமையால் இடையிட்டெதுகை. இது தொல்காப்பியனார் காட்டியபாட்டு.

என்னை:—

"தாஅ வண்ண
மிடையிட்டு வந்த வெதுகைத் தாகும்"

என்றாகலின்.

இரண்டடி எதுகைவருமாறு:—

"துவைக்குந் துளிமுந்நீர்க் கொற்கை மகளிர்
அவைப்பதம் பல்லிற் கழகொவ்வா முத்தம்
மணங்கமழ் தாரச்சுதன் மண்காக்கும் வேலின்
அணங்கு மமுதமு மந்நலார் பாடல்"

இது முன் இரண்டடியுமோரெதுகையாய்ப் பின் இரண்டடியு மற்றோரெதுகையாய் வந்தமையால் இரண்டடி எதுகை.

என்னை:—

"இரண்டடி யெதுகை திரண்டொருங் கியன்றபின்
மூரண்ட வெதுகை யிரண்டில வரையார்"

என்றாகலின்

மோனைக்கும் அவ்வாறே யொட்டிக்கொள்க.

வ—று.

**கலிவிருத்தம்.**

"ஆகங் கண்டக ராலற்ற வாடவர்
ஆகங் கண்டகத் தாலற்ற வன்பினர்
பாகங் கொண்டு பயோதரஞ் சேர்த்தினர்
பாகங் கொண்டு பயோதர நண்ணினர்"

இது முன் இரண்டடியும் ஒருமோனையாய்ப் பின் இரண்டடியு மற்றொரு மோனையாய் வந்தமையால் இரண்டடி மோனை.

### குறள்வெண்பா.

$$ " பவழமும் பொன்னுங் குவைஇய முத்தின்
திகழரும் பீன்றனபுன் னை"

### குறள்வெண்பா.

" பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

இவை மூன்றாமெழுத் தொன்றெதுகை.

"நிரக்குமெதுகை" என்று சிறப்பித்தவதனால், விட்டிசை வல்லொற்றெதுகை என்றும், விட்டிசை மோனை என்றும் வேண்டுவாரும் உளர் எனக்கொள்க.

வ-று.

### குறள் வெண்பா.

" பற்றிப் பலகாலும் பான்மறி யுண்ணமை
நொஅலைய னின்னாட்டை நீ "

இது வல்லொற்றடுத் தாற்போல, விட்டிசைத்துக் குற்றெழுத்திேனாடு புணர்ந்தமையான் விட்டிசை வல்லொற்றெதுகை.

### குறள் வெண்பா.

" அ அவனும் இ இவனும் உ உவனுங் கூடியக்கால்
எ எவனை வெல்லா ரிகல் "

இது முதலெழுத்து இரண்டடிக்கண்ணும் விட்டிசைத்து வந்தமையால் விட்டிசைமோனை. இவையெல்லாஞ் சிறப்பில வெனக்கொள்க.

இன்னும் "ஒருக்கப்பெயரானுரைக்கப்படும்" என்று சிறப்பித்தவதனாற் பாவினங்கள் எல்லாத் தொடையானும் வரும் என்றாராயினும் பெரும்பான்மையுந் தலையாகுமோனை

---

$$ இஃதோர் நேரிசை வெண்பாவின் முதற்பாதியா யிருக்குமெனத் தோன்றுகின்றது; ஆயினும் இதிலுள்ளபடியே அலகிட்டுப் பெயர் கொடுக்கப் பெற்றது.

யிற்றிரிந்தும், தலையாகு எதுகையிற்றிரிந்தும் வாராவெனவும், செந்தொடை யொழித்தெல்லாத் தொடைக்கும் இனவெழுத்து வரத்தொடுப்பதூஉம், வழியெதுகை வரத் தொடுப்பதூஉம், வழிமுரண்வரத் தொடுப்பதூஉஞ் சிறப்புடைத்தெனவுங்கொள்க.

இனவெழுத்துப் பெற்று, மோனை முதலாகிய தொடையும், தொடை விகற்பமும் போலாமை வேறுபடத்தொடுப்பது "மருட்செந்தொடை" எனக்கொள்க. இனவெழுத்தாமாறு தானமொத்தகுறிலும், நெடிலுந் தம்முள் இனமாம்.

அவை:—

அகர ஆகார ஐகார ஔகாரங்கள் தம்முள் இனமாம்.
இகர ஈகார எகர ஏகாரங்கள் தம்முள் இனமாம்.
உகர ஊகார ஒகர ஓகாரங்கள் தம்முள் இனமாம்.

இவை ஏறிய உயிர்மெய்க்கும் இவ்வாறே கொள்க.

ஒற்றினுள்:—

சகர தகரங்கள் தம்முள் இனமாம்.
ஞகர நகரங்கள் தம்முள் இனமாம்.
மகர வகரங்கள் தம்முள் இனமாம்.

இவற்றை "அனு" என்று வழங்கு வாருமுளர்.

என்னை:—

### நேரிசை வெண்பா.

" அகரமோ டாகார மைகார மௌவாம்
இகரமோ டீகாரம் எஏ—உகரமோ
டூகாரம் ஒஓ ஞநமவ தச்சகரம்
ஆகாத வல்ல வநு "

என்றாகலின்.

அவற்றுட் சில வருமாறு:—

### குறள் வெண்பா.

" ஈத்துவக்கு மின்ப மறியார்கொ லுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் "

**குறள் வெண்பா.**

" அமிழ்தினு மாற்ற வினிதே தம்மக்கள்
சிறுகை யளாவிய கூழ் "

இவை இனவெழுத்துப் பெற்று மோனை முதலாகிய தொடையும், தொடை விகற்பமும் போலாமை வேறுபடத் தொடுத்தமையான் மருட்செந்தொடை. பிறவுமன்ன.

இனி வழியெதுகை வருமாறு:—

**கட்டளைக் கலித்துறை.**

" மண்டலம் பண்டுண்ட திண்டோர் வரகுணன் ருெண்டியின்வாய்க்
கண்டலந் தண்டுறைக் கண்டதொன் றுண்டு கனமகர [ர்திங்கள்
குண்டலங் கெண்டை யிரண்டொடு தொண்டையுங் கொண்டோ
மண்டலம் வண்டலம் பக்கொண்ட ருழ வருகின்றதே "

† "கொங்குதங்கு" முதலாயினவுங்கொள்க. "அநுப்பிராசம்" என்னும் வடமொழியை "வழியெதுகை" என்பது தமிழ் வழக்கு.

இனவழி முரண் வருமாறு:—

**அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.**

" செய்யவாய்ப் பசும்பொ னேலைச் சீறடிப் பரவை யல்குல்
ஐயநுண் மருங்கு னேவ வடிக்கொண்ட குவவுக் கொங்கை
வெய்யவாய்த் தண்ணெ னீலம் விரிந்தென விலங்கி நீண்ட
மையவா மழைக்கட் கூந்தன் மகளிரை வருக வென்றான் "

**கட்டளைக் கலித்துறை.**

" ஒருமால் வரைநின் றிருசுட ரோட்டமுந் நீர்க்கிடந்த
பெருமா னிலனுஞ் சிறுவிலைத் தாவுண்டு பேதையர்கண்
பொருமா தவித்தொங்க லெங்கோன் புரவலன் பூம்பொதியிற்
கருமா விழிவெண்பற் செவ்வாய்ப் பசும்பொற் கனங்குழைக்கே "

மோனை எதுகையிற் றிரிந்து, பாவும் இனமும் வாராமை மேற்காட்டிய வற்றுள்ளும், பிறவற்றுள்ளுங் கண்டுகொள்க.

---

† இச்செய்யுளை 35 வது பக்கத்திற் காண்க.

7. சுருங்கிற்று மூன்றடி யேனைத் தரவிரு மூன்றடியே
தரங்கக்கும் வண்ணகக் குந்தர வாவது தாழிசைப்பா
சுருங்கிற் றிரண்டடி யோக்க மிரட்டி சுரும்பிமிருந்
தரங்கக் குழலாய் சுருங்குந் தரவினிற் றாழிசையே.

இ-கை. தரவு தாழிசைகட்கு அடிவரையறை யாமாறு ணர்த்து-ற்று.

"சுருங்கிற்று மூன்றடி யேனைத்தரவு" எ-து:—

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவும், வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவும் ஒழித்தல்லாத கலிப்பாவிற்குத் தரவு மூன்றடியே சிறுமை பெருமைபாடுவோனது பொருண்முடிவு குறிப்பே; வரையறையில்லை எ-று.

"இருமூன்றடியே தரங்கக்கும் வண்ணகக்குந் தரவாவது" எ-து:—

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும், வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும் பெருக்கஞ் சுருக்கமில்லை; ஆறடியே தரவாவது எ-று.

"சுருங்கிற்று மூன்றடியேனைத் தரவு" என்றாராயினும், "வெள்ளைக்கிரண்டடி" என்னுங்காரிகையுள், கலிப்பாவிற்கு நான்கடி சிறுமை சொன்னமையால், தரவுகொச்சகக் கலிப்பாவிற்கு நான்கடியே சிறுமை வருவதெனக்கொள்க.

"தாழிசைப்பா சுருங்கிற் றிரண்டடி யோக்கமிரட்டி" எ-து:—

பொதுவகையாற் றாழிசை சொல்லிப் போந்தாராயினும், தாழிசைகட்கு இரண்டடி சிறுமை; நான்கடி பெருமை; இடை மூன்றடியானும் வருவது எ-று.

"சுரும்பிமிருந் தரங்கக் குழலாய்" என்பது மகடூஉ முன்னிலை.

"சுருங்குந் தரவினிற் றாழிசையே" எ-து:—

தரவடியிற் குறழிசையடி சுருங்கி வருவது எ-று.

இவற்றிற் கிலக்கியம் மேற்காட்டிய வற்றுள்ளும், பிற வற்றுள்ளுங் கண்டுகொள்க.

8. பொருளோ டடிமுத னிற்பது கூனது வேபொருந்தி
இருள்சேர் விலாவஞ்சி யீற்றினு நிற்கு மினி யொழிந்த
மருடீர் விகாரம் வகையுளி வாழ்த்து வசை வனப்புப் [டியே.
பொருள்கோள் குறிப்பிசை யொப்புங் குறிக்கொள் பொலங்கொ

இ-கை. மேற்சொல்லப்பட்ட பாக்கட்கெல்லா மெய்திய தோர் இலக்கண முணர்த்து-ற்று.

"பொருளோடடிமுத னிற்பது கூன்" எ-து:—

அடிமுதற்கட்பாவினது பொருளைத் தழுவித் தனியே நிற்பது "கூன்" எனப்படும்.

"அதுவே பொருந்தி யிருள்சேர் விலாவஞ்சி யீற்றினு நிற்கும்" என்பது:—

அக்கூன் வஞ்சிப்பாவினது அடியின் இறுதிக்கண்ணும் நிற்கப்பெறும் எ-று.

"ஈற்றினும்" என்ற உம்மையால், வஞ்சிப்பாவினடி நடுவினுங்கூன் வரப்பெறும் எனக்கொள்க.

"இருள்சேர் விலாவஞ்சி" என்று சிறப்பித்தவனுல் வஞ்சியடியின் நடுவும், இறுதியும் அசை கூனுய் வருவது சிறப்புடைத்து; சீர் கூனுய் வரினும் உகர இறுதியாகிய நேரீற்று இயற்சீராயல்லது வாரா எனக்கொள்க. அசைச்சீர் எல்லாப் பாவினுள்ளும் அருகியல்லது கூனுய் வாராது எனக்கொள்க. எனவே வெண்பா, ஆசிரியம், கலி என்னும் இவற்றின் இடையும், இறுதியுங் கூன்வரப்பெறுது எனக் கொள்க.

என்னை:—

" அடிமுதற் பொருளைத் தானினிது கொண்டு
முடிய நிற்பது கூனென மொழிப "

" வஞ்சியி னிறுதியு மாகு மதுவே "
" அசைகூ னாகு மென்மனார் புலவர் "

என்றார் பல்காயனார்.

கூனைத்தனிச்சொல் என்று வழங்கு வாருமுளர்.

என்னை:—

" அடிமுதற் பொருள்பெற வருவது தனிச்சொலஃ
திறுதியும் வஞ்சியு ளியலு மென்ப "

என்றாராகலின்.

கொச்சகக் கலியுள் ஓரடிமுழுதுங் கூனாய் வரப்பெறும்; அவைசிறப்பில எனக்கொள்க.

வ—று.

**நேரிசை வெண்பா.**

" உதுக்காண், சுரந்தானா வண்கைச் சுவானமாப் பூதன்
பரந்தானாப் பல்புகழைப் பாடி—யிரந்தார்மாட்
டின்மை யகல்வது போல விருணீங்க
மின்னு மளிதேர் மழை "

இவ்வெண்பாவினுள் அடிமுதற்கண் "உதுக்காண்" எனக் கூன் வந்தவாறு கண்டுகொள்க.

**நேரிசை யாசிரியப்பா.**

" அவரே, கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே
யானே, தோடா ரெல்வளை நெகிழ வேங்கிப்
பாடமை சேக்கையுட் படர்கூர்ந் திசினே
அன்ன ளளிய ளென்னாது மாமழை
இன்னும் பெய்ய முழங்கி
மின்னுந் தோழியென் னின்னுயிர் குறித்தே "

இவ்வாசிரியப்பாவின் அடிமுதற்கண் "அவரே" எனவும், "யானே" எனவுங் கூன் வந்தவாறு கண்டுகொள்க.

### தரவுகொச்சகக் கலிப்பா.

" உலகினுள், பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவேபிறழினும்
இருந்தகைய விறுவரைமே லெரிபோலச் சுடர்விடுமே
சிறுதகையார் சிறுதகைமை சிறப்பெனினும் பிறழ்வி
[ன்றி
உறுதகைமை யுலகினுக்கோ ரொப்பாகித் தோன்று
[வே.

இக்கலிப்பாவினுள் அடிமுதற்கண் "உலகினுள்" எனக் கூன் வந்தவாறு கண்டுகொள்க.

### வஞ்சிப்பா.

" உலகே, முற்கொடுத்தார் பிற்கொளவும்
பிற்கொடுத்தார் முற்கொளவும்
உறுதிவழி யொழுகுமென்ப
அதனால்,
நற்றிற நாடு தன்மை
பற்றற யாவையும் பரிவறத் துறந்தே "

இவ்வஞ்சிப்பாவினுள் அடிமுதற்கண் "உலகே" எனச் சீர் கூனாய் வந்தவாறும்,

" மாவழங்கலின் மயக்குற்றன—வழி "

இவ்வஞ்சியடியின் இறுதிக்கண் "வழி" என அசைகூனாய் வந்தவாறும்,

" கலங்கழாலித்-துறைக்-கலக்குற்றன "

இவ்வஞ்சியடியின் நடுவில் "துறை" என அசைகூனாய் வந்தவாறுங் கண்டு கொள்க.

" தேரோடத் துகள்கெழுமின-தெருவு "

இவ்வஞ்சி யடியினது இறுதிக்கண், "தெருவு" என உகர விறுதியாகிய இயற்சீர் கூனாயின வாறு கண்டுகொள்க.

"காமர் கடும்புனல்" என்னுங் கொச்சகக் கலியுள், "சிறுகுடியீரே சிறுகுடியீரே" என ஓரடியாற் கூன்வந்த வாறு காண்க. பிறவு மன்ன.

இனி ஒழிந்த "மருவூர் விகாரம் வகையுளி வாழ்த்து வசைவனப்புப், பொருள்கோள் குறிப்பிசை யொப்புங் குறிக்கொள்" எ-து:—.

மேல் "எழுத்தசைசீர்பந்த மடிதொடை பாவினங் கூறுவன்" என்று அதிகாரம் பாரித்த காரிகையுள் ஓதப்படாத யாப்புறுப்பாய் மயக்கந்திர வகுக்கப்பட்ட விகாரமும், வகையுளியும், வாழ்த்தும், வசையும், வனப்பும், பொருளும், பொருள்கோளும், குறிப்பிசையும், செய்யுள் ஒப்புமையும், ஆமாறு உபதேச முறைமையான் உணர்க எ-று.

"பொலங்கொடியே" என்பது மகடூஉ முன்னிலை.

அவற்றுள், விகாரம் அறுவகைப்படும் வலித்தலும், மெலித்தலும், விரித்தலும், தொகுத்தலும், நீட்டலும் குறுக்கலும் என.

என்னை:—

" அந்நாற் சொல்லுந் தொடுக்குங் காலை
வலிக்கும்வழி வலித்தலு மெலிக்கும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலுந் தொகுக்கும்வழி தொகுத்தலும்
நீட்டும்வழி நீட்ட லுங் குறுக்கும்வழி குறுக்கலும்
நாட்டல் வலிய வென்மனார் புலவர் "

என்றார் தொல்காப்பியனார்.

வ-று.

" குறுத்தாட் பூதஞ் சுமந்த
அறக்கதி ராழியெம் மண்ணலைத் தொழினே "

இதனுள், "குறுந்தாள்" எனற்பாலதனைக் "குறுத்தாள்" என வலிக்கும்வழி வலித்தவாறும்,

" தண்டை யினக்கிளி கடிவோள்
பண்டைய ளல்லண் மானேக் கினளே "

இதனுள், "தட்டை" எனற்பாலதனைத் "தண்டை என மெலிக்கும்வழி மெலித்தவாறும்,

### இன்னிசை வெண்பா.

" வெண்மண லெக்கர் விரிதிரை தந்தநீர்
கண்ணாடி மண்டிலத் தூதாவி யொத்திழியுந்
தண்ணந் துறைவர் தகவிலரே தற்சேர்ந்தார்
வண்ணங் கடைப்பிடியா தார் "

இதனுள், "தண்டுறைவர்" எனற்பாலதனைத் "தண்ணந்துறைவர்" எனவிரிக்கும் வழி விரித்தவாறும்,

### நேரிசை வெண்பா.

" பூத்தாட் புறவிற் புனமதில் கைவிடார்
காத்தலிற் காவல ரேனையார்—பார்த்துரூர்
வேண்டார் வணக்கி விறன்மதி ரூன்கோடல்
வேண்டுமோம் வேண்டார் மகன் "

இதனுள், "வேண்டாதாரை வணக்கி" எனற்பாலதனை "வேண்டார்வணக்கி" எனத்தொகுக்கும்வழித் தொகுத்தவாறும்,

### நேரிசை வெண்பா.

" பாசிழை யாகம் பசிப்பித்தான் பைந்தொடி
மாசேன னென்று மனங்கொளீஇ—மாசேனன்
சேயிதழ்க் கண்ணி தருதலாற் சேர்த்தியென்
னேய்தீர நெஞ்சின்மேல் வைத்து "

இதனுள், "பச்சிழை" எனற்பாலதனைப் "பாசிழை" என நீட்டும்வழி நீட்டியவாறும்,

† " யானை, யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
திருத்தார்நன் றென்றேன் றியேன் "

இதனுள், 'தீயேன்" எனற்பாலதனைத் "தியேன்" எனக்குறுக்கும்வழி குறுக்கினவாறுங் கண்டுகொள்க. பிறவுமன்ன.

" மரூஉ விகாரம் " என்று சிறப்பித்தவதனால் வரலாற்று முறைமையோடுங் கூடிப்பொருந்தி வாரா நின்றன

---

† இவை 68 வது பக்கத்திலுள்ள "பன்மாடக்கூடன்" என்னும் பஃறொடை வெண்பாவின் கடையடிகள்.

வல்லது "துவைக்குப்பாலில்லை" எனற்பாலதனைத் துவைக் குப் பாலில்லை என்றாற்போலப் புணர்க்கப்படாது என்க.

இன்னும் "மரூஉவ் விகாரம்" என்று சிறப்பித்தவதனால், தலைக்குறையும், இடைக்குறையும், கடைக்குறையும் வருவனவுமுள. அவையும் வரலாற்று முறைமையோடுங்கூடி வழங்கப்படும் எனக்கொள்க.

வ-று.

" மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி "

இதனுள், "தாமரை" எனற்பாலதனை "மரை" எனத் தலைகுறைத்து வழங்கின வாறும்,

" வேதின வெரிநி னோதி முதுபோத்து "

இதனுள், "ஓந்தி" எனற்பாலதனை "ஓதி" என இடை குறைத்து வழங்கினவாறும்,

" அகலிரு விசும்பி னால்போல்
வாலிதின் மலர்ந்தன புன்கொடி முசுண்டை "

இதனுள், "ஆரல்" எனற்பாலதனை "ஆல்" என இடை குறைத்து வழங்கினவாறும்,

" நீலுண் டுகிலிகை கடுப்ப "

இதனுள், "நீலமுண் டுகிலிகை கடுப்ப" எனற்பாலதனை "நீலுண் டுகிலிகை கடுப்ப" எனக்கடை குறைத்து வழங்கினவாறுங் கண்டுகொள்க. பிறவுமன்ன.

"அந்நாற்சொல்லுந் தொடுக்குங்காலை" என்றவழி நான்கு சொல்லாவன இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனவிவை.

என்னை:—

" இயற்சொற் றிரிசொற் றிசைச்சொல் வடசொலென்
றனைத்தே செய்யுளி னீட்டச் சொல்லே "

என்றாராகலின்.

அவற்றுள், இயற்சொல்லாவன-சோறு, கூழ், பால், பாளிதம் என்பன.

என்னை:—

"இயற்சொற் றாமே யியம்புங் காலை
செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்
தம்பொருள் வழாமை யிசைக்குஞ் சொல்லே"

என்றாராகலின்.

அவை நடக்கும் எல்லையாவையோ வெனின் வையையாற்றின் வடக்கும், மருதயாற்றின் றெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாகிய நான்கு எல்லைக்குட்பட்ட சோணாடு என்க.

என்னை:—

"மன்ற வாணன் மலர்திரு வருளாற்
றென்றமிழ் மகிமை சிவணிய செய்த
அடியவர் கூட்டமு மாதிச் சங்கமும்
படியின்மாப் பெருமை பரவுறு சோழனுஞ்
சைவமா தவருந் தழைத்தினி திருக்கு
மையறு சோழ வளநா டென்ப"

என்றாராகலின்.

திரிசொல்லாவன-அடுக்கல், பிறங்கல், ஓங்கல், விலங்கல், விண்டு, குவடு என்பவை மலை என்னும் ஒருபொருள் குறித்த வேறுசொல்.

உந்தி என்பது-ஆற்றிடைக் குறையும், கொப்பூழும், தேருருளும், யாழகத்தோருறுப்பும் என்னும் வேறுபொருள் குறித்த ஒருசொல்.

என்னை:—

"ஒருபொருள் குறித்த வேறுசொல் லாகியும்
வேறுபொருள் குறித்த வொருசொல் லாகியு
மிருபாற் றென்ப திரிசொற் கிளவி"

என்றாராகலின்.

திசைச்சொல்லாவன:— மயிலை 'மஞ்ஞை' என்றும், கிளியைக் 'கிள்ளை' என்றும், தாயைத் 'தள்ளை' என்றும், நாயை 'ஞமலி' என்றும் வழங்குவனவாம்.

என்னை:—

" செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினுந்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி "

என்றாராகலின்.

செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரு கொடுந் தமிழ் நிலமாவன:—

### நேரிசைவெண்பா.

" தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி யருவா வதன்வடக்கு—நன்றாய
சீத மலாடு புனநாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண் "

இதை விரித்துரைத்துக் கொள்க.

வடசொல்லாவன:—குங்குமம், மூலம், சங்கு, சந்தனம் என்பனவாம்.

என்னை:—

" வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே "
" சிதைந்தன வரினு மியைந்தன வரையார் "

என்றார் தொல்காப்பியனார்.

'வகையுளி' என்பது:— முன்னும், பின்னும் அசை முதலாகிய உறுப்புகள் நிற்புழி யறிந்து குற்றப்படாமல் வண்ணம் அறுத்தல் எனக்கொள்க.

என்னை:—

### நேரிசை வெண்பா.

" அருளொக்கு நீரா ரசைசீ ரடிக்கட்
பொருளொக்கா தோசையே நோக்கி—மருணீக்கிக்

கூம்பவுங் கூம்பா தலரவுங் கொண்டியயற்றல்
வாய்ந்த வகையுளியின் மாண்பு."

என்றுராகலின்.

வ-று.

குறள்வெண்பா.

"கடியார்பூங் கோதை கடாயினுன் றிண்டேர்
சிறியார்தஞ் சிற்றில் சிதைத்து"

இதனைக், "கடியார்" எனவும், "பூங்கோதை" என வும் "காடாயினுன்" எனவும் அலகிடின் ஆசிரியத்தளையும், கலித்தளையும் தட்டு வெள்ளைத்தன்மை குன்றுமாதலால் "கடியார்பூ" என்று புளிமாங்காயாகவும், "கோதை" என்று தேமா வாகவும், "கடாயினுன்" என்று கருவிளமாகவும் அலகிட்டுக்கொள்க.

குறள்வெண்பா.

"மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

இதனை "நிலமிசை" எனவும், "நீடு" எனவும், "வாழ் வார்" எனவும் அலகிடின் ஆசிரியத்தளைதட்டு, வெண்பாவின் இறுதிக்கண் அசைச்சீர்ஆகற்பாலது இயற்சீராய், "நிகரில் வெள்ளைக் கோரசைச்சீரு மொளிசேர்பிறப்பு மொண்காசு மிற்ற சீருடைச்சிந்தடியே முடிவாம்" என்னும் இலக்கணத் தோடு மாறுபடுமாதலின் "நிலமிசை" எனக்கருவிளமாகவும், "நீடுவாழ்" எனக்கூவிளமாகவும், "வார்" என நாள் என்னும் நேரசைச்சீராகவும் அலகிட்டுக்கொள்க.

நேரிசைவெண்பா.

"பாடுநர்க்கு மாடுநர்க்கும் பண்டுதாங் கொண்டவர்க்கும்
ஊடுநர்க்குங் கூடுநர்க்கு மொத்தலா—னீடுநீர்
நல்வய லூர நறுஞ்சாந் தணியகலம்
புல்லவி னூட லினிது"

இதனுள், டகர நகரங்கள் பிரிந்திசைத்தனவாயினும் இரண்டினையுங் கூட்டிநிரையசையாக அலகிடச் சீரும், தளையுஞ்சிதையாவாம். அல்லாவிடின் $$ நாலசைச்சீராய் வண்ண மழிந்து ஓசையுண்ணாதுகெடும். பிறவுமன்ன.

"வாழ்த்து" இருவகைப்படும் மெய்வாழ்த்தும், இருபுற வாழ்த்தும் என.

வ-று.

**நேரிசைவெண்பா.**

" கார்நறு நீலங் கடிக்கயத்து வைகலு
நீர்நிலை நின்ற பயன்கொலோ—கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியார்
கொண்டிருக்கப் பெற்ற குணம்"

இதுமெய்வாழ்த்து.

**நேரிசைவெண்பா.**

" பண்டு மொருகாற்றன் பைந்தொடியைக் கோட்பட்டு
வெங்கடம் வில்லேற்றிக் கொண்டுழந்தான்—றென்களந்தைப்
பூமாண் டிருமகளுக் கின்னும் புலம்புமால்
வாமான்றேர் வையையார் கோ"

இஃது இருபுறவாழ்த்து.

"வசை" யும் இருவகைப்படும் மெய்வசையும், இருபுற வசையும் என.

---

$$ மேற்செய்யுளில், "பாடுநர்க்கு" என்னுஞ் சீரிலுள்ள டகர நகரங்களை நேர்நேராக அலகிடின் அச்சீர் நாலசைச் சீராதலைக் கண்டுகொள்க. இங்ஙனமே மற்றைச்சீர்களிலுங் கண்டுகொள்க.

"தண்ணிழறண்பூ" என்னும் உறுப்பியற் காரிகையின் உரையில் "வெண்பாவினுள் நாலசைச்சீர்வாரா" என்றவிதியும் ஈண்டுக் கவனிக்கத்தக்கது.

வ-று.

நேரிசைவெண்பா.

" தந்தை யிலேச்சுமடன் ருய்தொழிலி தான்பார்ப்பான்
எந்தைக் கிதெங்ஙனம் பட்டதுகொன்—முந்தை
அவியுணவி ஞர்தெரியி லுவதாங் கொல்லோ
கவிகண்ண ஞர்தம் பிறப்பு"

இது மெய்வசை.

நேரிசைவெண்பா.

" படையொடு போகாது நின்றெறிந்தா னென்றுங்
கொடையொடு நல்லார்கட் டாழ்ந்தான்—படையொடு
பாடி வழங்குந் தெருவெல்லாந் தான்சென்று
கோடி வழங்கு மகன்"

இஃது இருபுறவசை.

இனி "வனப்பு" எட்டுவகைப்படும் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபுஎன.

என்னை:—

" அம்மை யழகு தொன்மை தோல்விருந்
தியைபு புலனிழை பெனவனப் பெட்டே"

என்ருராகலின்.

அவற்றுள், "அம்மை" யாவது சிலவாய், மெல்லியவாய சொற்களால், ஒள்ளியவாய பொருண்மேற் சிலவடியாற் சொல்லியது.

என்னை:—

" சின்மென் மொழியாற் சீர்புனைந் தியாப்பி
னம்மை தானே யடிநிமிர் வின்றே"

என்ருராகலின்.

வ-று.

குறள் வெண்பா

" அறிவினு ளுகுவ துண்டோ பிறிதினோய்
தன்னேய்போற் போற்ருக் கடை"

"அழகு" என்பது செய்யுட்சொல்லாகிய திரிசொற்களான் ஓசை இனியவாகப் புணர்க்கப்பட்டது.

என்னை:—

" செய்யுண் மொழியாற் சீர்புனைந் தியாப்பி
னவ்வகை தானே யழகெனப் படுமே"

என்றாகலின்.

வ-று.

நேரிசையாசிரியப்பா.

" துணியிரும் பௌவங் குறைய வாங்கி
அணிகிள ரடுக்கன் முற்றிய வெழிலி
காலொடு மயங்கிய கனையிரு ணடுநாள்
யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
நெடுவரை மருங்கிற் பாம்பென விழிதருங்
கடுவரற் கலுழி நீந்தி
வல்லியம் வழங்குங் கல்லதர் நெறியே"

"தொன்மை" என்பது பழையதாகி நிகழ்ந்த பெற்றியுரைக்கப்படுவது.

என்னை:—

" தொன்மை தானே
யுரையொடு புணர்ந்த பழமை மேற்றே"

என்றாகலின்.

வ-று.

"செறிதொடி யுவகைகேளாய் செஞ்சுடர்த் தெறுகதிர்ச் செல்வன்" என்பதூஉம், மாபாரதம், காந்தம் போல்வனவுங் கொள்க.

"தோல்" என்பது - இழும் என்னும் மெல்லியவாகிய சொற்களால் விழுமியவாய்க்கிடப்பனவும், எல்லாச்சொற்களானும் பலவடியாய்க் கிடப்பனவும் என இருதிறத்தனவாம்.

என்னை:—

“ இழுமெனு மொழியால் விழுமியது நுவலினும்
பரந்த மொழியா லடிநிமிர்ந் தொழுகினுந்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர்”

என்றாராகலின்.

வ—று.

நிலைமண்டில ஆசிரியப்பா.

“ பாயிருள் பரப்பகங் குறையப் பாம்பின்
ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கைத்
துணிதரு வெள்ளந் துயில்புடை பெயர்க்கும்
ஒளியோன் காஞ்சி யெளிதெனக் கூறின்
இம்மை யில்லை மறுமை யில்லை
நன்மை யில்லை தீமை யில்லை
செய்வோ ரில்லை செய்பொரு ளில்லை
அறிவோ ரியார்ஃ திறுவுழி யிறுகென”

இது மார்க்கண்டேயனார் காஞ்சி. இஃது இழுமெனு மொழியால் விழுமியது நுவன்றது.

† “திருமழை தலைஇய—சென்றவாறே”

இது பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகியது.”

“விருந்து” என்பது-புதியவற்றின் மேற்று. அஃது இப்பொழுதுள்ளாரைப்பாடுவது.

என்னை:—

“ விருந்து தானே,
புதியது புனைந்த யாப்பின் மேற்றே”

என்றாராகலின்.

அது வந்தவழிக் கண்டுகொள்க.

“இயைபு” என்பது “ஞ, ண, ந,ம,ன, ய,ர,ல,வ,ழ,ள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வந்தபாட்டு.

---

† இச்செய்யுளை 30 வது பக்கத்திற்காண்க.

என்னை:—

" ஞகர முதலா ளகர வீற்றுப்
புள்ளி யிறுதி யியைபென மொழிப "

என்றாராகலின்.

அவையும் வந்தவழிக் கண்டுகொள்க

"புலன்" என்பது இயற்சொல்லாற் பொருடோன்றச் சொல்லப்படுவது.

என்னை:—

" தெரிந்த மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே"

என்றாராகலின்.

வ-று.

நேரிசை யாசிரியப்பா.

" பார்க்கடன் முகந்த பருவக் கொண்மூ
வார்ச்செறி முரசின் முழங்கி யொன்னார்
மலைமுற் றின்றே வயங்குதுளி சிதறிச்
சென்றவ டிருமுகங் காணக் கடுந்தேர்
இன்று செலக்கடவு மதிபாக வதுக்காண்
மாவொடு புணர்ந்த மாஅல் போல
இரும்பிடி யுழைய தாகப்
பெருங்காடு மடுத்த காமர் களிறே "

"இழைபு" என்பது வல்லொற்றியாதுந் தீண்டாது செய்யுளியலுடையாரால் எழுத்தெண்ணி அடிவகுக்கப்பட்ட குறளடி முதலாகப் பதினேழ் நிலத்து ஐந்தடியு முறையானே யுடைத்தாய் ஓங்கிய சொற்களால் வருவது.

என்னை:—

" ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
குறளடி முதலா வைந்தடி காறு

மோங்கிய மொழியா ஞங்ஙன மொழியி
னிழைபி னிலக்கண மியைந்த தாகும் ”

என்முராகலின்.

செய்யுளிய லுடையார் நாற்சீரடி தன்னையே நான்கெழுத்து முதலா ஆறெழுத்தின்காறும் உயர்ந்த †† மூன்றடியுங் குறளடி என்றும்,

ஏழெழுத்து முதலா ஒன்பதெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியுஞ் சிந்தடி என்றும்,

பத்தெழுத்து முதலாப் பதினுன்கெழுத்தின் காறும் உயர்ந்த ஐந்தடியும் அளவடி என்றும்,

பதினைந்தெழுத்து முதலாப் பதினே ழெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் நெடிலடி என்றும்,

பதினெட்டெழுத்து முதலா இருபதெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியுங்கழிநெடிலடி என்றும்,

இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடிப்பா இல்லை என்றும் வேண்டுவர்.

அவ்வெழுத்தெண்ணு கின்றுழிக் குற்றிய லிகரமும், குற்றிய லுகரமும், ஆய்தமும், ஒற்றும் ஒழித்து நின்ற உயிரும், உயிர் மெய்யுங்கூட்டி எண்ணப்படும்.

என்னை:—

## நேரிசை வெண்பா.

“ குற்றிகரங் குற்றுகர மென்றிரண்டு மாய்தமும்
ஒற்று மெனவொரு நான்கொழித்துக்—கற்ருேர்
உயிரு முயிர்மெய்யு மோதினர் கொள்ளச்
செயிர்தீர்ந்த செய்யு ளடிக்கு. ”

---

†† ஈண்டு ‘மூன்றடி’ என்றது—நான்கெழுத்தடியையும், ஐந்தெழுத்தடியையும், ஆறெழுத்தடியையும் எனக் கொள்க. இவ்வாறே மற்றவைகளையுங்கொண்டு பதினேழ் நிலமாமா றுணர்க.

" நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே"

" நாலெழுத் துமுதலா வாறெழுத் தெல்லை
யேறிய நிலத்த குறளடி யென்ப"

" ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
யீரெழுத் தேற்ற மவ்வழி யான"

" பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
யுற்ற நாலெழுத் தேற்றலங் கடையே"

" மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
யீரெழுத்து மிகுதலு மியல்பென மொழிப"

" மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
யீரெழுத் தேற்ற மவ்வழி யான"

### நேரிசைவெண்பா.

" ஈரிரண்டு மோரேழு மீரைந்து மூவைந்தும்
பாரியன்ற நாற்சீர் பதினெட்டு—மோரா
விளையும் பதினேழ் நிலத்துக் குறள்சிந்
தளவு கழிநெடிலோ டைந்து."

என்றாராகலின்.

வ-று.

### நேரிசையாசிரியப்பா.

" போந்து போந்து சார்ந்து சார்ந்து
தேர்ந்து தேர்ந்து மூசி நொந்து
வண்டு சூழ விண்டு வீங்கி
நீர்வாய் கொண்டு நீண்ட நீலம்
ஊர்வா யூதை வீச வூர்வாய்
மதியோர் வண்டோ டொல்கி மாலை
நன்மணங் கமழும் பன்னெல் லூர
அமையோர் மென்றோ ளாயரி நெடுங்கண்
இணையீ ரோதி யேந்திள வனமுலை
இரும்ப மாமல ரிடையெழுந்த மாவின்
நறுந்தழை துயல்வரூஉஞ் செறிந்தேந் தல்குல்
அணிநடை யசைஇய வரியமை சிலம்பின்
மணிமருள் வளர்குழல் வளரிளம் பிறைநுதல்
ஒளிநில வயங்கிழை யுருவுடை மகளொடு
நளிர்முழவு முழங்கிய வணிநிலவு மணிநகர்

இருந்தளவு மலரளவு சுரும்புலவு நறுந்தொடை
கலனளவு கலனளவு கலனளவு கலனளவு
பெருமணம் புணர்ந்தனை யென்ப
அஃதொருநீ மறைப்பி னொழிகுவ தன்றே"

இனிப் "பொருள்கோள்" என்பது உம்மைத் தொகை: பொருளும், பொருள் கோளும் என.

குறள் வெண்பா.

" அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்"

இதனுள் அருளும், அருளல்லதும் என உம்மைதொகக் காற் போலக்கொள்க.

அவற்றுள், பொருளாவன † குறிஞ்சி, கைக்கிளை முதலிய அகமும், அகப்புறமும், வெட்சி பாடாண்பாட்டு முதலிய புறமும் புறப்புறமுமாம். அவற்றை அவ்விலக்கணங் கூறிய நூல்களிற் கண்டுகொள்க.

இனிப்பொருள்கோள் ஒன்பது வகைப்படும்:—

நிரனிறை மொழிமாற்றும், சுண்ணமொழிமாற்றும், அடிமறிமொழிமாற்றும், அடிமொழிமாற்றும், பூட்டுவிற் பொருள்கோளும், புனல்யாற்றுப் பொருள்கோளும், அளைமறிபாப்புப்பொருள்கோளும், தாப்பிசைப்பொருள்கோளும், கொண்டு கூட்டுப் பொருள்கோளும் என.

இவற்றுள், நிரனிறை இரண்டு வகைப்படும்; பெயர் நிரனிறையும் வினை நிரனிறையும் என. அவற்றுள், பெயர் நிரனிறை வருமாறு:—

---

† குறிஞ்சி, பாலை முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்தும் அகம் எனவும்,

கைக்கிளை, பெருந்திணை என்னும் இரண்டும் அகப்புறம் எனவும்,

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை என்னும் ஏழும்புறம் எனவும்,

வாகை, பாடாண், பொதுவியல் என்னும் மூன்றும் புறப்புறம் எனவும் அறிக.

### இன்னிசை வெண்பா.

"கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்த முகம்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்"

இனி "வினை நிரனிறை" வருமாறு:—

### நேரிசை வெண்பா.

"காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய—நீதியான்
மண்ணமிர்த மங்கையர்தோண் மாற்றாரை யேற்றார்க்கு
நுண்ணிய வாய பொருள்" எனவும்,

### இன்னிசை வெண்பா.

"அடல்வேன் * மாநோக்கி நின்முகங் கண்டே
உடலு முடைந்தோடு மூழ்மலரும் பார்க்குங்
கடலுங் கனையிருளு மாம்பலும் பாம்புந்
தடமதிய மாமென்று தாம்" எனவும்,

கொண்டு கண்டு கொள்க.

இனி, "முறை நிரனிறை, எதிர்நிரனிறை, மயக்க நிரனிறை, மிகையெண்ணிரனிறை, குறையெண் ணிரனிறை" என்று வேண்டுவாருமுளர்.

---

* ஈண்டு வெண்டளை பொருந்தாமையின் இதனை 'வெண்டுறை' எனக் கோடலே தகுதியாம். என்னை, "நேரிசை, இன்னிசை வெண்பாக்களை யொப்ப நின்று செப்பலோசையிற் பிழைத்து வருவனவற்றையும் வெண்டுறையின் பாற்படுத்துக்கொள்க" என்றாராகலின்.

அன்றியும் தொல்காப்பியத்துட் சொல்லதிகாரத்தில் எச்சவியலிற் சேனாவரையர் உரையினும், இலக்கண விளக்கத்துட்சொல்லதிகாரத்திற் பொதுவியலின் உரையினும் இச்செய்யுளின் பாடமும், உருவமும் வேறுபட்டிருக்கின்றன.

அவற்றுட் † "சில்வருமாறு" :—

### எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

" கூற்றுவனை வின்மதனை யரக்கர் கோவைக்
கூனிலவைக் குஞ்சரத்தை யிஞ்சி மூன்றை
ஏற்றுலகின் புறவுருவ மாளத் தோள்க
ளிறவெறிப்ப விமையப்பெண் வெருவ வேவக்
காற்செழிலா னயனத்தால் விரலாற் கற்றைக்
கதிர்முடியாற் கரதலத்தாற் கணையாற் பின்னும்
ஊற்றழிய வுதைத்துரித்து நெரித்துச் சூடி
யுரித்தெரித்தா னவனெம்மை யுடைய கோவே" எனவும்,

### நேரிசை வெண்பா.

†† [ காதமருசுவிநுதி துனிகண் புருவஞ்
கு சீதமுங் கொங்கை திரண்டவா—யோதக்
கரும்பார் மழபாடிக் காங்கேயன் பட்டத்
தரும்பார் குழலளகத் தார்க்கு] எனவும்,

$ கொண்டு கண்டு கொள்க.

---

வ-று. " உடலு முடைந்தோடு மூழ்மலரும் பார்க்குங்
கடலிரு ளாம்பல்பாம் பென்ற—கெடலருஞ்சீர்த்
திங்க டிருமுகமாச் செத்து "

இதனுட் பாடபேத முண்மையும், இது முன்காட்டிய வாறு நான்கடியாயிராமல், மூன்றடியாய் நேரிசைச் சிந்தியல் வெண்பாவா யிருத்தலையுங் கண்டுகொள்க. இது தொல்காப் பியத்திற் கண்டபாடம். இலக்கண விளக்கத்துள், ஈற்றுச் சொல்லாகிய "செத்து" என்பதொன்றுமே "சேத்து" என வேறுபட்டிருக்கின்றது. மற்றைய வெல்லாம் ஈண்டுக்காட் டியவண்ணம் பாட மொத்திருக்கின்றன. இப்பாடத்தோடு நச்சினார்க்கினியார் காட்டிய பாடமும் ஒத்திருக்கின்றது.

†, ††, $, இம்மூன்றும் ஏட்டுப் பிரதியிலுள்ளபாடம். இவற்றுள், முதலதுமாத்திரம் முன்வந்துள்ள அச்சுப்பிரதி யிற் பாடபேதமுற் றிருக்கின்றது. மற்றவை காணப்பட்டில. †† இக்குறியிலுள்ள வெண்பாவின் சரியான பாடம் கிடைக் கவில்லை: ஆகலின் அஃது ஏட்டிலுள்ளபடியே ஈண்டுக் குறி க்கப்பட்டது.

இனிச் "சுண்ணமொழி மாற்று" வருமாறு:—

இன்னிசைச் சிந்தியல்வெண்பா.

" சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை "

இதனுள், 'சுரை' என்பதனோடு 'மிதப்ப' என்பது பொருள் கொள்ளவும், 'அம்மி' என்பதனோடு 'ஆழ' என்பது பொருள் கொள்ளவும், 'யானை' என்பதனோடு 'நிலை' என்பது பொருள்கொள்ளவும், 'முயல்' என்பதனோடு 'நீத்து' என்பது பொருள்கொள்ளவும் வந்தமையாற் சுண்ணமொழி மாற்று.

இனி "அடிமறி மொழிமாற்று" வருமாறு:—

†† " சூரல் பம்பிய-நீவரலாறே "

என்னும் ஆசிரியம், வேண்டிற்றோர் அடியான்முதலாகச்சொன்னாலும் ஓசையும், பொருளும் பிழையாது வந்தமையால் அடிமறி மொழிமாற்று.

இனி "அடிமொழி மாற்று" வருமாறு":—

குறள் வெண்பா.

" ஆலத்து மேல குவளை குளத்துள
வாலி னெடிய குரங்கு"

என்பதனுள், "ஆலத்து மேல குரங்கு, குளத்துள குவளை" என்று இரண்டடியின் மொழிமாற்றிப்பொருள் கொண்டமையால் அடிமொழி மாற்று.

இனிப் "பூட்டு விற்பொருள்கோள்" வருமாறு:—

நேரிசைவெண்பா.

" திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாதர்
இறந்து படிற்பெரிதா மேத—முறந்தையர்கோன்
தண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு "

---

†† இச்செய்யுளை 86வது பக்கத்திற்காண்க.

இதனுள், "திறந்திடுமின்" என்பதனோடு 'கதவு' என்பது நோக்குடைத்தாய்ப் பொருள் கொண்டமையாற் பூட்டுவிற்பொருள்கோள்.

இனிப் "புனல் யாற்றுப்பொருள் கோள்" வருமாறு:—

இன்னிசை வெண்பா.

" அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றஞ்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றங்
கொலைப்பாலுங் குற்றமே யாம் "

இஃது அடிதோறும் பொருளற்று வந்தமையாற் புனல் யாற்றுப் பொருள்கோள்.

இனி "அளைமறிபாப்புப் பொருள்கோள்" வருமாறு:—

அறு சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

" தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித் தளர்வார் தாமுஞ், சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற் சுழல்வார் தாமும், வீழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே முனிவார் தாமும், வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலா தாரே "

இதனுள், "வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதார்" என்னும் இறுதிச்சொல் இடையும், முதலுஞ் சென்று பொருள் கொண்டமையால் அளைமறிபாப்புப் பொருள்கோள்.

இனித் "தாப்பிசைப் பொருள்கோள்" வருமாறு:—

குறள்வெண்பா.

" உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு "

இதனுள், 'ஊனை யுண்ணாமை யுள்ள துயிர்நிலை' எனவும், 'ஊனைபுண்ண வண்ணாத்தல் செய்யாதளறு' எனவும் நடுநின்ற 'ஊன்' என்னுஞ்சொல் முதலும், இறுதியுஞ் செ

ன்று பொருள் கொண்டமையால், தாப்பிசைப் பொருள் கோள்.

இனிக் "கொண்டு கூட்டுப்பொருள்கோள்" வருமாறு:—

இன்னிசை வெண்பா.

"தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்"

இதனுள், 'அஞ்சனத்தன்ன பைங்கூந்தல்' எனவும், 'தெங்கங்காய் போலத்திரண்டுருண்ட வெண்கோழிமுட்டை யுடைத்தன்ன பசலை' எனவுஞ் சொற்களைக் கொண்டு கூட்டிப்பொருள் கொண்டமையாற் கொண்டு கூட்டுப்பொருள் கோள்.

நேரிசைவெண்பா.

"ஆரிய மன்னர் பறையி னெழுந்தியம்பும்
பாரி பறம்பின்மேற் றண்ணுமை-காரி
விறன்முள்ளூர் வேங்கைவீ தாநாறுந் தோளாள்
நிறனுள்ளூ ருல்ல தலர்"

இதனுள், 'தண்ணுமை நாறுந்தோள்' எனவும், 'நிறம் வேங்கைவீ' எனவும், 'அலர் ஆரியமன்னர் பறையினெழுந்தியம்பும்' எனவுஞ் சொற்களைக் கூட்டிப்பொருள் கொண்டமையால் இதுவுங் கொண்டு கூட்டுப்பொருள் கோள். பிறவு மன்ன.

இனிக் "குறிப்பிசை" என்பது--எழுத்தல்லோசையான்வந் தமுற்கும், ஈளையும், இலதையும், அநுகரணமு முதலாக உடையன செய்யுள் அகத்துவந்தால் அவை செய்யுணடை யழியாமல் அசையும், சீரும், அடியும், தொடையும் பிழையாமல் அலகிட்டு வழங்கப்படும்-எ-று.

வ-று.

நேரிசைவெண்பா.

" மன்றலங் கொன்றை மலர்மிலைந் துஃகுவஃ
கென்று திரியு மிடைமகனே-சென்று
மறியாட்டை யுண்ணுமல் வண்கையால் வல்லே
அறியாயோ வண்ணுக்கு மாறு "

ஒழிந்தனவும் இடைக்காடனார் பாடிய $ ஊசிமுறியுட்க ண்டு கொள்க.

என்னை:—

" எழுத்தல் லிசையை யசைகொடு சீர்தளை
நிறைக்கவும் படுமென நேர்ந்திசி னோரே "

என்றாராகலின்.

இனி, 'ஒப்பு' என்பது மேற்சீரும், தளையும், அடியும், வரையறுக்கப்பட்டபாவும், பாவினமுஞ் சொன்ன பெற்றி யிற்றிரிந்து, மிக்கும், குறைந்தும் வந்தால், அவை ஒருபுடை யொப்புமை நோக்கி ஒழிந்த செய்யுட்களின் பாற்படுத்து வழங்கப்படும் எ-று.

வ-று.

" கோழியுங் கூவின குக்கில் குரல்காட்டுந்
தாழியு ணீலத் தடங்கணீர் போதுமினோ
ஆழிசூழ் வையத்தெம் மண்ணலடி யேத்திக்
கூழை நனையக் குடைந்துங் குளிர்புனல்
ஊழியு மன்னவா மென்றேலோ ரெம்பாவாய் "

மேல், நாற்சீர் நான் கடியாய் வருவது கலிவிருத்தம் என்று வரையறுத்துச் சொன்னார். இஃது ஐந்தடியான் வந்ததாயினும் ஒரு புடை யொப்புமை நோக்கிக் கலிவிருத்தத்தின் பாற்படுத்து வழங்கப்படும் எனக்கொள்க. இதனைத் தரவு கொச்சக மெனினும் இழுக்காது.

---

$ இஃது இலக்கண விளக்கத்துள் "ஆசிரியமுறி" என எழுதப்பட்டிருக்கின்றது.

" சுற்றுநீர் சூழ்கிடங்கிற் பொற்றாமரைப் பூம்படப்பைத்
தெண்ணீர் நல்வயலூரன் கேண்மையல் லிருங்கூந்தற் கலரா
னவே"

மேல்வஞ்சிப் பாவிற்கு மூன்றடிச் சிறுமை என்றெடுத்தோதினர். இஃது இரண்டடிச் சிறுமையான் வந்ததாயினும் ஒரு புடையொப்புமை நோக்கி வஞ்சிப்பாவின் பாற்படுத்தே வழங்கப்படும் எனக்கொள்க. பிறவும், புராணகவிஞராற் பாடப்பட்ட இலக்கியங்களும் இவ்விலக்கணத்தான் ஒருபுடை யொப்புமை நோக்கி ஒன்றன் பாற்படுத்து வழங்கப்படும் எனக்கொள்க.

"ஒப்பும்" என்ற உம்மையால் வண்ணமும், புணர்ந்துரையும், அடியின்றி நடப்பனவும் ஆமாறுணர்ந்து கொள்க.

அவற்றுள், வண்ணம் நூறு திறத்தனவாம். அவை சொல்லுமாறு:—

தூங்கிசை வண்ணம், ஏந்திசைவண்ணம், அடுக்கிசை வண்ணம், பிரிந்திசைவண்ணம், மயங்கிசைவண்ணம் என்னும் இவ்வைந்தினையு முதல்வைத்து,

அகவல்வண்ணம், ஒழுகிசை வண்ணம், வல்லிசைவண்ணம், மெல்லிசைவண்ணம் என்னும் இந்நான்கினையும் இடைவைத்துக்,

குறில்வண்ணம், நெடில்வண்ணம், வல்லிசைவண்ணம், மெல்லிசைவண்ணம், இடையிசைவண்ணம் என்னும் இவ்வைந்தினையுங் கடைவைத்துக் கூட்டியுறழநூறு வண்ணமும் பிறக்கும்.

என்னை:—

**கட்டளைக்கலித்துறை.**

" தூங்கேந் தடுக்கல் பிரிதன் மயங்கிசை வைத்துப் பின்னும்
பாங்கே யகவ லொழுகல் வலிமெலிப் பாற்படுத்திட்
டாங்கே குறினெடில் வல்லின மெல்லின மோடிடையைத்
தாங்கா துறழ்தரத் தாம்வண்ண நூறுந் தலைப்படுமே"

என்றாராகலின்.

அவற்றின் விரியாவன:—

குறிலகவற்றூங்கிசைவண்ணம், நெடிலகவற்றூங்கிசை வண்ணம், வலியகவற்றூங்கிசை வண்ணம், மெலியகவற்றூங்கிசை வண்ணம், இடையகவற்றூங்கிசை வண்ணம் எனவும்,

குறிலொழுகற் றூங்கிசை வண்ணம், நெடிலொழுகற்றூங்கிசை வண்ணம், வலியொழுகற்றூங்கிசை வண்ணம், மெலியொழுகற்றூங்கிசை வண்ணம், இடையொழுகற்றூங்கிசை வண்ணம் எனவும்,

குறில்வல்லிசைத் தூங்கிசை வண்ணம், நெடில் வல்லிசைத் தூங்கிசைவண்ணம், வலி வல்லிசைத் தூங்கிசை வண்ணம், மெலிவல்லிசைத் தூங்கிசை வண்ணம், இடை வல்லிசைத் தூங்கிசை வண்ணம் எனவும்,

குறின்மெல்லிசைத் தூங்கிசை வண்ணம், நெடின்மெல்லிசைத் தூங்கிசை வண்ணம், வலிமெல்லிசைத் தூங்கிசைவண்ணம், மெலிமெல்லிசைத் தூங்கிசை வண்ணம், இடைமெல்லிசைத்தூங்கிசைவண்ணம் எனவும்—தூங்கிசைவண்ணம் 20.

குறிலகவலேந்திசை வண்ணம், நெடிலகவலேந்திசை வண்ணம், வலியகவலேந்திசை வண்ணம், மெலியகவலேந்திசை வண்ணம், இடையகவ லேந்திசைவண்ணம் எனவும்,

குறிலொழுகலேந்திசை வண்ணம், நெடிலொழுகலேந்திசைவண்ணம், வலியொழுகலேந்திசை வண்ணம், மெலியொழுகலேந்திசை வண்ணம், இடையொழுக லேந்திசை வண்ணம் எனவும்,

குறில்வல்லிசை யேந்திசை வண்ணம், நெடில்வல்லிசை யேந்திசைவண்ணம், வலிவல்லிசை யேந்திசை வண்ணம், மெலி வல்லிசை யேந்திசை வண்ணம், இடைவல்லிசையேந்திசை வண்ணம் எனவும்,

குறின்மெல்லிசை யேந்திசை வண்ணம், நெடின்மெல் லிசை யேந்திசை வண்ணம், வலிமெல்லிசையேந்திசை வண்ணம், மெலிமெல்லிசை யேந்திசை வண்ணம், இடைமெல்லி சை யேந்திசை வண்ணம் எனவும்—ஏந்திசை வண்ணம் 20.

குறிலகவலடுக்கிசை வண்ணம், நெடிலகவலடுக்கிசை வண்ணம், வலியகவலடுக்கிசை வண்ணம், மெலியகவ லடுக்கி சை வண்ணம், இடையகவ லடுக்கிசை வண்ணம் எனவும்,

குறிலொழுகலடுக்கிசை வண்ணம், நெடிலொழுகலடுக் கிசைவண்ணம், வலியொழுகலடுக்கிசை வண்ணம், மெலியொ ழுகலடுக்கிசை வண்ணம், இடையொழுக லடுக்கிசை வண் ணம் எனவும்,

குறில்வல்லிசை யடுக்கிசை வண்ணம், நெடில்வல்லிசை யடுக்கிசை வண்ணம், வலிவல்லிசை யடுக்கிசை வண்ணம், மெலி வல்லிசை யடுக்கிசை வண்ணம், இடை வல்லிசை யடு க்கிசை வண்ணம் எனவும்,

குறின்மெல்லிசையடுக்கிசை வண்ணம், நெடின்மெல்லி சையடுக்கிசை வண்ணம், வலிமெல்லிசையடுக்கிசை வண் ணம், மெலிமெல்லிசை யடுக்கிசை வண்ணம், இடைமெல்லி சை யடுக்கிசைவண்ணம் எனவும்—அடுக்கிசைவண்ணம் 20

குறிலகவற் பிரிந்திசை வண்ணம், நெடிலகவற் பிரிந்தி சை வண்ணம், வலியகவற் பிரிந்திசை வண்ணம், மெலியக வற் பிரிந்திசை வண்ணம், இடையகவற் பிரிந்திசை வண் ணம் எனவும்,

குறிலொழுகற் பிரிந்திசை வண்ணம், நெடிலொழுகற் பிரிந்திசை வண்ணம், வலியொழுகற் பிரிந்திசைவண்ணம், மெலியொழுகற் பிரிந்திசை வண்ணம், இடையொழுகற் பிரி ந்திசை வண்ணம் எனவும்,

குறில் வல்லிசைப் பிரிந்திசை வண்ணம், நெடில்வல்லிசைப் பிரிந்திசை வண்ணம், வலிவல்லிசைப் பிரிந்திசை வண்ணம், மெலிவல்லிசைப் பிரிந்திசை வண்ணம், இடைவல்லிசைப் பிரிந்திசை வண்ணம் எனவும்,

குறின்மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம், நெடின்மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம், வலிமெல்லிசைப் பிரிந்திசை வண்ணம், மெலிமெல்லிசைப் பிரிந்திசை வண்ணம், இடைமெல்லிசைப் பிரிந்திசை வண்ணம் எனவும்—பிரிந்திசை வண்ணம் 20

குறிலகவன் மயங்கிசை வண்ணம், நெடிலகவன் மயங்கிசை வண்ணம், வலியகவன் மயங்கிசை வண்ணம், மெலியகவன் மயங்கிசை வண்ணம், இடையகவன் மயங்கிசை வண்ணம் எனவும்,

குறிலொழுகன் மயங்கிசை வண்ணம், நெடிலொழுகன் மயங்கிசை வண்ணம், வலியொழுகன் மயங்கிசைவண்ணம், மெலியொழுகன் மயங்கிசைவண்ணம், இடையொழுகன் மயங்கிசை வண்ணம் எனவும்,

குறில்வல்லிசை மயங்கிசைவண்ணம், நெடில் வல்லிசை மயங்கிசை வண்ணம், வலிவல்லிசை மயங்கிசைவண்ணம், மெலிவல்லிசை மயங்கிசைவண்ணம், இடைவல்லிசை மயங்கிசைவண்ணம் எனவும்,

குறின்மெல்லிசை மயங்கிசை வண்ணம், நெடின்மெல்லிசைமயங்கிசை வண்ணம், வலிமெல்லிசை மயங்சிசை வண்ணம், மெலிமெல்லிசை மயங்கிசை வண்ணம், இடைமெல்லிசை மயங்கிசைவண்ணம் எனவும்—மயங்கிசைவண்ணம் 20.

ஆக வண்ணம் நூறு.

இவ்வாறு விரித்துரைத்தார் அவிநயனார்.

இனித்தொல்காப்பியர் முதலிய ஒருசார் ஆசிரியர் வண்ணம் இருபது என்பர்.

என்னை:—

" வண்ணந் தாமே நாலைந் தென்ப"

" அவைதாம்,
பாஅ வண்ணந் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ண மெல்லிசை வண்ண
மியைபு வண்ண மளபெடை வண்ண
நெடுஞ்சீர் வண்ணங் குறுஞ்சீர் வண்ணஞ்
சித்திர வண்ண நலிபு வண்ண
மகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ண
மொழுகு வண்ண மொரூஉ வண்ண
மெண்ணு வண்ண மகைப்பு வண்ணந்
தூங்கல் வண்ண மேந்தல் வண்ண
முருட்டு வண்ண முடுகு வண்ணமென்
றுங்கவை யென்ப வறிந்திசி னோரே "

என்றாராகலின்.

" அவற்றுள்,
பாஅ வண்ணஞ் சொற்சீர்த் தாகி
நூற்பாற் பயிலு நோக்கிற் றென்ப "

" தாஅ வண்ண
மிடையிட்டு வந்த வெதுகைத் தாகும் "

" வல்லிசை வண்ண வல்லெழுத்து மிகுமே "

" மெல்லிசை வண்ண மெல்லெழுத்து மிகுமே "

" இயைபு வண்ண மிடையெழுத்து மிகுமே "

" அளபெடை வண்ண மளபெடை பயிலும் "

" நெடுஞ்சீர் வண்ண நெட்டெழுத்துப் பயிலும் "

" குறுஞ்சீர் வண்ணங் குற்றெழுத்துப் பயிலும் "

" சித்திர வண்ணங் குறியவு நெடியவு
மொத்துநேர்ந் தடுக்கிய வியற்கைத் தென்ப "

"நலிபு வண்ண மாய்தம் பயிலும்"

"அகப்பாட்டு வண்ண
முடியா தனபோன்று முடிந்ததன் மேற்றே"

"புறப்பாட்டு வண்ண
முடிந்தது போன்றுமுடியா தாகும்"

"ஒழுகு வண்ண மோசையி னொழுகும்"

"ஒரூஉ வண்ண மொரூஉத்தொடை தொடுக்கும்"

"எண்ணு வண்ண மெண்ணுப் பயிலும்"

"அகைப்பு வண்ண மறுத்தறுத் தொழுகும்"

"தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்"

"ஏந்தல் வண்ணஞ்
சொல்லியது சொல்லிற் சொல்லியது சிறக்கும்"

"உருட்டு வண்ண மராகந் தொடுக்கும்"

"முடுகு வண்ண மடியிறந் தொழுகும்"

இவையெல்லாந் தொல்காப்பியத் துள்ளும், யாப்பருங் கலவிருத்தியுள்ளுங் கண்டுகொள்க.

இனிப்புனைந்துரை இரண்டு வகைப்படும், பெரிய தனைச் சுருக்கிச் சொல்லுதலும், சிறியதனைப் பெருக்கிச் சொல்லுதலும் என.

என்னை:—

† "உரைக்கப் படும்பொருட் கொத்தன வெல்லாம்
புகழ்ச்சியின் மிக்க புனைந்துரை யாகும்"

என்றாராகலின்.

வ—று.

**நேரிசை வெண்பா.**

"அடையார் பூங்கோதைக் கல்குலுந் தோன்றும்
புடையார் வனமுலையுந் தோன்று—மிடையாதுங்

---

† இச்சூத்திரம் இலக்கண விளக்கத்துள்,

"உரைக்கப் படும்பொருட் கொத்தவை யெல்லாம்
புகழ்ச்சியின் மிக்க புனைந்துரை யவைதாம்
பெரிதினைச் சுருக்கலுஞ் சிறிதினைப் பெருக்கலு
மெனவிரண் டாகு மென்மனார் புலவர்"

என்றிருக்கின்றது.

கண்டுகொள்ளா தாயினுங் காரிகை நீர்மையாட்
குண்டாக வேண்டு நுசுப்பு"

இது பெரியதனைச் சுருக்கிற்று.

"அவாப்போ லகன்றத னல்குன்மேற் சான்றோர்
உசாப்போல வுண்டே மருங்கு-லுசாவினைப்
பேதைக் குரைப்பான் பிழைப்பிற் பெருகினவே
கோதைக்கொம் பன்னாள் குயம்"

இது சிறியதனைப் பெருக்கிற்று.

"பொன்மலி கச்சி பூமலி கூடல்
மாரி யீகை மணிமாடம்"

என்னுந் தொடக்கத்தனவும் அது.

இனி அடியின்றி நடப்பன:—பாட்டுரையும், நூலும், மந்திரமும் பிசியும், முதுசொல்லும், அங்கதமும், வாழ்த்தும் என்னுமிவை ஓரடியானும், பலவடியானும் வரப் பெறும்.

எனனை:—

† "செயிர் தீர்செய்யு டெரியுங் காலை
யடியி னீட்டத் தழகுபெற் றியலும்"

---

† இச்சூத்திரத்தோடு,

"ஓரடி யானும் பலவடி யானு
மொரோவழி யியலு முரைத்தவச் செய்யுள்"

"அவைதாம்,
பாட்டுரை நூலே மந்திரம் பிசியே
முதுசொல் லங்கதம் வாழ்த்தொடு பிறவு
மாகு மென்ப வறிந்திசி னோரே"

என்னும் இலக்கண விளக்கச் சூத்திரம் ஒத்திருத்தலை யறிக. பாட்டுரை-உரைச்சூத்திரம். நூல்-சூத்திரப்பா, சூத்திரம், வெண்பாமுதலிய வேறு சில செய்யுட்களாலும் இயன்றுள தாயினும், அகவலடியான் வருஞ் சூத்திரமே சூத்திரப்பா எனப்படும். என்னை, அடியின்றிநடப்பது அதுவேயாகலின். நூல், நூற்பா, சூத்திரப்பா என்பன ஒருபொருட் சொற்கள். மந்திரம்-வடமொழியிலுள்ள அஷ்டாக்ஷரம், பஞ்சாக்ஷர முதலியவற்றைப் போல்வன. பிசி-பொய்.

" ஓரடி யானு மொரோவிடத் தியலும்"

" அவைதாம்,
பாட்டுரை நூலே மந்திரம் பிசியே
முதுசொல் லங்கதம் வாழ்த்தொடு பிறவு
மாகுந வென்ப வறிந்திசி னோரே"

என்றாராகலின்.

இனி நூலாவது—மூவகைத்தாய், மூவரினடைபெற்று; நால்வகைப் பயத்ததாய், எழுவகை ஆசிரியர் மதவிகற்பத்த தாய்ப், பத்துவகைக் குற்றந்தீர்ந்து, பத்துவகைக் குணத்த தாய்ப், பதின்மூன்று வகையான உரைபெற்று, முப்பத்தி ரண்டு தந்திர உத்தியோடும் புணர்ந்தது எனக்கொள்க.

அவற்றுள், மூவகையாவன- தந்திரம், சூத்திரம், விருத்தி எனவிவை.

முதனூல், வழிநூல், சார்புநூல் எனினும் அமையும். மூவரினடைபெறுதல் என்பது—அவை மூன்றும் நடாத்தும் ஆசிரியர் மூவர் எனக்கொள்க.

நால்வகைப்பயன் ஆவன—அறம், பொருள், இன்ப வீடு எனவிவை.

---

முதுசொல்-பழமொழி. அங்கதம்-வசை. வாழ்த்து - துதி; அஃது ஒருவர்தம் மிகுதியைக் கூறுவது. அணிகளில் ஒன்றாகிய வாழ்த்திற்கு ஆசீர்வாதம் என்பது பொருள். அஃது அப்பொருளுடையதாதலே,

" இன்னார்க் கின்ன தியைக வென்றுதா
முன்னியது விரித்தல் வாழ்த்தென மொழிப "

என்னுந் தண்டியலங்காரச் சூத்திரத்தா லுணர்க. அங்கதம், வாழ்த்து என்னும் இவ்விரண்டிற்கும் உதாரணமுற்கூறப்பட்டன. மற்றவைற்றிற்கு உதாரணம் வந்தவழிக் கண்டு கொள்க.

எழுவகை ஆசிரியர் மதவிகற்பமாவன—உடன்படல் மறுத்தல், பிறர்தம் மதமேற்கொண்டு களைதல், தாஅநாட்டித்தனாது நிறுத்தல், இருவர் மாறுகோளொருதலை துணிதல், பிறர்நூற் குற்றங்காட்டல், பிறிதொடுபடா அன்றன் மதங்கொளல் என்னுமிவை

பத்துவகைக் குற்றமாவன — குன்றக்கூறல், மிகைபடக்கூறல், கூறியது கூறல், மாறுகொளக் கூறல், வழூஉச்சொற்புணர்த்தல், மயங்கவைத்தல், வெற்றெனத்தொடுத்தல் மற்றொன்று விரித்தல், சென்று தேய்ந்திறுதல், நின்றுபயனின்மை எனவிவை.

பத்துவகைக் குணமாவன—சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், முறையின் வைப்பு, உலகமலையாமை, விழுமியது பயத்தல், விளங்கு தாரணத்ததாகுதல் எனவிவை.

பதின்மூன்றுவகை உரையாவன—சூத்திரந் தோற்றல், சொல்வகுத்தல், சொற்பொருளுரைத்தல், வினாதல், விடுத்தல், விசேடங்காட்டல், உதாரணங்காட்டல், ஆசிரியவசனங்காட்டல், அதிகார வரவுகாட்டல், தொகுத்து முடித்தல், விரித்துக்காட்டல், துணிவுகூறல், பயனொடு புணர்த்தல் எனவிவை.

முப்பத்திரண்டு தந்திர உத்தியாவன—நுதலிப்புகுதல், ஓத்துமுறைவைப்பு, தொகுத்துச் சுட்டல், வகுத்துக்காட்டல், முடித்துக்காட்டல், முடிவிடங்கூறல், தானெடுத்துமொழிதல், பிறன்கோட் கூறல், சொற்பொருள் விரித்தல் தொடர்ச்சொற் புணர்த்தல், இரட்டுறமொழிதல், ஏதுவின் முடித்தல், ஒப்பின் முடித்தல், மாட்டெறிந்தொழுகல், இறந்தது விலக்கல், எதிரது போற்றல், முன்மொழிந்துகோடல், பின்னது நிறுத்தல், விகற்பத்தின் முடித்தல், முடிந்

தது முடித்தல், உரைத்து மென்றல், உரைத்தா மென்றல், ஒருதலை துணிதல், எடுத்துக்காட்டல், எடுத்தமொழியினெய்தவைத்தல், இன்னதல்ல திதுவெனமொழிதல், எஞ்சிய சொல்லினெய்தக்கூறல், பிறநூன் முடிந்தது தானுடன்படுதல், தன்குறி வழக்கமிக வெடுத்துரைத்தல், சொல்லின் முடிவினப்பொருண் முடித்தல், ஒன்றின முடித்தறன்னின முடித்தல், உய்த்துணரவைப்பு எனவிவை.

இவ்வாறு சொன்னார் பாடலனார் என்னும் ஆசிரியர் எனக்கொள்க. ஒருசார் ஆசிரியர் தந்திரவுத்தி முப்பத்திரண்டினும் பலவென்பாரும் உளர்.

9. எழுத்துப் பதின்மூன் றிரண்டசை சீர்முப்ப தேழ்தளையைந்
திழுக்கி லடிதொடை நாற்பதின் மூன்றைந்து பாவினமூன்
றெழுக்கிய வண்ணங்க ளாறென்ப தொண்பொருள் கோளிருமூ
வழுக்கில் விகாரம் வனப்பெட் டியாப்புள் வகுத்தனவே.

இ-கை. இந்நூலுள் வகுத்த பொருளெல்லாம் தொகுத்து-ற்று.

எழுத்துப் பதின்மூன்றாவன—குற்றெழுத்து, நெட்டெழுத்து, உயிரெழுத்து, குற்றிய லிகரம், குற்றியலுகரம், ஐகாரகுறுக்கம், ஆய்தம், மெய்யெழுத்து, வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர்மெய், அளபெடை எனவிவை.

இரண்டசையாவன—நேரசை, நிரையசை எனவிவை.

சீர்முப்பதாவன—ஈரசைச்சீர் நான்கும், மூவசைச்சீர் எட்டும், நாலசைச்சீர் பதினாறும் ஓரசைச்சீர் இரண்டும் எனவிவை.

ஏழ்தளையாவன—நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, இயற்சீர்வெண்டளை, வெண்சீர்வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாதவஞ்சித்தளை, கலித்தளை எனவிவை.

ஐந்தடியாவன—குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி எனவிவை.

தொடைநாற்பத்து மூன்றாவன:—அடிமோனை, அடியெதுகை, அடிமுரண், அடியியைபு, அடியளபெடை, அந்தாதித்தொடை, இரட்டைத்தொடை, செந்தொடை எனக்கிடந்ததொடையும், இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடைவிகற்பமும் எனவிவை.

ஐந்துபாவாவன:—வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா எனவிவை.

இனமூன்றாவன:—தாழிசை, துறை, விருத்தம் எனவிவை.

ஒழுக்கிய வண்ணம் நாறாவன—குறிலகவற்றாங்கிசை வண்ணமுதலாக மேற்காட்டிப்போந்தன.

ஒன்பதொண்பொருள் கோளாவன—நிரனிறை, சுண்ணமொழி மாற்றுமுதலியன.

இருமூவழுக்கில் விகாரமாவன—வலிக்கும் வழி வலித்தன் முதலியன.

வனப்பெட்டாவன—அம்மைமுதலியன.

"யாப்புள்வகுத்தனவே" என்பது—யாப்பருங் கலக்காரிகை என்னும் யாப்பிற் சொல்லப்பட்டன எ-று. எகாரம் ஈற்றசை.

'ஐந்திழுக்கிலடி" என்று சிறப்பித்தவதனால்—திணைவழுவும், பால்வழுவும், மரபுவழுவும், வினாவழுவும், விடைவழுவும், காலவழுவும், இடவழுவும் என்று சொல்லப்பட்ட எழுவழுவும் படாமற் புணர்க்கப்படும் எனக்கொள்க.

"வழுக்கில் விகாரம்" என்று சிறப்பித்த வதனால்—எழுத்துக்குற்றம், சொற்குற்றம், பொருட்குற்றம், யாப்புக்குற்றம், அலங்காரக்குற்றம், ஆநந்தக் குற்றம் என்னும் ஆறு குற்றமும் படாமற் புணர்க்கப்படுஞ் செய்யுட்கள் எனக்கொள்க.

அவற்றுள், எழுத்துக்குற்ற முதலிய ஐந்தும் அவ்வவ்விலக்கண நூல்களால் அறிந்துகொள்க.

ஆநந்தக்குற்றமாவன—எழுத்து முதலிய திரிதல்.

என்னை:—

“ எழுத்துநிலை திரிந்த எழுத்தா நந்தமும்
சொன்னிலை திரிந்த சொல்லா நந்தமும்
பொருணிலை திரிந்த பொருளா நந்தமும்
யாப்புநிலை திரிந்த யாப்பா நந்தமும்
நடைபெறு புலவர் நாட்டின ரவையே ”

என்றாகலின்.

அவற்றுள், எழுத்தாநந்தம் வருமாறு:—

## நேரிசை வெண்பா.

“ ஆழி யிழைப்பப் பகல்போ மிரவெல்லாந்
தோழி துணையாத் துயர்தீரும்—வாழி
நறுமாலை தாராய் திரையவோஒ வென்னுஞ்
செறுமாலை சென்றடைந்த போது ”

இதனுள், “திரையவோஒ” என்று இயற்பெயரைச் சார்ந்து அளபெழுந்தமையால் எழுத்தாநந்தம்.

என்னை:—

“ இயற்பெயர் சார்த்தி யெழுத்தள பெழினே
யியற்பா டில்லா வெழுத்தா நந்தம் ”

என்றாகலின்.

சொல்லாநந்தம் வருமாறு:—

## நேரிசை வெண்பா.

“ என்னிற் பொலிந்த திவண்முக மென்றெண்ணித்
தன்னிற் குறைபடுப்பான் றண்மதிய—மின்னி
விரிந்திலங்கு வெண்குடைச் செங்கோல் விசயன்
எரிந்திலங்கு வேலி னெழும் ”

இதனுள், தலைமகன்மேல் “எரிந்தது” என்னுஞ் சொற் புணர்த்தமையாற் சொல்லாநந்தம்.

என்னை:—

" இயற்பெயர் மருங்கின் மங்கல மழியத்
தொழிற்சொற் புணர்ப்பின து சொல்லா நந்தம் "

என்றாகலின்.

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

### நேரிசை வெண்பா.

" இந்திரனே போலு மிளஞ்சாத்தன் சாத்தற்கு
மந்தரமே பேன்றிலங்கு மல்லாக—மந்தரத்திற்
றூழருவி போன்றுளது தார்மாலை யம்மாலை
எழுலகு நாறு மிணர்"

இதனுள், சாத்தன் என்னுங் கீழ்மகனை அரசரை உவமித்தாற்போல உவமித்தமையால் இறப்ப உயர்ந்த ஆநந்தம் உவமை

வெண்பா

### நேரிசையாசிரியப்பா.

" வள்ளெயிற்றுப் பேழ்வாய் ஞமலிக்கு மான்குழாம்
எள்ளி யிரிந்தாற்போ லெவ்வழியும்—வள்ளற்கு
மாலார் கடலன்ன மண்பரந்த வாட்டானை
மேலாரு மேலார் விரைந்து"

இதனுட், புலியிஞேடுவமிக்கப்படுகின்றதலைமகனாகிய வீரனேடு நாயை உவமித்தமையால் இறப்ப இழிந்த வாநந்த உவமை

என்னை:—

" இறப்ப விழிந்தது மிறப்ப வுயர்ந்தது
மறத்தகை வழீஇய வாநந்த வுவமை"

என்றாகலின்.

அலங்காரக் குற்றமாவது:—

### நேரிசைவெண்பா.

" வெண்டிங்கள் போன்றிலங்கு வெண்சங்கு சங்கனைய
வண்டிலங்கு தாழை வளர்தோடு—விண்டெங்குங்
கள்ளாவி நாறுங் கருங்கழிசூழ் கானகத்தெம்
உள்ளாவி வாட்டு முரு"

இதனுள், வெண்டிங்கள் போலுஞ்சங்குசங்குபோலுந் தாழைப்பூ என்று உவமைக்குவமை சொன்னமையால் "அடுத்து வரலுவமை" என்னும் அலங்காரக்குற்றம்.

என்னை:—

" உவமைக் குவமை யில்லெனு மொழிப "

என்றாராகலின்.

இனி எல்லாக்குற்றமுந் தீர்ந்தசெய்யுள் வருமாறு:—

**நேரிசை யாசிரியப்பா.**

" தாமரை புரையுங் காமர் சேவடி
பவளத் தன்ன மேனித் திகழொளி
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த செஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
வேம வைக லெய்தின்றா லுலகே "

மூன்றாவது

ஒழிபியன் முற்றிற்று.

---

" சீரொடு விட்டிசை மாஞ்சீ ரியற்றளை சேர்ந்தருகி
வாரடர் கொங்கை வருக்கஞ் சுருங்கிற்று வான்பொருளுஞ்
சீரிய தூங்கேந் தடுக்குச் சிறந்த வெழுத்துமன்றே
யாரு மொழிபியற் பாட்டின் முதனினைப் பாகுமன்றே. "

இஃது ஒழிபியற் செய்யுட்களின் முதனினைப்புக் காரிகை.

**யாப்பருங்கலக்காரிகை**

மூலமும், உரையு முற்றிய.

---

ஸ்ரீ

# அநுபந்தம்.

## இந்நூலிற் சொல்லப்படாத

## சில செய்யுட்களின் இலக்கணம்.

### கட்டளைக்கலிப்பாவின் இலக்கணம்.

மாச்சீர் முதல்வரு நாற்சீ ரடிமுத னேர்நிரையென்
றாச்சேர்ந் தெழுத்துப் பதினொன்று பன்னிரண் டாய்நிரலே
பாச்சீ ரடியரை யாயுற் றிரட்டியப் பாதமோர்நான்
காய்ச்சேர்ந் துறுங்கட் டளைக்கலி செம்மொழிக் காரிகையே.

இ-ள். முதற்சீர் மாச்சீராய் வரப்பெற்ற நாற்சீரடிதான், தன் முதற்சீரின் முதலசை நேரசையாயின் பதினொரெழுத்தையும், நிரையசையாயின் பன்னிரெழுத்தையும் பெற்று அரையடியாய் நிற்ப, அதனோடு அவ்வாறே வரப்பெற்றமற்றோர் அரையடியுஞ் சேர்ந்து முழு அடியாகிய அடி நான் கொத்து வரப்பெறுவது கட்டளைக்கலிப்பா எ-று.

'செம்மொழிக்காரிகையே' என்பது மகடூஉமுன்னிலை. 'என்று' என்பது எண்ணிடைச்சொல். 'நேரென்று' நிறை என்று, எனக்கொள்க. இதில் யகர ஒற்று ஆசாய் வந்தது.

இதில் எழுத்தெண்ணுங்கால் ஒற்றுக்களை நீக்கி எண்ணுக. இவ்விதி பிற்கூறப்படுங் கட்டளைக் கலித்துறைக்கும் பொருந்தும்.

கட்டளைக்கலிப்பா இங்ஙனம் வருமென்பதை,

" மாச்சீர் முன்வரு நாற்சீ ரடியே
நேர்முத னிரைமுத னிரணிறை யானே
பதினொ ரெழுத்தும் பன்னீ ரெழுத்து
மியைந்தரை யடியாய் நடந்தஃ திரட்டித்
தொத்துநான் கிறுவது கட்டளைக் கலிப்பா "

எனவருமிதனுனு முணர்க.

வ-று.

**கட்டளைக்கலிப்பா.**

" அண்டர் போற்றுந்தி ருவரங் கேசனு
ரணிய ரங்கத்தி ருமுற்ற மெய்தினுற்
பண்டு போனவ ளையாழி வாங்குவேன்
பாலி யாதுப ராமுகம் பண்ணினுற்
றண்டும் வாளுஞ் சிலையு மிருக்கவே
சங்கு மாழியுந் தாருமென் பேனவை
தொண்ட ருக்கொற்றி வைத்தோமென் றேர்திணுற்
றுளவ மாலையைத் தொட்டுப்ப றிப்பனே "

**கட்டளைக்கலிப்பா.**

" சொல்வி னீரிவ ராசைப்பட் டாரென்று
சொன்ன சொற்பொருள் வேறுகொண் டையையோ
புல்லு வாரெவ்வி தத்தினு மென்றுளம்
பூரித் தேயிருந் தேன்மட மங்கைமீர்
செல்லு லாம்பொழிற் கூவ நகருறை
திருவிற் கோல ரினுமரு ளாமையால்
அல்ல தேதுதி கம்பர ரென்பொரு
ளறையின் வன்கண ராவரென் மட்டுமே "

இவை நேரசை முதலாய் வந்த கட்டளைக் கலிப்பா

**கட்டளைக்கலிப்பா.**

" பிராவெ னச்சொன் முராரிநீ புராரிநீ
பிரம நீகுணப் பேதநீ பூதநீ
தராத லத்திற் சராசரம் யாவுநீ
சச்சி தாநந்த வின்பமு நீயன்றே
மராம ரங்கொ லிராமவி ராகவ
வாசு தேவ வனகிரி வாசமுன்
கராச லஞ்சொல் பராபர நாதசெங்
கஞ்சு லோசன வஞ்சன மேருவே "

**கட்டளைக்கலிப்பா.**

" மதிக்கு நேர்முக மாதுகு யிலிந்து
வந்து சிந்து பகைசெய்ய வேமனங்

கொதிக்கு நீருலை யாகும் விழுமெழுங்
கோட்டி கொள்ளு மதனப்ப யலையே
துதிக்கும் பாங்கியர்ப் பார்த்துச்செவ் வாய்துடி
துடிக்குங் கைவளை சோரும்பின் னீயிருந்
ததிக்கும் பார்க்குங்கண் டாய்திருச் செந்தில்வாழ்
சந்த ஞசலக் கந்தசு வாமியே ''

இவை நிரையசை முதலாய் வந்த கட்டளைக்கலிப்பா.

---

கட்டளைக் கலித்துறையின்

**இலக்கணம்.**

'' அடியடி தோறு மைஞ்சீ ராகி
முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்கா யாகி
நேர்பதி ஞறே நிறைபதி னேழென்
ருேதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே ''

இ-ள். நான்கடியாய், ஒவ்வோ ரடியினும் ஐந்துசீர்கள் வரப்பெற்று, அச்சீர்களுண்முதல் நான்கு சீர்களும் வெண்டளைபொருந்தி நிற்பக் கடைச்சீரொன்றுமே "கூவிளங்காய், கருவிளங்காய்" என்பனவற்றுள் ஒன்ருய்ப் பொருந்தப்பெற்று, நேரசை முதலாகத் தொடங்கிய அடிகள் ஒவ்வொன்றினும் பதிஞறெழுத்தும், நிரையசை முதலாகத்தொடங்கிய அடிகள் ஒவ்வொன்றினும் பதினேழெழுத்தும் பொருந்தப்பெற்று முடிவது கட்டளைக் கலித்துறையாம் எ-று.

எழுத்துக்களை எண்ணி வகுத்தமையான் கட்டளைக் கலித்துறை என்பது விளங்கியது. கட்டளைக் கலிப்பாவுக்கும் இஃதொக்கும்.

'கடையொரு சீரும் விளங்காயாகி'' என்று சிறப்பித்தமையான், முதற்சீர் நான்கும் பெரும்பான்மையும் இயற்சீர்களேயாகவும், சிறுபான்மை அவற்ருேடு தேமாங்காய்ச்சீர்,

புளிமாங்காய்ச்சீர்கள்விரவியும் வரப்பெறும் எனவும், அங்ஙனமன்றி அம்முதற்சீர்கள் நான்கனுள் "கூவிளங்காய், கருவிளங்காய்ச்சீர்கள் வந்துபொருந்துமாயின்" எழுத்துகண்மேற் கூறிய அளவின் மிக்குச்செய்புளின்பங்கெடும் எனவும், ஈற்றுச் சீராகிய விளங்காய்ச்சீர்கள் இரண்டனுள் கூவிளங்காய்ச்சீர்க்குப் பதிலாக அதனோடு ஒருபுடையொத்தனவாகிய தேமாங்கனி, தேமாந்தண்பூச்சீர்களும், கருவிளங்காய்ச் சீர்க்குப் பதிலாக அதனோடு ஒருபுடையொத்தனவாகிய புளிமாங்கனி, புளிமாந்தண்பூச்சீர்களுஞ் சிறுபான்மை வரப்பெறும் எனவுங் கொள்க.

"முதற்சீர் நான்கும் விளங்காயாகி" என்று சிறப்பித்தவதனாற் கட்டளைக்கலித்துறையில், வெண்பாவிற்போல் ஓரடியின் இறுதிச்சீர் அடுத்தவடியின் முதற்சீரோடு வெண்டளைபொருந்தி வரவேண்டும் என்னும் நியதியின் றெனவும், அந்நியதிகொள்ளின் நிரையசை முதலாக வருங்கட்டளைக் கலித்துறையிற் காய்முன் நிரைவந்து கலித்தளையாய்ச் செப்பலோசைபிழைக்குமெனவுங் கொள்க.

வ-று.

### கட்டளைக்கலித்துறை.

"உண்ணு துறங்கா துணர்வுறு மெத்தனை யோகியர்க்கு
மெண்ணய் மிளிரு மியல்வின வாமெரி நீர்வளிவான்
மண்ணு கியவெம் பெருமான் றனதுவை குந்தமன்னுள்
கண்ணு யருவினை யேனுயி ராயின காவிகளே"

இதனுள், நான்கடியினு முதல் நான்கு சீர்களும் இயற்சீராயிருத்தல் காண்க.

### கட்டளைக்கலித்துறை.

"மைப்படி மேனியுஞ் செந்தா மரைக்கண்ணும் வைதிகரே
மெய்ப்படி யாலுன் றிருவடி சூடுந் தகைமையினு

ரெப்படி யூரா மிலைக்கக் குருட்டா மிலைக்குமென்னு
மப்படி யானுஞ்சொன் னேனடி யேன்மற்றி யாதென்பனே',

இதனுள், முதலடியின் நான்காஞ்சீர் "மரைக்கண்ணும்" எனப் புளிமாங்காய்ச்சீராகவும், நான்காமடியின் இரண்டாஞ் சீரும், நான்காஞ்சீரும் "யானுஞ்சொன்" எனவும், "யேன் மற்றி" எனவுந் தேமாங்காய்ச் சீராகவும் வந்தமை காண்க.

அன்றியும் இதனுள்,நான்காமடியின் ஈற்றுச்சீர் "யாதென்பனே" எனத் தேமாங்கனியா யிருத்தலுங்காண்க. இதனை யொற்றழித்துக் கூவிளங்காயாகக் கொள்ளலாமேயெனின் அடியில்வருஞ் செய்யுளில் அங்ஙனங்கொள்ளலாகாமை கண்டு கொள்க.

### கட்டளைக்கலித்துறை.

" பண்டும் பலபல வீங்கிருள் காண்டுமிப் பாயிருள்போற்
கண்டு மறிவதுங் கேட்பதும் யாமிலங் காளவண்ண
வண்டுண் டுழாய்ப்பெரு மான்மது சூதனன் றாமோதரன்
உண்டு முமிழ்ந்துங் கடாயமண் ணோரன்ன வொண்ணுதலே"

இதனுள், மூன்றாமடியின் ஈற்றுச்சீர் "தாமோதரன்" எனத் தேமாங்கனியாய்வந்தது. இனிப்புளி மாங்கனியாய் வருதற்குதாரணம்.

வ-று.

" தொண்டரை யாக்கி யவரவர்க் கேற்ற தொழில்கள்செய்வித்
தண்டர்தங் கோனக் கணத்துக்கு நாயகம் பெற்றவன்காண்
கொண்டல்வண் டேறிய மின்னுக்குக் கோல மலர்கடொறுங்
கண்டல்வெண் சோறளிக் குங்கடற் காழிக் கணநாதனே"

இதனுள், நான்காமடியின் ஈற்றுச்சீர் "கணநாதனே" எனப்புளிமாங்கனிச்சீராய் வந்தமை காண்க.

### கட்டளைக்கலித்துறை.

" குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்வஞ்சித்
துறையொரு வாது தனிவரு மாய்விடிற் சிந்தடிநான்

கறைதரு காலை யமுதே விருத்தந் தனிச்சொல்வந்து
மறைதலில் வாரத்தி னலிறும் வஞ்சிவஞ்சிக் கொடியே"

இதனுள், முதலடியின் ஈற்றில் "கோதில்வஞ்சி" எனத் தேமாந்தண்பூச்சீரும், மூன்றுமடியின் ஈற்றில் "தனிச்சொல் வந்து" எனப்புளிமாந்தண்பூச்சீரும் வந்தமை கண்டுகொள்க.

கட்டளைக்கலித்துறையில் நான்கடியினுஞ் சீர்கள் அளவொத்திருக்கவேண்டுமென்னு நியதிஇல்லை. அது பெரும்பாம்பான்மையும் ஏகாரத்தையும், சிறுபான்மை ஓகாரத்தையும் ஈற்றிற்பெற்று முடியும் என்க. முன்காட்டியவற்றுள் ஏகாரம் ஈருய்வந்தமை காண்க. இனி ஓகரத்தை ஈற்றிற்பெற்று முடியுஞ்செய்யுள் வருமாறு:—

**கட்டளைக்கலித்துறை.**

"கோலப் பகல்களி றென்றுகற் புய்யக் குழாம்விரிந்த
நீலக்கங் குல்களி றெல்லா நிறைந்தன நேரிழையீர்
ஞாலப்பொன் மாதின் மணாளன் றுழாய்நங்கள் சூழ்குழற்கே
ஏலப் புனைந்தென்னை மாரெம்மை நோக்குவ தென்றுகொ
[லோ"

மெய்யை ஈற்றிற்பெற்று முடியுங்கட்டளைக் கலித்துறைகளுமுண்டு. அவற்றை வந்தவழிக் கண்டுகொள்க.

இங்ஙனங் காட்டப்பட்ட கட்டளைக் கலித்துறைகளில், "குறளடி நான்கின்" என்பதொன்றும்நிரையசையைமுதலாகக்கொண்டுவந்தது; மற்றவை நேரசையை முதலாகக் கொண்டு வந்தவை.

கட்டளைக் கலித்துறைக்குத் "திலதக்கலித்துறை" எனவும், 'கோவைக் கலித்துறை" எனவும் வேறு பெயர்களுமுண்டு. இதற்கு "விருத்தம்" எனவும் பெயர் வழங்குகின்றது. இதற்கு இப்பெயர் வழங்குதலை நாலாயிரப் பிரபந்தம், திருவாசகம், தேவார முதலிய ஆன்றோர் செய்யுட்களிற்காண்க.

செய்யுளியன் மூன்றாவது சூத்திரவுரையின் ஈற்றிற் செப்பலோசையிற் சிறிது வேறுபட்டு வந்தநேரிசை, இன்னிசை வெண்பாக்களை ஒருபுடை ஒப்புமை நோக்கி வெண்டுறைப்பாற்படுத்து 'வழங்கினு மிழுக்காது" என்றார். அங்ஙனம் வரும் வெண்டுறைகட்கு உதாரணம் வருமாறு:—

**வெண்டுறை.**

" இதுவோ திருவா சிதுவோ மணங்கொல்லை
இதுவோ வெழிலாலி யென்னுமூ—ரிதுவோதான்
வெட்டுங் கலியன்வேல் வெட்டி நெடுமாலே
எட்டெழுத்தும் பறித்த விடம் "

இது நேரிசைவெண்பாவை யொப்பநின்றுசெப்பலோசையின் வேறுபட்டு வந்த வெண்டுறை.

**வெண்டுறை.**

" அம்ம் பவள்வரி நெடுங்க ணுய்வஞ்சிக்
கொம்ம் பவள்கொடி மருங்குல் கோங்கின்
அரும்ம் பவண்முலை யொக்குமே யொக்குங்
கரும்ம் பவள்வாயிற் சொல் "

இஃது இன்னிசைவெண்பாவை யொப்பநின்று செப்பலோசையில் வேறுபட்டு வந்த வெண்டுறை. இச்செய்யுள் **22**வது பக்கத்திற்காட்டப்பட்டிருக்கின்றது.

---

வஞ்சிப்பா எப்பொழுதுந் தனிச்சொல்லும், ஆசிரியச் சுரிதகமும் பெற்றே முடியுமெனவும், இருசீரடியானும், முச்சீரடியானுமே வருமெனவுங் கொள்க.

வ-று.

" மந்தாநிலம் வந்தசைப்ப
வெண்சாமரை நாண்மலர்மிசை

எனவாங்கு,

இனிதி னுறைதுங்கிய விறைவனை
மனமொழி மெய்களின் வணங்குது மகிழ்ந்தே "

இச்செய்யுண் முப்பதாவது பக்கத்திற் காட்டப்பட்டிருக்கின்றது. அங்குத் தனிச்சொல் பிரிக்கப்படாமல் விடப்பட்டது அச்சுப்பிழை. இது குறளடிவஞ்சிப்பா. இவ்வாறே சிந்தடி வஞ்சிப்பாவும் வருமாறு கண்டுகொள்க.

இந்நூலின் 139வது பக்கத்தில் வஞ்சிப்பாக்கள் இரண்டின், தனிச்சொல்லுஞ்சுரிதகமும்விடப்பட்டு ஆண்டுவேண்டியவஞ்சியடிகண் மாத்திரங் காட்டப்பட்டிருக்கின்றன; ஆதலால், அவற்றைக்கண்டு வஞ்சிப்பா தனிச்சொல்லுஞ்சுரிதகமுமின்றியும் வருவதலுண்டுபோலும் என்றுகொள்ளற்க; வஞ்சிப்பா அங்ஙனம் வருதலாம் என்னும் விதியின்மையின் அஃது அவ்விரண் டுறுப்புகளையும் பெற்றன்றி வருவதன்றெனவேகொள்க. இவ்வாறே மற்ற விடங்களினுங்கொள்க.

வஞ்சிப்பாவிற்கு இலக்கணம் முன்னே இந்நூலிற் கூறப்பட்டுள்ளன வாயினும், அவ்விலக்கணங்கண்முற்றும் ஒரேயிடத்திற் கூறப்படாமல் வெவ்வேறிடங்களிற் கூறப்பட்டுள்ளன; ஆகலின், அதனை நூதனமாய்க் கற்பார்க்குச் சந்தேகமுண்டாகாமைக்காக ஈண்டு அவ்விலக்கணங்கள் முற்றுஞ் சுருக்கமாக விதந்து கூறப்பட்டன.

செய்யுளிற்சீர்கள் அளவொத்து வருதற்கும், அடிகள் அளவொத்து வருதற்குமுள்ள வித்தியாசைத்தை யுணர்தல் வேண்டும்.

சீர்கள் அளவொத்து வருதலாவது ஒருசெய்யுளின் ஓரடியில் எவ்வெவ்விடங்களில் எவ்வெச்சீர்கள்வந்தனவோ அவ்வவ்விடங்களில் அவ்வச்சீர்களே மற்றைய அடிகளினும் வருதல். அதாவது ஓரடியில், மாச்சீர்வந்த இடத்தின் மற்றையவடிகளினு மாச்சீரே வருதல். இங்ஙனமே மற்றைச் சீர்களுக்கும் இவ்விதிகொள்க.

இதனாற்சீர்கள் ஒவ்வாமல் வரும் வகையையும் உய்த்துணர்ந்து கொள்க.

அடிகள் அளவொத்து வருதலாவது ஒருசெய்யுளில் ஓரடியில் எத்துணைச்சீர்கள்வந்தனவோ அத்துணைச்சீர்களே மற்றைய வடிகளினும் வருதல். அளவொவ்வாமல் வருதலாவது சில அடிகளிற் சிலசீர்கண்மிக்குங் குறைந்தும் வருதல்.

விருத்தங்களிற்சீர்கள் நான்கடியினும் அளவொத்து வரும்; சிறுபான்மைச் சிலவடிகளிற் சிலசீர்கள் ஒவ்வாதும் வரும்.

வ-று.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

" வடசொற்குந் தென்சொற்கும் வரம்பாகு நான்மறையு மற்றை [நூலும்
இடைசொற்ற பொருட்கெல்லா மெல்லையதாய் நல்லறத்துக் [கீறாய் வேறு
புடைசுற்றுந் துணையின்றிப் புகழ்பொதிந்த மெய்யேபோற் [பூத்து நின்ற
உடைசுற்றுந் தண்சார லோங்கியவேங் கடத்திற்சென் றுறு [திர் மாதோ "

இதனுள், நான்கடியினுங் காய்ச்சீர் வந்த இடங்களிற் காய்ச்சீர்களும், மாச்சீர்கள் வந்த இடங்களில் மாச்சீர்களுமாக அளவொத்து வந்தமைகாண்க.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

" கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரே லுங்கொடிய கொடுமை [நீங்கி
வீடுறுதி ராதலான் விலங்குதிரப் புறத்துணீர் மேவு தொண் [டை
நாடுறுதி ருற்றதனை நாடியதற் பின்னையவை களிநீர்ப் பொ [ன்னிச்
சேடுறுதண் புனற்றெய்வத் திருநதியி னிருகரையுஞ் சேர்திர் மாதோ "

இதனுள், இரண்டாமடியிற் காய்ச்சீர் வருதற்குரிய இரண்டிடங்களில் "ராதலான்" எனவும், "புறத்துணீர்" எனவும் விளச்சீர்கள் அளவொவ்வாமல் வந்தமைகாண்க.

### கலிவிருத்தம்.

" இம்பரி லாநறும் பூவொடு சாந்துகொண்
டெம்பெரு மானடிக் கெய்துகென் றேற்றி
வெம்பரி மானெடுந் தேர்மிகு தானைய
தம்பெரு மானடிச் சார்ந்தன ளன்றே "

இதனுள், இரண்டாமடியினும், நான்காமடியினும் விளச்சீர்கள் வரவேண்டிய இடங்களில் "றேற்றி" எனவும், "ளன்றே" எனவுமுறையே மாச்சீர்கள் அளவொவ்வாமல் வந்தமைகாண்க. விருத்தங்களிற்சீர்கள் அளவொத்து வருதலே சிறப்பெனக் கொள்க.

இனி, அடிகள் அளவொத்தும் ஒவ்வாதும் வருதற்கு செய்யுள்கள் வருமாறு:—

### நிலைமண்டில வாசிரியப்பா.

" வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே."

இந்நிலை மண்டில ஆசிரியப்பாவில் ஓரடியிற்போலவே எல்லா வடிகளினும் நான்கு சீர்கள் வந்தமையின் இச்செய்யுளின் அடிகள் அளவொத்து வந்தன எனக்கொள்க.

### இணைக்குறளாசிரியப்பா.

" நீரின் றண்மையுந் தீயின் வெம்மையுஞ்
சாரச் சார்ந்து
தீரத் தீருஞ்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே "

இவ்விணைக் குறளாசிரியப்பாவினுட்சில அடிகளின் சிலசீர்கண்மிக்குங்குறைந்தும் வந்தமையின் இச்செய்யுளின் அடிகள் அளவொவ்வாமல் வந்தன எனக்கொள்க.

வெண்பாவினுட் கனிச்சீர்வரின் அச்சீரின் இரண்டாம் அசை ஒற்றடுத்த குற்றெழுத்தாலாகிய நேரசையாகவேயிருக்கும், வெண்பாவினுள் வேற்றுத்தளை வருதலாகாது என்பது விதியாகலின் அவ்விரண்டாமசையிலுள்ள ஒற்றை நீக்கி அதிலுள்ள குறிலோடு மூன்றாமசையின் முதலெழுத்தைச் சேர்த்து நிரைநேராக அலகிட்டு அச்சீரை விளங்காய்ச் சீராகவே கொள்ளுதல்வேண்டும். அச்சீரின் முதலசை எவ்வாறு இருப்பினுமாம்.

வ—று.

**நேரிசை வெண்பா.**

"செந்தடையும் வண்டுறைதார்ச் செய்யாள் வளர்மார்பன்
கந்தடையும் வேழக் கடைத்தலைவாய்—வந்தடைந்த
பூவேந்தர் தங்கள்கிளை பொன்னகரி லீண்டிற்றே
கோவேந்தன் மாதைக் குறித்து."

இவ்வெண்பாவின் மூன்றாமடியிலுள்ள "தங்கள் கிளை" என்னும்கனிச்சீரைமேற்கூறியவாறு ஒற்றழித்து அலகிடின் விளங்காய்ச் சீராதல் காண்க.

இன்னும் இந்நூலிற் சொல்லப்படாத பரிபாடன் முதலிய செய்யுள் விகற்பங்களை யெல்லாம் தொல்காப்பியம், யாப்பருங்கல விருத்தி முதலியவற்றுட் கண்டுணர்ந்து கொள்க.

**அநுபந்த**

முற்றிற்று.

# நூற்சூத்திரக் காரிகையின் முதற்குறிப்பு.

## உறுப்பியல்.


| | பக்கம். | | பக்கம். |
|---|---|---|---|
| 1. கந்தமடிவில் | 1 | 12. குறளிருசீரடி | 31 |
| 2. ஏதனூர்கமழ் | 5 | 13. திரைத்தவிருது | 32 |
| 3. சுருக்கமில் | 6 | 14. வெள்ளைக் கிரண்டடி | 36 |
| 4. குறினெடிலாவி | 7 | 15. அறத்தாறிது | 38 |
| 5. குறிலே நெடிலே | 17 | 16. எழுவாயெழுத் தொன்றின் | 39 |
| 6. ஈரசைநாற்சீர் | 19 | 17. அந்தமுதலாத் | 42 |
| 7. தேமாபுளிமா | 21 | 18. மாவும்புண் | 43 |
| 8. தண்ணிழல் | 22 | 19. இருசீர்மிசை | 46 |
| 9. குன்றக்குறவன் | 24 | 20. மோனைவிகற்பம் | 48 |
| 10. தண்சீர்தன | 27 | | |
| 11. திருமழையுள்ளார் | 29 | | |


## செய்யுளியல்.


| | | | |
|---|---|---|---|
| 1. வெண்பாவகவல் | 51 | 9. தருக்கிய மூழிசை | 87 |
| 2. வளம்படவென்பது | 56 | 10. தரவொன்று தாழிசை | 92 |
| 3. ஈரடி வெண்பா | 59 | 11 அசையடி முன்ன | 100 |
| 4. ஒன்றும் பலவும் | 63 | 12, தரவேதர வீணை | 105 |
| 5. நேரிசையின்னிசை | 69 | 13. அடிவரையின்றி | 115 |
| 6. அந்தமில் பாதம் | 74 | 14. குறளடி நான்கின | 118 |
| 7. மூன்றடி யானு | 77 | 15. பண்பார் புறநிலை | 122 |
| 8. கடை யயற்பாத | 82 | | |


## ஒழிபியல்.


| | | | |
|---|---|---|---|
| 1. சீருந் தளையுஞ் | 128 | 5. அருகிக்கலியோ | 145 |
| 2. விட்டிசைத் தல்லான் | 134 | 6. வருக்க நெடிலினம் | 148 |
| 3. மாஞ்சீர் கலியுட் | 137 | 7. சுருங்கிற்று மூன்றடி | 159 |
| 4 இயற்றளை வெள்ளடி | 141 | 8. பொருளோ டடிமுத | 160 |
| | | 9. எழுத்துப் பதின்மூன் | 192 |


## உரைச்சூத்திரக் காரிகையின் முதற்குறிப்பு.


| | | | |
|---|---|---|---|
| உருவுகண் டேள்ளா | 63 | வாணெடுங் கண்பனி | 100 |
| வைகலும் வைக | 69 | நின்று விளங்கு | 105 |
| நற்கொற்ற வாயி | 71 | குடநிலைத் தண்செல்வ | 115 |
| கொண்டன் முழங்கின | 82 | கொய்தினை யாய்தினை | 118 |
| நேரசை யாகு | 86 | மடப்பிடி பேடை | 122 |
| கன்றுகுணில்வா | 92 | தென்ற லிடையுந் | 127 |

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 16 | 10 | அைாய்யர் | அரைய்யர் |
| 26 | 7 | பனிமொழி | பணிமொழி |
| 30 | 15 | சிலைவிலங்ரு | சிலைவிலங்கு |
| ,, | 26 | எனவாங்கினிதி | எனவாங், கினிதி |
| 31 | 1 | மயக்மற | மயக்கமற |
| ,, | 24 | அது | அடி |
| 32 | 29 | கரிக்கை வான் | கரிக்கைக் கவான் |
| 33 | 25 | றொகையாய் | றொகையாய |
| 48 | 22 | தாட்டா மரை | தாட்டா அ மரை |
| 51 | 17 | சீர்சாலகவல் சென்றோ ங்கு துள்ளல் | சீர்சா லகவல்சென் றோ ங்குதுள்ளல் |
| 57 | ,, | செஎய்க் குன்றம் | சேஎய்க் குன்றம் |
| 65 | 21 | சான்றோ ரஃதாற்றார் | சான்றோரஃ தாற்றார் |
| 127 | 15 | சூத்திரங்களின் | செய்யுட்களின் |
| 134 | 31 | செயிர்தீர் | செயிர்தீர்ந்த |
| 174 | 29 | நிலலமாமாறுணர்க | நிலமாமாறுணர்க |
| 191 | 2 | தாஅநாட்டி | தாஅனாட்டி |
| 207 | 23 | கண்டுணர்ர்து | கண்டுணர்ந்து |

# சென்னை திராவிட புத்தக டிபோ

| பிழையறப் பதிப்பித்த புத்தகங்கள். | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| சுந்தரி மனோகரன் (நாவல்.) | | 0 | 12 | 0 |
| தாயுமானவர் பாடல் (மூலம்.) | | 0 | 12 | 0 |
| பட்டினத்துப்பிள்ளையார் பாடல். | | 0 | 2 | 0 |
| சிவபோகசாரம் & சிவஞான விளக்கம். | | 0 | 2 | 0 |
| நாஞ்சீவவாதக் கட்டளை. | | 0 | 1 | 6 |
| சுகர் கைவல்லியம். | | 0 | 2 | 0 |
| வேதாந்த போதினி. | | 0 | 8 | 0 |
| வைராக்கிய சதகம். | | 0 | 2 | 0 |
| பஞ்சதந்திரம். | | 0 | 4 | 0 |
| ஜன்மாந்திரம். | | 0 | 2 | 0 |
| திருக்குறள். | | 0 | 4 | 0 |
| பத்திரகிரியார் புலம்பல். | | 0 | 1 | 0 |
| மகாராஜா துறவு. | | 0 | 6 | 0 |
| வள்ளலார் சாஸ்திரம். (20) | Calico Bound | 1 | 8 | 0 |
| நைடத மூலம். | ,, | 0 | 12 | 0 |
| நாலாயிர திவ்விய பிரபந்தம். | ,, | 3 | 0 | 0 |
| மூவர் தேவாரம் (பண்முறை.) | ,, | 3 | 0 | 0 |
| யாப்பருங்கலக் காரிகை. | ,, | 1 | 0 | 0 |
| வாசுதேவமனனம். | ,, | 1 | 0 | 0 |

இவை வேண்டியோர் கீழ்க்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்க.

மானேஜர்,

திராவிட புத்தக டிபோ,

நெ. 16, வேளாளர் வீதி,

புரசைவாக்கம், சென்னை.

N. B.—A Commission of 20 per cent. is allowed on orders for 12 books at a time.